padippakam

# தூண்டில்

பங்குனி இதழ்

1987ம் ஆண்டு



படிப்பகம்



# ஜனனம்

1987 பங்குனி இதழ்

## உள்ளே

பக்கம்


ஜனனத்தின் மரணத்தில் ............ 3

எம் வாழ்வில் சிந்தனை ............ 4

கலைந்த காவியங்கள் ............ 5

மகளிர் மஞ்சரி ............ 17

ச.தே.ம.ச உறுப்பினர்களின் ............ 18

பிரசவ காலத்தில் ............ 26

எயிட்ஸ் நோய் பற்றிய ............ 31

அன்பு நண்பர்களே ............ 34

ஒன்று + ஒன்று = மூன்று ............ 36

சிறுவர் குரல் ............ 41

உண்மைப் புரட்சி ............ 45

உறவின் நினைவில் ............ 50

அறிவியல் தங்கம் ............ 61

ரத்தங்கள் ............ 63

கண்ணீர்ப் பறவை ............ 66

சங்கீத சமாசாரம் ............ 71

சிறார்களின் உரிமைகளும் ............ 72

R. நாகலிங்கம் புத்தாண்டு ............ 78

padippakam

# ஜனனத்தின் மரணத்தில் புதியபாலம் உதயம்

அன்பு வாசகர்கட்கு! ஜனனம் ஆசிரியர் குழுவின் முதற்கண் வணக்கம். சென்ற இதழ்களில் எமக்கும் உங்களுக்கும் இடையில் ஒரு இறுக்கமான இதமான தொடர்பை ஜனனம் என்னும் பாலம் மூலமாக ஏற்படுத்தியுள்ளோம். காரசாரமான விமர்சனங்கள் எம்மை உற்சாகம் ஏற்படச் செய்தது வாழ்த்துக்கள் மகிழ்ச்சியைக் கொடுத்தது. என்றாலும் எமக்கிடையில் உள்ள இப்பாலத்தில் சிறு வெடிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதுவே இம்மாத இதழின் கால தாமதத்திற்கும் காரணம். அதைப்பற்றி விமர்சிப்பது தற்சமயம் எமக்கு அநாவசியமாகவே தோன்றுகிறது.

என்றாலும் இவ்வெடிப்புகள் சீரமைக்கப்படும் பட்சத்தில் மீண்டும் ஜனனம் மூலமாக உங்களைச் சந்திக்கலாம். முடியாமலும் போகலாம்.

தொடர் நவீனங்கள் மற்றும் தொடர் அம்சங்களைத் தருவதற்கும் எமக்கிடையில் உள்ள தொடர்பு அஸ்தமிக்காமல் இருப்பதற்கும் புதியபாலம் ஒன்றின் மூலம் மாதம் மாதம் உங்களை சந்திப்போம். புதியபாலம் சிறியதாக இருந்தாலும் எமக்கிடையில் இது பெரிய தொடர்பு எனக் கருதுகிறோம்...

ஜனனம் ஆசிரியர் குழு



படிப்பகம்

– (வ.ஐ.ச.ஜெயபாலனின் 'சூரியனோடு பேசுதல்' என்கிற தொகுதியிலிருந்து)



ஏன் எம் வாழ்வில் இத்தனை
சுமைகள்?
ஏன் எம் பாதையில் இத்தனை
இருட்டு?
..............
..............
குடைப்பாடு
தலைகுனிந்த அகதிகளாய்
ஏன் எங்கரத்தில் இவ்விதம்
எழுந்து?





ஏன் எம் நெஞ்சில் இவ்விதம்
நெருப்பு?




பூவார் வசந்த
மரங்களின் மறைப்பில்
காதற் பெண்களின் தாவணி
ஒளித்து
அயினி மலர்களின் மொட்டைச்
சுவைக்கும்



இளம்பருவத்தில்
"இடுகாடு மண்ணின் சுவை'
என்று எமது
இளமைக்கு அறிவித்தவன்
யாரோ?

— 4 —

# கடந்தகாலங்கள் கரை சேர்கின்றன



• கொடிகாமவூர் • கணபதி சுதாஜி

நீண்டு வளர்ந்து வானத்தைத் தொடவா என வியந்து நிற்கும் பெரிய விருட்சங்கள், அதில் கண்ணைப் பறிக்க- வென்றே கடன் பெற்றுக் காய்த்ததுபோல் பரந்து கிடக்- கும் உருண்டு சிவந்த கனிகள், மேலும் அதற்கு மெரு- கூட்ட அதில் அமர்ந்திருந்த வெண்ணிறப் பட்சிகள், சாலை ஓரம் பரந்துகிடந்த பசுமை, அதில் பொற்குவியல்- களா! எனப் பிரமிக்கும் வண்ணம் இடங்களில் கொண்- டிருந்த தாய்நாட்டுச் செல்வம், நீலக்கடலின் அலையடித்து அந்தரத்தில் அமர்ந்ததுபோல் காட்சியளித்த நீலவானம், அலங்கரித்துச் செல்கின்ற இருள் உலகிற்கு ஒளியூட்டி

padippakam

ஒளிகொடுக்கத் துடித்துக்கொண்டிருந்த பூரணசந்திரன், அந்தச் சந்திரனை அலங்கரிக்க ஆங்காங்கே பூட்டப்பட்ட மின் விளக்குகள்போல் தெறித்துக்கிடந்து மின்னிக்கொண்டிருந்த நட்சத்திரங்கள், இயற்கையின் அழகு அழகேதான். இயற்கை கொடுத்த அழகின் பிடியில் சிக்கி அதிலேயே மூழ்கிப்போன நந்தன் திடீரென இயற்கையின் வனப்பைக் காணத் திடுக்கிட்டான். கணநேரத்தில் நிதானத்திற்கு வந்தவன் புகையிரதம் மலைக்குகை ஒன்றினூடாகப் பயணம் செய்துகொண்டிருப்பதை உணர்ந்து கையிலிருந்த புத்தகத்தைப் புரட்டலானான்.

புதுமையான அனுபவங்களை ரசித்துப்பார்க்க வேண்டும் என்று தாகம் கொண்டிருக்கின்ற எந்தவொரு கன்னியின் உள்ளமும் சமுதாயத்தின் விதிக்கப்படுகின்ற கௌரவம் என்ற போர்வையால் அடக்கப்படுகின்ற எந்தவொரு கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்கிக் கொள்ள முடியாது. ஆவல் மிகுந்த உணர்ச்சிகள் அனுபவங்களை ரசித்துப் பார்க்கத் துடிக்கின்றன. பதட்டம் நிறைந்த உள்ளங்கள் அனுபவங்களிற்காகத் தத்தளிக்கின்றன. நிதானமான சில இதயங்கள் உண்மைக்காகப் போராடுகின்றன. நிதானமாக வாழவேண்டும் என்ற பெரும்பான்மையான பலவீனங்கள் "மனதிற்குள் ஆயிரம் இருக்கும் அதை மூட ஒரு சிறிய திரை" சமுதாயத்திற்காகவும், கௌரவத்திற்காகவும் வேஷம் போடுகின்றன. "வாழ்க்கை வாழ்வதற்கே" ஆனால் வாழ்வது எப்படி ? கேள்வியைப்பற்றிச் சிந்தித்து பதில் கண்டு வாழவேண்டிய மனிதன் கேள்விக்கு இடம்கொடுத்து வாழ்க்கை நடாத்த முற்படுகின்றான். உலகம் நிறைவானது. அதில் உள்ள இயற்கைகள் யாவும் அழகானவை. ஒவ்வொன்றும் மனித அனுபவிப்பிற்காகவே படைக்கப்பட்டவை போலும். பணத்தில் மனிதன் சகலவற்றையும் தனக்குள் அடக்கி, அதிலிருந்துதான் என்னவென்னவெல்லாம் பெறலாம், அவற்றால் எப்படி சந்தோசத்தை அனுபவிக்கலாம், எப்படி அவற்றின்மூலம் திருப்தியாக வாழலாம் என்றெல்லாம் தன்னையும் மீறி ஆழமாக உலகத்திற்குள் பிரவேசிக்கின்றான். கவர்ச்சியைக் காட்டி மயக்குகின்ற அழியப்போகும் மாயப்பொருட்களை ஆனந்தத்தின் எல்லைக்கே கொண்டு செல்லும் அனுபவங்களென்று அதற்காகத்-


படிப்பகம்

padippakam

தன்னை விட்டுக்கொடுக்கின்றான். மனிதன். பித்தனாட-வைக்கும் போதைக்காக பித்தம்பிடித்த மனிதன் தன்-னையும் அழித்துப் பொருட்களையும் அழித்து நிலை குலைகின்-றான். ஒவ்வொன்றிற்காகவும் தன்னையர்ப்பணித்து அதி-லிருந்து சந்தோசத்தையோ அல்லது அனுபவத்தையோ பெறத்துடிக்கும் மனிதன் எதிலும் திருப்தி காணாது தொடர்ந்து ஒரு வட்டத்திற்குள் உழன்றுகொண்-டிருக்கின்றான் ஏன்? உலக ஜீவராசிகள் யாவற்-றையும் விட மேலாகக் கொண்டிருக்கும் ஆறாம் அறி-வான பகுத்தறிவின் விளைவா? அல்லது அறியாமை என்கின்ற இருளா? இதற்கு விடை காணும் வரை நிச்சயமாக மனிதனால் சந்தோசமாகத் தொடர்ந்து வாழமுடியாது என்பது எனது சிறிய கருத்து என்று "சிந்தனைக்கு சில விருந்துகள்" என்ற தலைப்பின் கீழ் எழு-திய கதாசிரியை தனது சிறுகதையை முடித்திருந்தாள். "சார், கதைப்புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த பாதியிலேயே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களே. உங்கள் சிந்தனை முடிகின்ற வரையில் உங்கள் புத்-தகத்தை நான் படிக்கலாமா?" என்று எதிரே உட்-கார்ந்திருந்த வத்சலா சந்தர்ப்பத்தைச் சாதகமாகப்-பயன்படுத்திக் கெட்டித்தனமாகக் கதைப்புத்தகத்தைத் தட்டிக்கொண்டாள். பருவ வயதின் விளிம்பில் நின்று கொண்டிருந்த வத்சலாவிற்கு "இளமையின் நினை-வுகள்" என்ற தலைப்பில் நன்றாகப் பிடித்துவிட்டது போலும்.

பள்ளிப்பருவத்தில் துள்ளித்திரியும் சிட்டுக்களாகப் பறந்துகொண்டிருந்த எனக்கும் பருவ வயதில் பிடிக்கும் கொடிய வியாதியான காதல் விட்டுவைக்கவில்லை. அன்பு என்கின்ற மூன்றெழுத்தின் ஆழம், அகலம், பருமன் தெரியாத, விபரம் புரியாத இளமைக்காலம் காதல் என்னும் போர்வையில் சிறகடித்தேன். உயர உயரப் பறந்துகொண்டிருந்தேன். என் பள்ளியில் தொட்ட காதல் படலைவரை வந்து திரும-ணத்தில் ஒப்பேறும் என்ற ஆசையாக நம்பிக்கையில் என் உடல், பொருள், ஆவி அத்தனையையும் என் இதயம் நிறைந்த ஆனந்திற்கு அர்ப்பணிக்கத் தவறவில்லை. அடிக்கடி சந்திக்கும் எங்கள் தொடர்பு காதலின் வலிமையை அதிகரிக்கச் செய்தது. உருண்டு அகன்ற அவர் விழிகள், அரும்புமீசை, இனித்திருக்கும் போது

padippakam

பின்னே வழியும் அவர் கேசம், அதை ஒரு கையால் அடிக்கடி ஒதுக்கும் இனிய அழகு. அவரைப்பார்த்து ரசிப்பதிலேயே என் உள்ளம் திருப்தியுற்றது. நான் அவர் அழகைப் பார்த்து ரசித்தேன். ஆனால் அவரோ என்னையே ரசிக்க முற்பட்டார். நீயின்றி நானில்லை, நீயில்லாத உலகத்தில் அமைதியே இல்லை, உன்னைவிட்டால் இவ்வுலகில் எனக்கு எதுவுமேயில்லை என்று அவர் எழுதிய திருவசனங்கள் என் இதயத்தில் எப்பொழுதுமே ஒலித்துக்கொண்டிருக்கும். எனக்காகவே அன்பைக் கொட்டி வாழ்ந்து கொண்டிருக்கும் தூய்மையான காதல் நெஞ்சத்திற்கு என்னைக் கொடுக்காமல் நானே வைத்திருப்பதில் என்னவுண்டு, இதனையறிந்து என்னையே அவரிற்கு விட்டுவிட்டேன்.

கடற்கரையோரங்கள், நதிக்கரைகள், பூங்காவனங்கள், மறைவான இடங்கள் எங்கள் காதல் செய்திகளை சீரணிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தன. காலம் உருண்டோடிக் கொண்டிருந்தது. பள்ளிப்படிப்பு முடிந்து வீட்டுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டாள் மஞ்சு. சிறகடித்துப் பறந்த சிறகுகள் இப்போது ஈரம் பிடித்து விட்டதுபோலும். அவளால் முன்புபோல இப்போது பறக்க முடியவில்லை. காதலின் வலிமை இறைவனுடையதுபோல் அவளிற்கு ஓர் பிரமை. அது பிரமைதானா? இன்று காலை பன்னிரண்டுமணியாகியும் மஞ்சு கட்டிலைவிட்டு எழுந்திருக்கவில்லை. தலையணை கண்ணீரால் நீராட்டப்பட்டு இருந்தது. வீட்டில் கடமைகள் நிறைவேறாமையைக் கண்டு தாயார் மஞ்சுவைத் தேடி அறைக்குள் நுழைந்தாள். மஞ்சு தன்னை ஒருவாறு விளங்கமாக சரிசெய்துகொண்டு எழுந்தபோது அவளில் தொங்கியிருந்து கீழே விழுந்தது அந்த அழைப்பிதழ். அது யாருடையதுமல்ல நமது மஞ்சுவிற்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவருடையதுதான். ஆம். அது ஆனந்திற்கும் மாலதிக்கும் நடக்க இருக்கும் திருமணத்திற்கான அச்சடிக்கப்பட்டிருந்தது.

காதல் என்பது புனிதமானது அது வெறும் ஆசாபாச உணர்ச்சிகளிற்காக விபரம் புரியாத சிறுவயதில் கண்டவுடன் கோலம் கொண்டு

படிப்பகம்

padippakam

அன்பு என்பதற்கு விளக்கம் அறியாது ஆசைக்காக வாழும் இச்சைக் காதல்தான் என் வாழ்க்கையில் கண்டது. உண்மையான காதல் என்பது இரண்டு கருணை வடிவான உள்ளங்களின் ஆழமான உள்ளப்-பரிமாற்றம். இது உணர்ச்சி மயமானதல்ல. உள்ளம் நிறைந்த அன்புமயமானது. இன்று உண்மையான கருத்து நிறைந்த கருணைவடிவான காதல் ஆனந்த் என் மேல் கொண்டிருந்தால், இன்று மாலதியைத் திரும-ணம் செய்து போயிருக்கமாட்டான். உடையை மாற்-றுவதைப்போல் உள்ளங்களை மாற்ற உண்மையான இதயத்திற்கு ஒருபோதும் முடியாது. என்னுடைய வாழ்க்கை கல்யாணமே இல்லாத ஒரு தனிவாழ்க்கை-யாக இருந்தாலும் அந்த இளமைகளின் நினைவுகளோடு என்றுமே நான் தனிமையில் வாழ்வேன். கண்ணீர் முத்துக்களுடன் கதையை முடித்திருந்தாள் கதாசிரியை. கையிலிருந்து விழுந்த புத்தகத்தை எடுப்பதற்காக வத்சலா குனிந்தாள். புத்தகத்தின் முதல் அட்டையை அலங்கரித்துக் கொண்டிருந்த மஞ்சுவின் படம் தன்-னைப்பார்த்துத் திகைப்பதைப்போல் பிரமையடைந்தாள் வத்சலா.

"மஞ்சு, உன் உடம்பைப்போலவேதான் நானும் இருக்-கின்றேன் கூடவே உன் வாழ்க்கையைப்போலவே என் வாழ்க்கையும். என்னைப்பார்த்து நீ திகைப்பதில் ஆச்ச-ரியமில்லை. இளமையின் நினைவுகளுடன் தனிமையில் வாழ-லாம் என்று நீ உறுதிகூறுகின்றாய். ஆனால் இளமையின் கொடுமையில் தத்தளிக்கின்ற என்னால் எந்த முடிவுமே சொல்லமுடியவில்லை. உன் வாழ்க்கையைப் பார்த்துத்தான் கதாசிரியை கதைகொடுக்கிறாளோ? அல்லது என் வாழ்க்-கையைக் கற்பனை செய்துதான் கதை எழுதினாளோ? எது எப்படி இருக்கட்டும் என் வாழ்க்கையில் நான் காண்பது கண்ணீர்தான்.

தன்னையும் மறந்து தனிமையிலே பேசிக்-கொண்டிருக்கும் வத்சலாவை நந்தன் பரிதாபமாகப்-பார்த்துக் கொண்டிருந்தான். நீண்ட நேரத்திற்குப் பின் சுயநினைவிற்கு வந்த வத்சலா பரிதாபமாக தன்னை-யே உற்றுநோக்கிக் கொண்டிருந்த நந்தனைக் கண்ட-தும் திடுக்கிட்டாள். பின் தன்னை ஒருவாறு சரிசெய்த-வளாக "தயவுசெய்து என்னை மன்னித்துக்கொள்ளுங்-கள்." என்று கீழே கிடந்த புத்தகத்தை எடுத்து

 படிப்பகம்



# வீடியோ

புதிய பழைய திரைப்படங்கள், பிரபல பின்னணிப் பாடகர்கள், இசை அமைப்பாளர்களின் இசை விருந்துகள் இவற்றின் ஒளிநிறைவான மூலப்பிரதிகள் உடனுக்குடன் நாளாந்த வாராந்தக் கணக்கில் பெறுவதற்கும் இவற்றை சிறந்த முறையில் பதிவு செய்வதற்கும்....

**RAJAMANO**

NATHRATHER STR. 97
5600 WUPPERTAL-11

●தொலைபேசி இல.
0202-783318

# புதியபாலம்

இம்மாத இதழுடன் நிறுத்தப்படும் ஜனனத்தில் வெளிவந்த தொடர்நவீனங்களையும் தொடர் அங்கங்களையும் பூரணப்படுத்தவும் உங்களுக்கும் எங்களுக்கும் இடையில் தொடர்புகள் அற்றுப் போகாமல் இருக்கவும் வெளிவருகிறது. புதியபாலம் என்னும் மாத இதழ்.

padippakam

படித்து அவர் கையில் கொடுத்தாள்.
"பரவாயில்லை பரவாயில்லை" என்று நந்தன் ஏற்கனவே அந்தப் புத்தகத்தைப் படித்திருந்ததால் வத்சலாவைப் புரிந்துகொள்வதற்கு அதிக நேரம் எடுக்கவில்லை. சிறிதுநேர மௌனத்தின் பின் "என் பெயர் நந்தன் உங்கள் பெயர் என்னவென்று நான் தெரிந்துகொள்ளலாமா?" என்று மௌனத்தைக் கலைத்தான் நந்தன்.
"ஓ - நிச்சயமாக என்பெயர் வத்சலா" என்றாள். பெயரைத் தெரிந்துகொண்ட நந்தன், "உங்கள் கடந்தகால வாழ்க்கை மிகவும் சோகம்போலே" எனக் கதை கொடுத்தான்.
"கடந்தகாலம் மட்டும்தான் சோகம் இல்லை. நிகழ்காலமும் அப்படியேதான். சோகத்திலே வாழ்ந்து மனம் மரத்துப்போய்விட்டது. இப்போ இந்தச் சோகத்திலேதான் சந்தோசத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். என்றாள் வத்சலா.
"உங்கள் வாழ்க்கை சோகத்தைக் கண்டு மரத்துவிட்டது என்று கூறினீர்கள். என் வாழ்க்கையில் சோதனைகளையும், வேதனைகளையும், தோல்விகளையும் சந்தித்த எனக்கு விரக்தியான வாழ்க்கை சோகமாகவே மாறிவிட்டது. கதைத்துக் கொண்டிருந்ததில் இடம் வந்ததே தெரியவில்லை. நான் இறங்குவதற்கு இன்னும் இரண்டு தரிப்பு நிலையங்கள்தான் இருக்கிறது" என்றான் நந்தன்.
"அப்படியென்றால் உங்கள் ஊர் யாழ்ப்பாணமா? மிகவும் நெருக்கமாக வந்துவிட்டோம். சோகத்திலே ஒத்திருந்த ஒற்றுமை ஒரே ஊரில் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றது பார்த்தீர்களா? என்றாள் சிரித்தபடியே வத்சலா.
"இது என் சொந்த ஊரல்ல. இடையில் சந்தித்த ஊர்தான். என்னை இடையிலேயே கைவிட்டுவிட்டது." என்று கண்கலங்கியபடி கூறினான் நந்தன்.
"என்ன சொல்கிறீர்கள், கண்வேறு கலங்கியிருக்கிறது. உங்களிற்கு ஆட்சேபனையில்லாவிட்டால் உங்கள் கடந்த காலத்தை என்னிடத்தில் பகிர்ந்துகொள்ளுங்கள், உங்களிற்கும் ஆறுதலாக இருக்கும்." என்றாள் வத்சலா ஏதோவொரு உரிமையில்.
"சில வருடங்களிற்கு முன்பு ஆறுவருடகாலம் இங்கே மங்களமாக வாழ்ந்தேன். அந்த பசுமையான


படிப்பகம்

padippakam

நினைவுகளைத் தாலாட்டுவதற்காக ஒவ்வொரு வருடமும் பத்து நாட்களாவது இங்கு தங்கியிருப்பதற்கு வருவதுண்டு. இங்கு தங்குகின்ற அந்த நாட்கள்தான் உயிருடன் வாழும் நாட்கள். அந்த இனிமையான நாட்களில் என்னையே மறந்திருப்பேன். ஆறுவருடங்களாக நடந்த கடந்த கால அனுபவங்களை அணுஅணுவாக ரசித்து ரசித்து நினைவுகளோடு ஒன்றியிருப்பேன்." என்று தொடர்ந்து கொண்டிருந்த நந்தனின் பேச்சிற்கு இடைக்கிடை பேச்சுக் கொடுத்தாள் வத்சலா.

"நம்ம இடம் வந்தாயிற்று, இறங்குங்கள்" என்றவள் "உங்களையும் மீறி ஏதோ சொல்லுகிறீர்கள். வாருங்கள் ஆலமர நிழலிலே இருந்து கதைப்போம்" என்று அழைத்துச் சென்றாள்.

"பதினாறு வருடங்களிற்கு முன் சமூக சீர்திருத்த உத்தியோகத்தராக இத்தீவிற்கு வந்து சேர்ந்தேன். அப்போது என் வயது பதினெட்டு. வீட்டில் ஒரேபிள்ளை. அப்பா அம்மாவை விட்டுப்பிரிந்து வந்த முதல் அனுபவம். முன்பின் தெரியாத ஓர் வீட்டில் இங்கு வாடகைக்குத் தங்கியிருந்தேன். வேலைகிடைத்த முதல் அனுபவம், பெற்றவர்களின் அரவணைப்பில்லாத கொடுமை, பழக்கமில்லாத மக்களிடையே பழக வேண்டிய சூழ்நிலை. இவ்வாறான பல பிரச்சனைகளிற்கு மத்தியில் தங்கியிருந்த எனக்கு நானிருந்த வீட்டில் நடந்த தெய்வ ஆராதனைக் கூட்டம் ஒன்றே என்னை ஆறுதல்படுத்திச் சந்தோசப்படுத்திக் கொண்டிருந்தது." தொடர்ந்தான்.

"நான் சைவசமயத்தில் பிறந்தவன். சின்னவயதிலிருந்தே என் அம்மா அப்பாவோடு கோவிலிற்குப் போவேன். இறைவன் மீது ஒரு சிறிய நம்பிக்கை. அவ்வளவுதான் எனக்கும் கடவுளிற்கும் உள்ள தொடர்பு. ஆனால் இங்கு வந்த பின்புதான் எனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை அளவிற்கு அதிகமாக அறிந்தேன். நாம் இந்த உலகத்தில் பிறந்திருப்பதே இறைவனை அனுபவிப்பதற்காகத்தான். நாம் இறைவனைத் தேடிக் கண்டுபிடித்து அவனை அனுபவிக்கும் பேரானந்த வாழ்க்கையே நமது பிறவிப்பயன் அதைவிட மேலானது. இறைவன் எங்கேயுமேயில்லை. எமது உடம்பினுள்ளேயே இருக்கின்றான். எமது உயிர்தான் இறைவன் இந்த உயிரை ஒளியாக, நாதமாக, அதிர்வாக, அமிர்தமாக உணர்ந்து அனுபவிப்பதே உண்மையான பேரானந்த வாழ்வு."


படிப்பகம்

padippakam

"என்ன சொல்லுகிறீர்கள் என்று ஆச்சரியத்துடன் கேட்-
டாள்" வத்சலா.

"ஆமா வத்சலா. நான்கூட ஆரம்பத்தில் இதை நம்ப-
வில்லை. ஏற்றுக்கொள்ளவும் இல்லை. இவை யாவும்
வெறும் கற்பனைப் புலம்பல்கள் என்றே நினைத்தேன்.
இதையடியோடு வெறுத்தேன். இதை விட்டு விலகுவதற்-
காக வீட்டையே மாற்றுவோம் என்ற முடிவுக்கு வந்-
தேன். எவ்வளவோ முயன்றேன். ஆனால் என்னால் விடு-
மாறமுடியவில்லை. கூட்டத்திற்கு போகாது விடுவோம்
என்றால் அதுகூட என்னால் முடியாது போய்விட்டது.
பதிலாக என்னையும் மீறி எனக்கு அதில் ஆர்வம் ஏற்பட்-
டது. அந்த ஆர்வமே அளவுகடந்த நம்பிக்கையாக
மாறியது. அதன் பின் அந்தக் கூட்டத்திற்கு செல்லா-
மலோ அந்த அனுபவமில்லாமலோ என்னால் இருக்க
முடியவில்லை. தினமும் கூட்டத்தில் பங்குபெறும் எனக்கு
அங்கு அதிகமாகப் பிரசங்கம் செய்யும் அருந்ததியை-
யும் பார்க்காமல் இருக்க முடியவில்லை. இந்தப் பார்வை
காதலாக மாறமுன்பே திருமணத்தில் ஈடேறியது."என்று
சொல்லிக்கொண்டிருந்த நந்தன் அப்படியே கற்ப-
னையில் இலயித்துவிட்டான்.

"நந்தன் எங்கே இருக்கின்றீர்கள். கற்பனையில் பறக்-
கின்றீர்களா? கேட்பதற்கு ஆவலாக இருக்கிறது.
தயவுசெய்து மேலே சொல்லுங்கள்" என்றாள் வத்சலா.
நிதானத்திற்கு வந்த நந்தன் தொடர்ந்தான்.

"உலக லௌகீக வாழ்க்கையை ஒருகையாலும், ஆத்-
மீக வாழ்க்கையை மறுகையாலும் பற்றிவாழும் மனி-
தன் உலகத்தில் பூரண சந்தோசத்தோடும் திருப்-
தியுடனும் வாழ்வான் என்று கூறிய பக்திமான் ஒரு-
வரின் கொள்கையை ஆதரிப்பதுபோல் நாம் எமது
வாழ்க்கையில் ஒருபகுதி பக்திநிறைந்த ஆத்மீக-
மாகவும் மறுபகுதி அடக்கமான உலக வாழ்க்கை-
யாகவும் மிகவும் சந்தோசமாகக் குடும்பம் நடத்தி
வந்தோம். எங்கள் குடும்ப வாழ்க்கையைப் பார்த்-
து வியந்தார்கள் ஊரவர்கள் பெருமைப்பட்டார்கள்.
நாளும் பொழுதும் விரைவாக ஓடிக்கொண்டிருந்தது.
அருந்ததி என்னை அப்பாவாக்கிப் பார்க்க முற்பட்டாள்.
பிரசவத்திற்காக அவளை இரத்தவூர் மருத்துவமனையில்
விட்டிருந்தோம். ஆண்பிள்ளையோ, பெண்பிள்ளையோ
நமக்கொரு அன்பான குழந்தை சுகமாகப் பிறக்க-


படிப்பகம்

padippakam

வேண்டும். என்று இறைவனை வேண்டிக்கொண்டிருந்தோம். பிரசவத்திற்குக் குறிக்கப்பட்ட திகதி கடந்தும் பிள்ளை பிறக்காதிருந்தது. அருந்ததி வேதனையால் துடித்துக்கொண்டிருந்தாள். வைத்தியர் அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்றார். இதுதான் முதற்பிள்ளை. அறுவைச் சிகிச்சைவேறு எனக்கென்றால் ஒரே யோசனையாக இருந்தது. இவ்வளவுகாலமும் சுதந்திரமான சிட்டுக்களாகப் பறந்த நம்மை இறைவன் சோதிக்க ஆரம்பித்துவிட்டாரா? எனக்குக் காலும் ஓடவில்லை, கையும் ஓடவில்லை. ஆனால் வைத்தியத்திற்குமட்டும் காலும் கையும் சுறுசுறுப்பாக இயங்கியது. வைத்தியர் தனது கடமையைச் செய்தார். சிகிச்சை நடைபெற்றது. தன் ஞாபகார்த்தமாகக் குழந்தையை என்னிடம் ஒப்படைத்துவிட்டு அருந்ததி இரண்டு கைகளாலும் இறைவனை ஆராதித்துக்கொண்டாள்." சொல்லிக்கொண்டிருந்த நந்தன் விக்கிவிக்கி அழுதான். வத்சலா எவ்வளவோ சமாதானம் சொல்லிப்பார்த்தாள். நந்தனை அமைதிப்படுத்த முடியவில்லை. அழுது அழுது சாந்தியைப் பெற்றவன் தொடர்ந்தான்.

"கவலை என்றாலே என்னவென்று தெரியாத நான் வேதனைகளையும் சோதனைகளையும் ஒருங்கே அனுபவிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டேன். விரக்தியான எனது வாழ்க்கையில் அருந்ததியின்றி வாழமுடியாதிருந்தது. வாழ்க்கையே அஸ்தமித்துவிட்டது. தன் ஞாபகார்த்தமாக எனக்கு விட்டுச் சென்ற குழந்தையைக் கூட காப்பாற்றமுடியாத பாவியாகிவிட்டேன். என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான். அவனே தந்தான் அவனே எடுத்துக் கொண்டான். வாழவும் முடியாமல் இறைவனை நினைக்கவும் முடியாமல் விரக்தியின் விளிம்பில் மரணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அருந்ததியோடு சேர்ந்து வாழமுடியாமல் விட்டாலும் அவளோடு வாழ்ந்த அந்த இனிய கால நினைவுகளை என்னால் சாகடிக்க முடியவில்லை. அந்த நினைவுகளுக்காக உயிருடன் இருக்க விரும்பினேன். இப்பொழுது கூட அவளின் உறவை அனுபவிப்பதற்காகத்தான் இங்கே வந்தேன்." என்று தொடர்ந்து கொண்டிருந்தான் நந்தன். அவனுடைய சோகமான வாழ்க்கைக் கதைகளைக் கேட்டு அதைச் சகிக்க முடியாதவளாக விக்கிவிக்கி அழுதுகொண்டு "நந்தன்"

padippakam

என்று உரக்கக் கத்தியவள் அவன் கையை இறுகப் பற்றிக் கொண்டு அவன் தோளில் சாய்ந்தாள். கண்களில் இருந்து நீர் ஆறாக வடிந்துகொண்டிருந்தது. அவள் நெஞ்சில் சாய்ந்தபோது இறந்துபோன தனது அருந்ததிதான் தன்மேல் சாய்ந்திருக்கின்றாள் என்ற பிரமை நந்தனுக்கு.

"அருந்ததி நீ ஏன் இப்போது அழுகிறாய் நான்தான் பக்கத்தில் இருக்கின்றேனே" என்று அவள் கண்ணீரைத் துடைத்தவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவள் உணர்ச்சிவசப்பட்டாள். சோகத்திலே ஒரு இனிமையை அனுபவித்தாள். அதிலிருந்து விடுபடத் துடித்தாள். விரகவேதனை விடவில்லை. நந்தன் தன்னை மறந்தான். தன்னையே இழந்தான். கணநேரமயக்கம் இருவருக்கும். மயக்கம் நீங்கி கண் விழித்த நந்தன் ஆடையற்ற நிலையிலே தானும் வத்சலாவும் இறுக அணைத்தபடி இருப்பதை உணர்ந்தான், திகைத்தான். துள்ளியெழுந்தான். அங்கும் இங்கும் தேடினான். "அருந்ததி" என்று உரக்கக் கத்தினான். தன் தலையைப் போட்டுப் பிசைந்தான். உட்கார்ந்தபடியே மௌனமாக அழுதுகொண்டிருந்த வத்சலாவைப் பார்த்த நந்தன் தான் செய்தவற்றையும், தன்னைமறந்து நடந்தவற்றையும் நினைத்து வேதனைப்பட்டான். "ஓ கடவுளே!" என்று தன்னையே நொந்துகொண்டான். அருந்ததியைத் தொட்ட கையால் இன்னொருத்தியைத் தொடாதிருந்தேன். அவளைத் தவிர வேறொருத்தியையும் ஏறெடுத்துக் கூட பார்க்கமுடியாதென்றிருந்தேன், சாகும்வரை தனிமையில் வாழ்வேனென்றிருந்தேன், அவள் உறவைத் தவிர வேறு உறவேயில்லையென்றிருந்தேன். இன்று எல்லாவற்றையும் இழந்துவிட்டேனே. இறைவா என்னை வேதனைப்படுத்திப்பார்ப்பதே உனக்கு வேடிக்கையாகிவிட்டதா? எத்தனை காலத்திற்குத்தான் என்னைக் கஷ்டப்படுத்தப் போகின்றாய்" என்று தன்னையும் மறந்து உணர்ச்சி ஆவேசத்தால் துடித்தான் நந்தன். அவன் பேசியதற்கே இடம் கொடுத்துக் கொண்டிருந்த வத்சலா தொடர்ந்தும் மௌனமாகவே இருந்தாள். நீண்ட நேரத்தின் பின்தன் உணர்ச்சி ஆவேசம் குறைந்தவனாக. ---

"என்னை மன்னித்துவிடு வத்சலா. நிலை இழந்த நான் உன்னை என் அருந்ததி என்று என்னை மறந்து தப்புச் செய்துவிட்டேன்." என்று மௌனமானான் நந்தன்.



படிப்பகம்

padippakam

இந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த வத்சலா பேச ஆரம்பித்தாள்.

"மன்னித்துவிடு என்னுடன் நடந்தது இல்லையென்று ஆகிவிடுமோ? நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள் நான் அதற்கு இடம் தந்துவிட்டேன். உங்களுடைய தடுமாற்றத்தை நான் நன்கு புரிந்திருந்தும் அப்போதிருந்த நிலைமை என்னை உங்களிடமிருந்து விலகி முடியாதிருந்தது. தப்பு உங்களுடையதோ அல்லது என்மேலோ இல்லை. இரண்டுபேருமே இந்தத் தப்பிற்கு பங்காளிகள். நீங்கள் வாழ்வை இழந்தவர். நானோ காதலை இழந்தவள். இரண்டு இழப்புகளும் ஒன்று கூடி எல்லையும் மீறி ஒன்று சேர்ந்துவிட்டது. இருவரையொருவர் மன்னிப்பு கேட்பதாலோ, மன்னிப்பு கொடுப்பதாலோ இழப்புக்கள் ஈடுசெய்யப்படமாட்டாது" என்றவள் மூச்சுவாங்க தலைகுனிந்து நின்றாள். மனைவியின் நினைவுகளுக்காக வாழ்ந்தவன் மனதிலே சுருக்கி விழுந்து தவிக்கின்றான். வாழ்க்கை ஒருமை ஆத்மன் மறுமை என வாழ்ந்தவன் இன்று வாழ்க்கையும் இல்லாமல் ஆத்மாவையும் அறுபட விலக்க முடியாமல் இருதலைக் கொள்ளியாகத் தவித்தான். அருந்ததி இருவரையும் ஆத்மாவைப் பற்றிவிட்டாள். நானோ என்று தன்நிலையை சிந்தித்து நின்றான் நந்தன். பொறுமையை இழந்த வத்சலா மனதில் தைரியத்தை வரவழைத்தவளாக...

"வெட்கத்தைவிட்டு உங்களிடம் மனம்விட்டுக் கேட்கிறேன். உங்களிற்கு ஆட்சேபனையில்லாவிடில் நான் உங்களை கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறேன். என்றாள் திடமான குரலில் வத்சலா.

"வத்சலா என்று உரக்கக் கத்தியவன் வாழ்க்கையைத்தொட்ட கையைவிட்டு இறைவனையே இருகையாலும் தழுவிக்கொள்ளலாம் என்றால் இறைவன் அதிகமாக எண்ணித் தண்டிக்கின்றார். விதி என்னோடு விளையாடுகிறது நானும் வத்சலாவும் சேர்ந்து வாழவேண்டும் என்று ஆண்டவன் எழுதிவிட்டான் போலும், விதியை வெல்ல யாரால் முடியும், என்று சிந்தித்துக் கொண்டிருந்தவன் அருகில் நின்ற வத்சலாவின் கையை இறுகப் பற்றிக் கொண்டான். இருவரும் வீடு நோக்கி நடந்தார்கள்.



படிப்பகம்



தொகுப்பு
• அமிர்தராஜா
திருமதி.

# மங்கையர் ஜசா

பாரதி கண்ட புதுமைப் பெண்களை
தாயகத்தில் கண்டு கொண்டோம்
அதில் அன்னிய நாட்டிலும் அவர்களை
காண்பது அரிதாகவே இருக்கிறது.
வீரத்தாய்கள் வீரத்திலகமிட்டு
களத்துக்கு அனுப்பினர் புதல்வர்களை.
அந்நிய இருக்கும் நாள்
அதிக தூரமா?

-யாரோ-

padippakam

**ஜனனம் இதழ் சார்பாக சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினர் திருமதி ஜோகன்னா நீடர்முல்லருடன் (MRS JOHANNA NIDER-MÜLLER) ஜனனம் ஆசிரியர் குழு நடாத்திய பேட்டி.**

1) மனித உரிமைகளுக்காகச் சேவைசெய்யும் திருமதி ஜோகன்னா நீடர்முல்லர் அவர்களே! ஜனனம் வாசகர் சார்பில், சர்வதேச மன்னிப்புச் சபை பற்றியும் சிறிலங்காவில் அதன் நடைமுறைகள் பற்றியும் அறிய விரும்புகின்றோம். நீங்கள் இச்சபையில் சேர்ந்து அகதிகளுக்காகச் சேவைசெய்ய உங்களைத் தூண்டிய காரணம் என்னவென்பதை எங்களுக்குக் கூறுவீர்களா?

பத்துவருடங்களுக்கும் முன்பாக வுப்பெற்றாலில் இருக்கும் ஐக்கிய கிறிஸ்தவ ஸ்தாபனத்தின் (VEM) விடுதி நிலயத்தில் வேலைசெய்து கொண்டிருக்கும் பொழுது சர்வதேச மன்னிப்புச்சபையில் சேர்ந்தேன். ஆசிய ஆபிரிக்க நாடுகளிலுள்ள பல கிறிஸ்தவ தேவாலயங்களுடன் ஐக்கிய கிறிஸ்தவ ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பு காரணமாக, மனித உரிமை மீறல்கள் பற்றி அதிகம் அறிந்தேன். உதாரணமாக தென்னாபிரிக்காவிலும், நமீபியாவிலும் அரசியல் பொருளாதார இனவாத ரீதியாக தொழில் அபிவிருத்தியடைந்த நாடுகளால் அனேகமாக ஆதரவு கொடுக்கப்பட்டு வரும் அநியாயத்திற்கும் அடக்குமுறைக்கும் எதிராக தொழிற்படவேண்டிய கடமையை உணர்ந்தேன். தற்பொழுது மேற்கு ஜேர்மனியில் வாழும் அகதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்பொழுது அக்காலத்தில் மிகவும் குறைந்த அகதிகளே இருந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை வசதிகள் இன்றையைப்போல் அவ்வளவு கஷ்டமானதாய் இருக்கவில்லை. கடந்த ஆறு ஏழு வருடங்களாக ஏற்படுத்தப்பட்ட பல கட்டுப்பாடுகளே (உ-ம்: வேலைசெய்யத் தடை) இதற்குக் காரணமாகும். இந்த அகதிகளின் வாழ்க்கைக்கு பாதுகாப்பு இருக்கின்றபடியால், ச.தே.ம.ச அங்கத்தவர்களாகிய நாங்கள் மறியலிடப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு வேறுவழிகளில் துன்புறுத்தப்பட்டு தங்கள் உயிருக்கு ஆபத்து உள்ளவர்களில் கவனத்தைச் செலுத்துகிறோம்.

2) உங்கள் சேவையின் மூலம் வுப்பெற்றால் தமிழ் அகதிகளுக்கு எவ்விதத்தில் உதவுகின்றீர்கள்? ஜேர்மன்


படிப்பகம்

மக்களும், ஜேர்மனியில் வாழும் தமிழ்மக்களும் ஒற்றுமையாக புரிந்து வாழ்வதற்கு நீங்கள் ஏதாவது செய்ததுண்டா?

முதலாவது கேள்விக்கு மறுமொழியைத் தருவதற்கு "அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கான தகவல்" என்ற ச.தே.ம.ச யின் துண்டுப் பிரசுரத்தை நீங்கள் நாடுமாறு விரும்புகின்றேன். பக்கம் பதினொன்றில் பின்வருமாறு சொல்லப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் கோருபவர்களுக்கு ஆதரவாக எப்போது சர்வதேச மன்னிப்புச் சபை தன் நடைமுறைகளை எடுக்கின்றது?

//ஜேர்மன் சமஷ்டிக் குடியரசில் அரசியல் தஞ்சம் கோரும் அரசியல் அகதிகள் அரசியல் காரணங்களுக்காகத் துன்புறுத்தப்படக்கூடிய ஒரு நாட்டுக்கு திரும்பவும் ஒப்படைக்கக்கூடிய அல்லது நாடுகடத்தப்படக்கூடிய அபாயம் இருந்தால் ச.தே.ம.ச அவர்களுக்கு உதவி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றது.

ஒருவரின் அரசியல் சமய அல்லது மற்ற ஆன்மீக நம்பிக்கைகள், அவரின் இனம், அவரின் நிறம் அல்லது பாஷை போன்ற காரணங்களுக்காக சம்பந்தப்பட்ட நபருக்கு மறியல், தடுத்துவைத்தல், சித்திரவதைக்குள்ளாக்கப்படுதல், மரணதண்டனை விதிக்கப்படுதல் அல்லது அவரின் சுதந்திரத்துக்கு தடைகள் அல்லது கட்டுப்பாடுகள் ஆகியவற்றிற்கு ஆளாக்கப்படக்கூடிய அபாயம் இருந்தால் ச.தே.ம.ச எப்பொழுதும் அவர் திரும்பவும் ஒப்படைக்கப்படுவதை அல்லது நாடு கடத்தப்படுவதை தடுத்து நிறுத்த முயலுகின்றது.

ஒரு குறிக்கப்பட்ட அரசியல் தஞ்சம் கோரும் நபருக்கு சார்பாக ச.தே.ம.ச நடவடிக்கைகள் எடுக்கலாமா, எப்படி எடுக்க வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட நபருடன் விபரமாக விசாரித்து சாட்சிப் பத்திரங்களையும் பார்த்து, கிடைக்கப்படும் எல்லாத் தகவல்களையும் விசாரித்தபின்பு தீர்மானிக்கப்படும்.//

வுப்பெற்றலில் தஞ்சம் கோருபவர்கள் ஆயிரம் பேர்மட்டில் இருப்பதாகவும் கிட்டத்தட்ட எண்பது ச.தே.ம.ச அங்கத்தவர்களில் மூன்றுபேர்மட்டுமே தங்கள் ஓய்வு நேரங்களில் ஆலோசனை கூறுபவர்களாக இருப்பதாலும், அகதிகளுக்குத் தனித்தனியாக ஆலோசனை

padippakam

கூறுவது முடியாமல் இருக்கின்றது. எனவே தமிழ் அகதிகளைப் பொறுத்தமட்டில் எங்களுடைய அதிகாரிகளுக்கும், தகவல் தொடர்பு சாதனங்களுக்கும், ஜேர்மன் மக்களுக்கும் ஸ்ரீலங்காவில் இருக்கும் நிலைமைகள் பற்றிய தகவல்களை கொடுப்பதிலும், சட்டத்தரணிகளுக்கு பின்னணித் தகவல்களை அளிப்பதிலும் நாங்கள் கவனம் செலுத்தினோம். தமிழ் அகதிகளுடனும் (டாக்டர் டேவிட் வீரசிங்கம், திருமதி சச்சிதானந்தம்) தென் ஆசிய நிறுவனத்தின் அங்கத்தவர்களுடனும் பல தகவல் கூட்டங்களை போக்ஸ்ஹொக் சூலே (VOLKShochschule) யில் ஒழுங்கு செய்து நடாத்தியுள்ளோம். துன்புறுத்தப்பட்ட, அடக்கப்பட்ட மக்களுக்கு ஜேர்மன் மக்களின் சரித்திர சமயரீதியாகவுள்ள கடமைப்பாட்டின் ஞாபகார்த்தமாக தேவாலய வழிபாடுகளை ஒழுங்கு செய்திருந்தோம். ஸ்ரீலங்காவில் சித்திரவதை, உயிர் அழிவுகள், காணாமற்போனோர் பற்றிய தகவல்களடங்கிய சிறுபுத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை பிரசுரித்துள்ளோம். அத்துடன் அரசியல் தஞ்சம் கோருவோருக்கு மேலும் கட்டுப்பாடுகளை எங்களுடைய அதிகாரிகள் நடைமுறைப்படுத்துவதற்கு, அதிகாரிகளுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் முயற்சி எடுக்கின்றோம். இவற்றையெல்லாம் செய்வதற்கு தமது சிந்தனையுள்ளதும் மனித உரிமை பாதுகாப்பு ஸ்தாபனங்களுமான செஞ்சிலுவை சங்கம், கரிதாஸ், டியா கோனிசெஸ் வேர்க், தென்னாசிய நிறுவனம், 'ஆல்கெமைனர் சோஸியால் டீன்ஸ்ற்' போன்ற ஸ்தாபனங்களுடன் ஒத்துழைப்பு அவசியம் என்று எண்ணுகின்றோம்.

உங்கள் மனதில் ஜேர்மனியில் வாழும் தமிழ் அகதிகள் பற்றிய அபிப்பிராயத்தையும், அவர்கள் தங்கள் நாட்டுப் பிரச்சனை தீர்வடையும்வரை இங்கு இருக்கலாம் என்றும் தேவை ஏற்படும் வேளையில் திருப்பி அனுப்பப்படலாம் என்றும் கூறும் வேளையில் இங்கு கல்வி பயிலும் தமிழ் சிறார்களின் எதிர்காலம்பற்றி உங்கள் கருத்து என்ன?

எங்களுடைய அரசாங்கம் நல்ல அரசியல் பொருளாதார தொடர்புகளை இலங்கை அரசாங்கத்துடன் வைத்திருப்பதன் மூலம் ஸ்ரீலங்காவிலுள்ள தமிழரின் அடக்குமுறையை கூட்டுவதனால், எல்லா தமிழ் அகதிகளுக்கும் நிரந்தரத் தஞ்சம் கொடுக்கவேண்டுமென்பது எனது சொந்த எண்ணம். அகதிகள் பற்றிய


படிப்பகம்

padippakam

ஜெனிவா ஒப்பந்தப்படி தமிழர்கள் அரசியல் அகதி அந்தஸ்து சட்டபூர்வமாக கொடுக்கப்படாதது மனிதாபிமானமற்றதென எண்ணுகின்றேன். இந்த நிலையில் ஒருபோதும் தங்களின் நாட்டுக்கு திருப்பியனுப்பப்படலாமென்ற பீதியில் வாழ்வதனால் அகதிகள் தங்களுடைய வருங்காலத்தை திட்டமிடமுடியாமல் இருக்கின்றார்கள். மற்றைய இளைஞர்கள் பாடசாலைக் கல்வியில் கவனம் செலுத்தும் போது அகதிகள் சும்மா இருந்து ஒன்றும் செய்யாமல் காலத்தை வீணாகக் கழிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இளம் அகதிகள் பாடசாலைகளுக்கும், சர்வகலாசாலைகளுக்கும் செல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் அனேக அகதிகள் வாழ்க்கைச் சூழலினால் மனநோயாளிகளாகின்றார்கள் என்றே எண்ணுகிறேன்.

4. இங்கு கல்வி கற்கும் தமிழ் சிறார்கள் சிறிலங்கா நாட்டுப் பிரச்சனை தீர்ந்தபின்பும் தங்களது கல்வியை இங்கு தொடரமுடியுமா?

தமிழ் சிறுவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் விரும்பினால் சிறுவர்கள் தங்கள் கல்வியை இங்கே ஜேர்மனியில் முடிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்பது எனது கருத்து. ஆனால் மேற்கு ஜேர்மனியில் பாடசாலைக் கல்வியை பயில்வதனால் பிள்ளைகள் தங்கள் நாட்டிலிருந்தும் அதன் கலாச்சாரம் சமூகத்திலிருந்தும் விடுபட நேரிடுமென்பதையும் பின்னர் இவற்றோடு இணைந்து போவது முடியுமென்றாலும் கஷ்டமாயிருக்குமென்பதையும் பெற்றோர் கணக்கிலெடுக்கவேண்டும்.

5. நாளாந்தம் சிறிலங்காவில் உள்ள தமிழர்களின் உயிர், உடமை, கலாச்சாரம், கல்வி போன்றவை சிறிலங்கா அரச படையினரால் திட்டமிட்டு அழிக்கப்படும் இவ்வேளையில் உங்கள் நிறுவனம் ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொண்டார்களா?

போன வருட இலையுதிர்காலப் பகுதியில் சிறீலங்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ச.தே.ம.ச ஒரு செயல்முறையில் ஈடுபட்டது. தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் சட்ட ரீதியற்ற உயிரழிவுகள் கொண்டுசெல்தல், சிறைப்பிடித்தல், சித்திரவதை போன்றவற்றை கண்டித்து உலகெங்கிலுமுள்ள பல ச.தே.ம.ச


படிப்பகம்

padippakam

அங்கத்தவர்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தன, மந்திரிமார்கள், அரசியல்வாதிகளுக்கும், பொன் (BONN) இல் இருக்கும் சிறீலங்காவின் தூதுவராலயத்திற்கும் கடிதம் எழுதினார்கள். எங்களால் முடிந்தளவிற்கு அனேகம் பேருக்கு பல்வேறு விதங்களிலும் இத்தகவல்களைக் கொடுக்க முயற்சித்தோம். செப்டெம்பர் மாதத்தில் ஒரு சனிக்கிழமை 'எல்பவெல்ட்' (ELBERFELD) நகரில் என்னுடைய ச.தே.ம.ச பிரிவு அகதிகளுடனிணைந்து இத்தகவல்களைப் பரப்பியது. வுப்பெற்றால் பிரஜைகளுக்கு இன்போ பிரசாரங்கள் தமிழரின் உருசியுள்ள ஆகாரங்கள், சிறீலங்கா தேனீர் ஆகியவற்றை விநியோகித்தோம்.

6. அண்மையில் சிறீலங்காவில் யாழ்குடா நாட்டுக்கும், ஏனைய தமிழ் பகுதிகளுக்கும் சிறீலங்கா அரசு எரிபொருள் விநியோகத் தடை விதித்ததை எதிர்த்து உங்களது நிறுவனம் எத்தகைய நடைமுறைகளை மேற்கொண்டதென்று கூறமுடியுமா?

நான் அறிந்தவரையில் யாழ்ப்பாணத்திற்கு ஏற்படுத்தப்பட்ட பொருளாதார முற்றுகைபற்றி ச.தே.ம.ச என்றும் உத்தியோகபூர்வ தகவலோ அல்லது அதன் அபிப்பிராயத்தை பகிரங்கமாகவோ வெளிப்படுத்தவில்லை. ஒரு பிரத்தியேக நபராக இச்செய்கையை கண்டிக்கிறேன். மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான பொருளாதார நடவடிக்கைகளுக்கு ச.தே.ம.ச கண்டனம் தெரிவிப்பதற்கு சிறிது காலம் செல்கின்றது.

7. வுப்பெற்றலில் 500க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் வாழ்கிறார்கள். சிறீலங்காவின் வட, கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களை உள்ளபடி பிரசுரிக்கும் ஈழநாடு, ஈழமுரசு, உதயன் போன்ற தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளை இங்குள்ள தமிழர்கள் வாசிப்பதற்கு உங்கள் நிறுவன மூலமோ, அல்லது வேறு தர்மஸ்தாபன மூலமோ எடுப்பித்துத் தரமுடியுமா?

நான் அறிந்தவரையில் சிறீலங்காவிலிருந்து வரும் தினசரிப் பத்திரிகைகளுக்கு தென் ஆசிய நிறுவனம் சந்தா செலுத்துகின்றது. எனவே இவ்விடயத்தில் தமிழ் அகதிகள் தென் ஆசிய நிறுவனத்தை நாடுவது நல்லது.



படிப்பகம்

padippakam

8. இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் இங்குள்ள தொலைக்காட்சியில் சிலவேளைகளில் காண்பிக்கப்படுகிறது. அங்குள்ள சிங்கள மக்களுக்கு ஏற்படும் சிறு பாதிப்புகள் கூட இங்குள்ள தொலைக்காட்சியில் பெரிதுபடுத்திக் காண்பிக்கும் வேளையில் ஸ்ரீலங்கா அரச படையினரால் தமிழ் மக்களுக்கு ஏற்படும் உயிர், உடைமை, இழப்புகளை ஒருபோதும் காண்பிக்கப்படுவதில்லை. இதில் உங்கள் அபிப்பிராயம் என்ன?

மூன்றாம் உலகமென அழைக்கப்படும் நாடுகளைப்பற்றிய தகவல்களை எங்களுடைய வெகுஜன தொடர்பு சாதனங்களின் செய்தி ஒலிபரப்புச்சேவை அலட்சியம் செய்யும் திரித்தும் கூறுகின்றது. ச.தே.ம.ச தனது சொந்த சுதந்திரமான ஆராய்ச்சியாளர்களை உலகின் எல்லாப் பகுதியிலும் வைத்திருந்து அவர்களின் கண்டுபிடிப்புக்களை தனது சொந்த சுதந்திரமான பிரசுரங்களில் எழுதுவதன்மூலம் செய்திகளை செய்தி ஸ்தாபனங்களுக்கு கொடுப்பதன் மூலமும் இப்படியான அசிகண்டத்தை நிவர்த்திசெய்கின்றது. ச.தே.ம.ச நடத்திய ஆராய்ச்சியின் பயனாகவே மேலே கூறப்பட்ட ஸ்ரீலங்காவைப் பற்றிய சிறு நூல்கள் பிரசுரமாயின.

சர்வதேச மன்னிப்புச்சபை அங்கத்தவர் என்ற முறையில் நீங்கள் என்னை அணுகியபடியால் இந்த ஸ்தாபனம்பற்றிய எனது சில பொதுவான கருத்துகளை பொதுவாகக் கூற விரும்புகிறேன். ச.தே.ம.ச கொள்கைகளுடன் நான் எப்போதும் ஒத்துப் போவதில்லையென முன்பு கூறியிருக்கிறேன். ச.தே.ம.ச சிலவேளைகளில் அரசியல் ரீதியாக பாரபட்சமற்ற ஸ்தாபனம் என்ற உலகளாவிய நற்பெயரை இழந்துவிடுமென்று பயப்படுகின்றதென்றும் அநியாயத்திற்கெதிராக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய பொழுதெல்லாம் அமைதியாக இருக்கிறதென்றும் நான் எண்ணுகிறேன். ச.தே.ம.ச மனித உரிமை மீறல் சம்பவங்களை தடுக்கும் வகையில் குரலெழுப்ப வேண்டுமென்றும் மக்கள் மறியலிடப்படும்வரை பொறுத்திருக்கப்படாதென்றும் நான் சிலவேளைகளில் உணர்கிறேன்.

padippakam

எனது சொந்த எண்ணம் இவ்வேளைகளில் ச.தே.ம.ச கொள்கைகளுடன் ஒத்துப்போகா விட்டாலும் நான் எனது அங்கத்துவத்தை இல்லாமற் செய்ய விரும்பவில்லை. ஏனெனில் மாறுபட்ட எண்ணங்கள் ஜனநாயகத்தின் ஒரு அம்சமே. என்னுடைய கருத்துக்களை மற்ற ச.தே.ம.ச அங்கத்தவர்களுடன் பேசுவதன்மூலம் சிறிது சிறிதாக மாற்றங்களைக் கொண்டுவரலாமென நம்புகிறேன்.

ஞானம் இதழ் சார்பாக நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு மனந்திறந்து வெளிப்படையான பதில்களைத் தந்த உங்களுக்கு ஞானம் வாசகர் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஞானம் ஆசிரியர்குழு

சென்னை மியூசியத்தில் ஒரு பெரிய மரம் இருக்கிறது இது ஓர் அதிசயமரம். இம்மரம்பற்றி அறிந்தது. இந்த மரம் ஆபிரிக்க நாட்டை சேர்ந்தது. இந்தியாவில் இவ்வகை மரம் காண்பது அரிது. இதற்கு அரக்க புளிய மரம் என்றும் பேப்பாப் (BAOBAB) மற்றும் மங்கி பிரெட்மரி என்றும் பெயர் உண்டு. உலகில் அதிக காலம் வாழக்கூடிய மரம் இது. மரத்தின் கீழ்ப்புறச் சுற்றளவு குறைந்தது 30 அடி சராசரியானம். இந்த மரத்தின் மரக்கூழ் [illegible] தயாரிக்க பயன் படுகின்றது. மரப்பட்டை நீக்கிய உட்பகுதி சாக்கு, கயிறு தயாரிக்கப் பயன்படுகிறது. இதன் இலைகள் காய்ச்சலுக்கு மருந்தாகிறது. இந்தமரத்தை ஒரு பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறோம்.

தகவல்:- A.G. சுதர்சன்.
(தாவரவியல் க்யூரேட்டர்)



படிப்பகம்

padippakam

# மணிமொழிகள்

- உண்மையான அன்பும் அதன் பசுமையான நினைவுகளும் என்றும் அழிவதில்லை
- உள்ளத்தில் அமைதியிருந்தால் உடலில் அழகிருக்கும்.
- வாழ்க்கையை அழகாக வாழக்கற்றுக் கொள் ஆனால் அதை அசிங்கப்படுத்தி விடாதே.
- பகையில் நிதானம் வந்தால்.
  அன்பு சன்னிதானம் ஆகிவிடும்.
- உன்னைப் பற்றிச் சொன்னது உண்மையாயின் திருந்தி விடு பொய்யாயின் நகைத்து விடு.
- உயர்ந்த இலட்சியங்கள்தான் உயர்ந்த உள்ளங்களை அமைக்கின்றன.
- விலை மதிக்க முடியாத அன்பை.
  புரியாதவர்களிடம் கொடுத்து விடாதே.
- சோதனை ஏற்படும் போது
  வேதனை அடைந்து விடாதே.
  சாதனையாய் அதை
  வென்று விட முயற்சி செய்

தொகுப்பு. பரமேஸ்வரி
ஹப்சிபாபர்ல்



படிப்பகம்

padippakam

# ANTENATAL

## பிரசவகாலத்திற்கு முந்திய பராமரிப்பு

ஓர் பெண் தான் கர்ப்பவதி என்பதை முதன் முதலில் அறிய (ஒழுங்காக மாதவிடாய் வரும் பெண்ணாக இருந்தால்) அப்பெண் மாதவிடாய் நிற்பதைக்கொண்டு தான் கர்ப்பம் உற்பத்தியானதை அறியலாம். பின் கிளினிக்கிற்குச் (CLINIC) செல்வதன் மூலம் அதை உறுதிப்படுத்துகின்றனர். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது L.R.M.P (LAST REGULAR MENSSURAL PRIAD) இதைக் கொண்டே பிள்ளை எத்தனையாம் திகதி பிரசவிக்கும் என்பதை அறியலாம். கடைசியாக மாதவிடாய் வந்த மாதம் திகதியில் இருந்து 9 மாதம் 7 நாட்களைக் கூட்டினால் பிள்ளை பிறக்கும் நாளைக் கணிக்கலாம். ஆனால் இத்திகதி ஒரு வாரம் முந்தலாம் அல்லது பிந்தலாம்.

ஒழுங்காக மாதவிடாய் வராத பெண்கள் தாம் கருவுற்றதை யூரின் டெஸ்ட் (URINE TEST) மூலமே அறியலாம். கருவுற்றிருந்தால் நேராகவும் (POSITIVE) இல்லாது இருந்தால் எதிர்மாறாகவும் (NEGATIVE) இருக்கும். இதை CLINIC இல்தான் செய்ய முடியும். சில பெண்கள் தமது L.R.M.P ஐ மறப்பது உண்டு. இப்படி மறந்தால் அப் பெண்கள் MULTI யாக இருந்தால் அதாவது ஒரு பிள்ளைக்கு மேல் பெற்றிருந்தால் 16வது கிழமையில் கருவுற்றிருப்பதை (பிள்ளை உருவானதை) அறியலாம். அப்படியறியும் போது நாட்களைக் கணிக்கலாம். PRIME ஆகவிருந்தால் அவர் அனுபவம் இன்மை காரணமாக 18-20 கிழமைகளில் உணருவார். இதைக் கொண்டு அவர் நாட்களைக் கணிக்கலாம். கர்ப்பிணிப் பெண்கள் ஒழுங்காக CLINIC போவது அவசியம். அவர்களது நிறையை அவதானிப்பதும், இரத்தப் பரிசோதனை செய்வதும்



படிப்பகம்

padippakam

மிக முக்கியமாகும். தாய்மார் நல்ல போசாக்குள்ள உணவு வகைகளை சாப்பிடுதல் நல்லது. கீரைவகை மிகவும் நல்லது. IRON சத்து குறைவதால் கர்ப்பவதிகள் வெளுறி, கண்கள் குழிவிழுந்தும், கண்களுக்குக் கீழ் கறுப்பாகவும் காணப்படும். இவை இரத்தத்தின் குறைபாட்டைக் காட்டும் அறிகுறிகளாகும். இப்படி இருந்தால் டாக்டர் மூலமாகவோ அல்லது நீங்களாகவோ PARMACY களில் IRON சத்துள்ள TONICகளை வாங்கி அதில் குறிப்பிட்ட அளவுகளில் குடிக்கலாம். சிலருக்கு IRON TONIC ஒத்துக்கொள்ளாவிட்டால் (வயிற்றோட்டம் ஏற்படலாம்) அளவைக் குறைத்து பின் படிப்படியாகக் கூட்டிப் பாவிக்கலாம். இத்துடன் விட்டமின் B12 (CYNACO PALAMIN) என்பன போன்ற TONICகளையும் அருந்தலாம். இது தாய்மாருக்கு மிகுந்த அவசியம். பசியிருந்தால் அவசியம் இல்லை. சாப்பாட்டு நேரம் ஒவ்வொருநாளும் ஒழுங்கான நேரமாக இருத்தல் நன்று.

சில பெண்கள் கருவுற்றது போல் காணப்பட்டாலும் அவை கருவாகவிருக்காது. கருப்பையில் உண்டாகும் சில கட்டிகளாகவும் இருக்கலாம். ஆனால் இவை அசைவு கூடியதாகவும் வேதனை உண்டாகுவதாகவும் இருக்கும். சில வகை CEYSTE எதுவித வேதனையும் இன்றி வளரும். ஆனால் இதை ஒர் டாக்டர் PALPATION மூலமாகவோ X-RAY மூலமாகவோ அறிவார்.

APORTION (கருச்சிதைவு: இது ஓர் பெண் கருவுற்று 7 மாதங்களுக்கு முன் அக்கரு வெளிவருமானால் இதை APORTION என்று கூறுவர். இதற்கு பல காரணங்கள் உண்டு. இதை டாக்டர் அறிந்து அதற்குரிய பராமரிப்பைக் கூறுவார். சாதாரணமாக சில பெண்களில் அசாதாரணமாக கரு கருப்பை தவிர்ந்த சில பகுதிகளில் உண்டாகின்றது. இவை பலோப்பியன் குழாய் போன்றவற்றுள் வளர ஆரம்பித்தால் அதை மூன்றுமாதத்திற்குள் operate மூலம் அகற்ற வேண்டும். இது தாய்க்கு வேதனையதிகமாக இருக்கும். அத்துடன் ஆபத்தையும் கொடுக்கலாம். 7 மாதத்திற்குப் பின் சரிமாதத்திற்கு முன் பிறக்கும் குழந்தைகளை PREMATUREAD BABY என கூறுவர். இவை நிறை குறைவாகவும் பலவீனமாகவும் இருப்பதால் சரிவரும்வரை இக்குழந்தையை கண்ணாடிப் பெட்டியினுள் வைத்துப் பராமரிப்பார்கள்.



படிப்பகம்

padippakam

ஓர் கர்ப்பிணிப் பெண்ணுக்கு கால், கை வீங்கி, இரத்த அழுத்தம் கூடி சலம் (URINE) தடைப்படல் போன்ற அறி-குறிகள் காணப்பட்டால் உடன் HOSPITAL க்குச் செல்வது அவசியம். இது அனேகமாக 7வது மாதத்-திற்கு பின்பே ஏற்படும். இக்குறிகுணம் இருந்து இதனால் பாதிக்கப்படுவது தலைப்பிரசவம் உள்ள பெண்கள்-தான். இதை PREACLAMCIA எனக் கூறுவார்கள். இரத்த அழுத்தம் கூடியிருந்தால் (HYPERTENSION) குறி குணமாக தலைப்பாரம், தலைச்சுற்றல், காது இரைச்சல், தலையிடி, கண்கள் சிவப்பாக இருத்தல், போன்று கா-ணப்பட்டால் ஓர் CLINIC க்குச் சென்று B.P. TEST செய்வது நல்லது.

DIABITIS (சலரோகம்) உள்ள பெண்களுக்கு குழந்தை உண்டாகும். அவர்கள் அக்குழந்தையின் வளர்ச்சி கூடுதல் காரணமாக குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே அக் குழந்தையைப் பெற்றெடுப்பது நல்லது.

குழந்தை வயிற்றில் இறந்து காணப்பட்டால் குறிகுணமாக வயிறு வளர்ச்சி குறைவாகவும், குழந்-தையின் துடிப்பு இல்லாமையும், வயிறு குளிர்ந்தும் பாரமாகவும் காணப்படும். இவைகளைக் கொண்டு இதை உணரலாம். இதை 6மாதத்திற்கு பின்தான் நாமாக அவதானிக்கலாம். DR (வைத்தியர்) "X-RAY மூலம் இதை இலகுவில் கண்டுபிடிக்கலாம்.

பிள்ளை பிறக்கும்போது நாம் அது பிள்ளை பிறக்கும் இத்துதான் எனக் கண்டுபிடிப்பது எப்படியெனில் குத்து ஆரம்பிக்கும் போது நீண்ட இடைவெளிக்கு ஓர் குத்தாகவும் ஆனால் இடைவெளிக்கு உள்ள நேரம் ஒரேமாதிரியாகவும் காணப்படும். பின் நேரம் குறையக் குறைய குத்து அதிகமாகவும் இடைவெளி குறைந்தும் காணப்படும். இப்படியெனில் இதை பிரசவ வலி என உறுதிப்படுத்தலாம். இது தொடங்கி 24மணித்தியா-லத்திற்குள் பிள்ளை பிறக்கும். பிள்ளை பிறக்கும்போது கணவன் அருகில் நிற்பது அப்பெண்ணுக்கு ஆறுத-லாக இருக்கும்.

பற்கொதி, பல்வேட்டை, காலில் தசைப்பிடிப்பு (CRAMP) என்பன கல்சியம் பற்றாக் குறையால் ஏற்படும்.



படிப்பகம்


padippakam

இதற்கு கல்சியம், விட்டமின் A, விட்டமின் B மருந்துகள் பாவிப்பது நல்லது.

இதில் மிகவும் சுருக்கமாகவே எழுதியுள்ளேன். வேறு ஏதும் விபரங்கள் தேவையென்றால் கேள்வி பதில் மூலம் கேட்கலாம். கர்ப்பிணிப்பெண்கள் பாவிக்க வேண்டிய மருந்து வகைகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கண்டபடி ASPRIN போன்ற மருந்து வகைகள் பாவிப்பது ஆகாது. கர்ப்பிணிகள் நடப்பது நல்லது.

சாதாரணமாக கர்ப்பிணிக்கு இருக்கும் சில மாறுபாடுகள்: தேகம், கைகால் வீங்குதல், நாரி உளைதல், இத்துதல், சத்தி 3 மாதத்திற்குள் வரும் (4-5 மாதத்திற்குப் பின்னும் சத்தி தொடர்ந்து காணப்பட்டால் டொக்டரிடம் காண்பிப்பது நல்லது) 7 மாதத்திற்கு கிட்ட குழந்தை கீழ் இறங்குவதால் URIN சொட்டுச் சொட்டாக வெளியேறும். அடிக்கடி மலங்கழிக்கத் தோன்றும். ஆனால் இக் குறிகுணங்கள் சாதாரணமானவை.

— நிறைவு. —



## வாசகர் விமர்சனங்கள்

அதிக வாசகர்கள் விமர்சனங்கள் எழுதியனுப்பியிருந்தார்கள். அதிக வாழ்த்துகளும், குற்றம் குறைகளை சுட்டிக்காட்டி எழுதியுள்ளனர்.

அனைவருக்கும் எமது நன்றிகள். தனித்தனியாக பிரசுரிக்க முடியாமல் இருப்பதற்கு வருந்துகின்றோம். இன்னும் கதைகள் கட்டுரைகள் மற்றும் பல்வேறு ஆக்கங்களை எமக்கு எழுதியனுப்பிய எழுத்தாளர்கள் கவிஞர்கள் அனைவருக்கும் நன்றி. உங்கள் ஒத்துழைப்புக்கு ஜனனம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

— வணக்கம் —



படிப்பகம்

padippakam

**ஐம்பெரும் பூதங்கள்**

- நிலம்
- நீர்
- நெருப்பு
- காற்று
- ஆகாயம்

**ஐம்பெருங் காப்பியம்.**

- சீவகசிந்தாமணி
- சிலப்பதிகாரம்.
- மணிமேகலை
- குண்டலகேசி
- வளையாபதி.

**ஐம்பெருங் குரவர்**

- அரசன்
- குரு
- தந்தை
- தேசிகர்.
- மூத்தோன்

**ஐம்பெருங் குழு**

- அரசன்
- அமைச்சர்
- புரோகிதர்
- ஒற்றர்
- தூதுவர்

B. சிவா.

செந்தமிழே என் செல்வமே உயிரே தேனாய்
சிந்தை கலந்த இன்பமே வீசாதே வாராய்
இன்று போம் நாளை வருகிறேன் கலங்காதே நீயும்
என்று சொன்னவர் இன்னும் வரவில்லை இத்தனை நாளாய்

- கவிஞர் குணாநிதி



படிப்பகம்

padippakam

# எயிட்ஸ் நோய்



## AIDS DESEASE

## {இந்த புதிய நோய்பற்றிய தகவல்கள்}

இந்தியாவிலுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் எயிட்ஸ்நோயினால் பாதிக்கப்பட்ட பன்னிரண்டு விபச்சாரிகளை மாநில அரசு தடுத்து வைத்துள்ளது. இந்த நோய் பரவுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்பாக எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட நான்கு ஆபிரிக்க மாணவர்களை இந்திய அரசாங்கம் நாடுகடத்தியது. எயிட்ஸ் நோயிற்கான வைத்தியப் பரிசோதனையின் பின்பு இந்த மாணவர்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களென்பதை அறிந்தவுடன் இந்திய அரசு இந் நடவடிக்கையை உடனடியாக எடுத்தது. பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து இந்தியா சென்று படிக்கிறார்களென்பது குறிப்பிடத்தக்கது. சில நாட்களுக்கு முன்பு, சீனாவிலிருக்கும் சகல வெளிநாட்டு மாணவர்களிலும் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்களாவென்பதை அறிய இந்நோயிற்கான பரிசோதனையை செய்ய வேண்டுமென சீன அரசு முடிவெடுத்துள்ளது.

ஆபிரிக்காக் கண்டத்தில் எயிட்ஸ் நோய் வைரஸை காவுவோர் (வைரசு உடலிலுள்ளது,


படிப்பகம்

padippakam

நோய் தோன்றவில்லை) (AIDS CARRIERS) 50 லட்சம் (5 MILLION) பேராக இருக்கலாமென்றும், அமெரிக்காவில் இவர்கள் 30 லட்சம் (3 MILLION) பேராக இருக்கலாமென்றும் நிபுணர்கள் கருதுகிறார்கள்.
மேற்கு ஜேர்மனியில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட பல குழந்தைகள் பிறந்துள்ளன. கெர்ப்பப்பையிலிருக்கும்போது, தாயின் இரத்தத்திலிருந்து இக்குழந்தைகள் இந்நோயைப் பெற்றுள்ளன.

பாலியல் சம்பந்தப்பட்ட சுற்றுலாக்கள் (SEX TOURISM) எயிட்ஸ் நோய் பரவலைக் கூட்டுகின்றன. ஆசிய கண்டத்திலிருக்கும் அனேக நாடுகளில் இந்நோய் இதனாலாகவே காணப்படுகின்றது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஆண்களின் இந்திரிய கலங்களிலும் (SPERMS) பெண்களின் யோனிப்பைத் திரவத்திலும் (VAGINAL FLUID) எயிட்ஸ் வைரசு கிருமி காணப்படுகின்றது.

## இந்நோய் தொற்றும் வழிகள்

1) இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், இந்நோயை காவுவோருடன் (CARRIERS) உடலுறவு வைத்தல் அல்லது தன்னினச் சேர்க்கையில் (HOMOSEXUAL ACTIVITY) ஈடுபடுதல்.
2) பாதிக்கப்பட்டோர் அல்லது காவுவோரின் இரத்தத்தை ஏற்றுதல், (BLOOD TRANSFUSION), உடலுறுப்புக்களை மாற்றுதல். (ORGAN TRANSPLANTATION)
3) வைத்தியசாலைகளில் எயிட்ஸ் வைரசு கிருமியை கொண்டுள்ள ஊசிகளை (CONTAMINATED NEEDLES) பாவித்தல். இப்படிப்பட்ட ஊசிகளை அனேகமாகப் பாவிக்கும் போதைவஸ்து பாவனையாளர்களில் (DRUG ADDICTS) எயிட்ஸ் நோய் அதிகமாகக் காணப்படுகின்றது.

இன்றுவரை கிடைக்கப்பெற்றுள்ள வைத்திய ஆராய்ச்சி ஆதாரங்களின்படி எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களோ அல்லது எயிட்ஸ் வைரசு கிருமியைக் காவுவோர் (கிருமி உடலில் உள்ளது நோய் என்றும் தோன்றவில்லை) நூறுவீதம் இறக்கவேண்டி நேரிடும்.



படிப்பகம்

DR. ஜொனதன் மான் என்பவர் உலக சுகாதார ஸ்தா-பனத்தின் (WORLD HEALTH ORGANISATION) எயிட்ஸ் நோய் பிரிவின் இயக்குனராக இருக்கின்றார். உலக நாடுகளில் எயிட்ஸ் நோயின் நிலைமைபற்றிய தகவல்களுக்கும், இந்நோயின் கட்டுப்பாட்டுக்கும் இவர் பொறுப்பாய் இருக்கின்றார்.

(தொடரும்)

ஆதாரம்: B.B.C. உலக ஒலிபரப்புச் சேவை (ஆங்கிலம்)

தமிழில் தந்தவர்:-
கி. சந்திரதேவன்
GRUND STR. 10
WUPPERTAL. 02.



## வாசகருக்கு வேண்டுகோள்

எமது புதியபாலம் என்றும் சிறிய இதழ்க்கு கதை, கவிதை போன்ற ஆக்கங்கள் தவிர்ந்த இன்றைய எமது தாயகத்தை மனதில் கொண்டும் சிந்தனைகளை தூண்டக் கூடிய ஆதாரமான கட்டுரைகளை எதிர்பார்க்கிறோம். விடயம் தரமாக வும், பக்கம் சுருக்கமாகவும் இருப்பதற்கு உதவுங்கள். எமது தொடர்புகள் சகலவற்றிற்கும்

To: "புதியபாலம்"
"NEW BRIDGE"
WEST KOTTER STR 84
ZIMMER (5)
5600 WUPPERTAL-2.

இது பற்றி உங்கள் விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்

padippakam



# அன்பு நண்பர்களே!

திரு. திருமதி பௌல் (MR & MRS. PAUL) ஆகிய நாங்கள் உங்களுடைய மொழியில் எழுதுவதற்கு மகிழ்ச்சியடைகின்றோம். நாங்கள் சூடென் ஏர்போவென் 39a (ZUDENERBHÖFEN 39a) கட்டடத்தில் உள்ள தமிழ் அகதிகளுக்கு சமூகசேவை செய்து வருகின்றோம். சிறிலங்காவிலும், ஜேர்மனியிலும் உங்களுக்குள்ள பிரச்சனைகளை நாங்கள் அறிவோம்.

சில வேளைகளில் எங்களுக்கு உங்களால் சில பிரச்சனைகளும் இருக்கின்றன. இன்று உங்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்கின்றோம். உங்களுக்கு உதவி செய்ய எங்களுக்கு மிகவும் விருப்பம். ஆகவே நாம் 'ஆப்பென்றவில்' இருக்கும் அதிகாரிகளுக்கு நல்ல ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். உங்களில் சிலர் பிழையான செயல்களில் ஈடுபட்டதினால் உங்களுக்கு உதவி செய்வதில் கஷ்டமாயிருக்கின்றது.

உங்களில் சிலர் சமூக உதவிப்பணத்தை (SOCIAL MONEY) பிழையான அடையாளப் பத்திரத்தை காண்பித்து இரு தடவை எடுப்பதால் உங்களுக்கே அது நல்லதல்ல. சமூக உதவிப் பணத்தை பெறுவதற்கு மட்டும் 'ஆப்பென்றவில்' வந்து பதிந்துவிட்டு சில நாட்களில் இந்த இடத்தை விட்டு செல்வோரில் எங்களுக்கு மிகுந்த கோபம் உண்டு. இந்த செயல்கள் உங்களுக்கு மட்டுமல்லாது எங்களுக்கும் நல்லதல்ல. உங்களில் அனேகர் மிகவும் நேர்மையானவர்கள். ஆனால் மேற்படி செயல்களினால் இவர்கள் பாதிக்கப்படும் போது நாங்கள் மனவருத்தம் அடைகின்றோம். சமூக உதவி அலுவலகத்தில் வேலை செய்வோர் உங்களுடன் சிநேகிதமற்ற முறையில் நடப்பதற்கு இச்செயல்களே



படிப்பகம்

padippakam

காரணம். நாங்கள் உங்களுக்கு சேவை செய்ய விரும்புகின்றோம். ஆதலால் நீங்களும் எங்களுக்கு நேர்மையானவர்களாக இருக்க வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

எங்களுக்கு "GOOD BYE" (குட்பை) சொல்லாமல் நீங்கள் கனடாவிற்கு செல்வதையிட்டு நாங்கள் மனவருத்தம் அடைகின்றோம். எங்களுக்குச் சொல்லாமல் ஏன் போகின்றீர்கள்? என்று சிந்திக்கின்றோம். ஜேர்மனியில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் உண்டு. நீங்கள் என்றோ போகலாம். ஆனால் நீங்கள் போகும்போது எங்களுக்கு அறிவித்துவிட்டு செல்வது நல்லது.

எங்களுடைய எண்ணங்களையே இங்கு எழுதுகின்றோம் இதையிட்டு மனஸ்தாபப்பட மாட்டீர்கள் என்று நம்புகின்றோம். உங்கள் அபிப்பிராயங்களை அடுத்த இதழ் மூலமாக அறிவதற்கு ஆவலாய் உள்ளோம்.

உங்கள் உண்மையுள்ள
திரு. திருமதி பௌல்
(MR & MRS. PAUL)


தவறு என்பது தவறிச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது.
தவறு செய்தவன் திருந்த பார்க்கவேண்டும்
தப்பு செய்தவன் வருந்தி ஆகவேண்டும்.

—கவிஞர்



படிப்பகம்

padippakam




சற்று நேரத்திற்கெல்லாம் சந்தி வெறிச்சோடியிருந்தது... 'யமதூதர்கள்' வேட்டையை முடித்துவிட்டு தங்கள் பாதுகாப்புக்கென்று நான்கு திசைகளிலும் கடகடத்துக்கொண்டு ஓடிப்போய்த் தங்கள் அரசாங்கக் கிளைக்குள் அடைபட்டுக் கொண்டார்கள்.

இப்போது ஒப்பாரிகளும் ஓலங்களும்....

யார் யாருக்காக யார் யார் அழுவது என்று தெரியாமல் எல்லோரும் எல்லோருக்காகவும் அழுதுகொண்டிருந்தார்கள்....

'ஐயோ... இந்த அநியாயத்துக்கு ஒரு முடிவே இல்லையா?'

'இந்த அநியாய பூமியில் நாங்கள் ஏன் வந்து பிறந்தோம்?'



படிப்பகம்

padippakam

— அழுகையுடன் அங்கலாய்ப்புகள்....
இது இப்போது படிக்கப்பட்டுப் போய்விட்டது...
வாழ்க்கை என்பது எப்போதும் அங்கேயும் நிச்சயமில்லை...
முன்பெல்லாம் நோய்நொடி வந்தது... விபத்துக்கள் வந்தன... ஆங்காங்கே மனித உயிர்கள் உடம்பைவிட்டுப் பிரியும்போது 'விதி முடிந்துவிட்டது!' என்று கதை சொல்லிக் கொண்டிருந்தார்கள்...
இப்போது அன்றாட வாழ்வே விபத்தாகிவிட்டது— —
இந்த விபத்திலிருந்து மீள்வதற்கு ஒரு வழி உண்டு...
ஒரே ஒரு வழி....
அது—
இந்த மண்ணின் சுதந்திரம்!
'தண்ணீர் விட்டோ வளர்த்தோம்... சர்வேசா இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்... கருகத் திருவுளமோ...?'
— பாரதி பாவம். சுதந்திர தாகத்தைச் சொன்ன அளவுக்கு அவனால் இந்த மனிதர்களிடையே 'பாலம்' போட முடியவில்லை. கடற்பாலம் அல்ல மனப்பாலம்.

— பரஞ்சோதி வெறிபிடித்தவன் மாதிரி ஓடினான்...
தெருக்களில் செத்துக் கிடந்தவர்களை வீடுகளுக்கு எடுத்துப்போக ஆயத்தங்கள் நடந்துகொண்டிருந்தன..
இரத்தம்... இரத்தம்.. இரத்தம்...
வரண்டு கிடக்கிற இந்த மண்ணுக்கு இனி மழை தேவையில்லை.... இந்த இரத்த வெள்ளம் போதும்...
சுதந்திரப் பயிருக்கு வித்திட்டு, அது முளைவிட்டு, மரமாகி இந்த இரத்த வெள்ளத்தில் செழிப்புக்கொள்ளத் தொடங்கிவிட்டது... 'இனி இது காலகாலமாய் உயர்ந்து நின்று எதிர்காலச் சந்ததிகளுக்கு நிழல் தரும்...

"இன்றைக்குப் பன்னிரண்டுபேர்!" என்றான் ஒருவன்...
ஒவ்வொரு உயிருக்கும் ஒவ்வொரு மனம்..
அந்த ஒவ்வொரு மனத்திலும் ஆயிரம் கனவுகள்....
இந்தப் பன்னிரண்டு பேரிலும் பன்னிரண்டு உலகங்கள்...
எல்லாக் கனவுகளும் கலைந்துபோய்...
சவங்களாய்....
பஞ்சமா பாதகர்களின் கோரப்பசிக்கு இரையாகி...!

"இதில் ஒரு பெட்டையும்!"
பாசவலை வீசுகின்ற யமதூதருக்குப் பின்சென்ன


படிப்பகம்

padippakam

பூவென்ன, காயென்ன கனியென்ன....? மனித ஆயுள்
நூறாண்டு என்பது ஒரு கணக்கு...' வெறும் மனக்கணக்கு...!
வாய்ப்பாடாகிப் போய்விட்ட மனக்கணக்கு!

ஒவ்வொரு மனித ஜீவனும் நூறாண்டுகள் கட்டா-
யம் வாழ்ந்தான் வேண்டும் என்று விதியா என்ன?

" அந்தப் பெட்டை!"

— பரஞ்சோதி விறைத்தான்...

இடையிடை காய்ச்சல் தொக்கித் தொக்கி
வந்தாற்போல் தெரியும்.

"காயத்ரி?"

" உன்ரை சொத்து இஞ்சை போகேல்லை ராசா... அங்கே
போச்சுது...!" என்று சந்தர்ப்பத்துக்கு ஒன்டு அம்மாச்சி
இந்தப்பக்கம் கையைக் காட்டினளோ... இப்போதுதானா....?

'யமதூதர்கள் இந்தச் சந்திக்கு வருமுன்பே என்னு-
டைய சொத்து இங்கே பறிபோகப் போகிறதென்று
அம்மாச்சி எப்படிப் புரிந்து கொண்டாள்....?'

'காயத்ரி....?'

"பரம்...! நீங்கள் எந்நேரமும் அழுதுவடிஞ்ச
கொண்டிருக்கிறீங்கள்?.... இந்த நேரத்தையும் கொஞ்-
சம் சந்தோஷமாய் வைத்திருந்தால் என்ன!"

— பாவாடை சட்டையுடன் பள்ளிக்கூடம் போகும்-
போதெல்லாம் இவனோடு கூடவே வருகின்ற காயத்ரி
அடிக்கடி கேட்டுக்கொள்ளும் கேள்வி....!
அப்போதும் இவன் முகத்தில் சிரிப்புவராது....

கண்கள் இரண்டிலும் ஒரு சோகம் கவிந்து நிற்கும் —
எப்போதும் எதையாவது பறிகொடுத்தவன் மாதிரி....!

'எதை நான் பறிகொடுத்தேன்லை! என்று தன்னைத்-
தானே கேட்டுக்கொள்வான் பரஞ்சோதி.

சின்ன வயதில் அம்மா—
தொடர்ந்த காலத்தில் அப்பா—
இப்போது படிப்பு—

ஒன்றொன்றாய் எல்லாத்தையும் பறிகொடுத்திட்-
டால் பிறகென்ன சந்தோஷம்....? பிறகென்ன சிரிப்பு...?

"என்ர அம்மாச்சியும் இல்லாட்டில் நானும் இருக்க
மாட்டன்!"

" உங்களுக்கு விசர்" என்பாள் காயத்ரி....

" என்னைப் பாருங்க... எனக்கும் அப்பா இல்லை...
ரெண்டு தங்கச்சியள்... அம்மா... ஆக நானு


படிப்பகம்

padippakam

பொம்பிளைச் சிவன்கள்... நான் சந்தோஷமாய் இல்லையா...? சிரித்துக்கொண்டு!"

— காயத்ரி சிரிப்பாள்....

அவளது சிரித்த முகத்தைப் பார்க்கையில் இவன் கவலை கொஞ்சம் குறைகிறமாதிரி இருக்கும்... வெண்ணிறப்பாவாடை சட்டையுடன் அவள் இவனருகில் நடந்துவரும்போதெல்லாம் இவனது நெஞ்சுக்குள்ளே ஒரு சின்னஞ்சிறு வெண்புறா சிறகடித்துப் பறக்கும்...

அப்போது அவளுக்கு வயது பத்தாவில்லை

ஆனாலும் நிறைய அறிவு இருந்தது....

இயற்கையைப்பற்றி... இந்த ஊர்ச்சனங்களைப் பற்றி... எல்லாம் நிறையத் தெரிந்து வைத்திருந்தாள்...

இவனைவிட அவளுக்கு ஒரு இரண்டு வயசு குறைவாக இருக்கும்.... என்றாலும் பெரிய மனுஷியின் தோரணை இருந்தது....

இவனும் வயசுக்கு மீறி வளர்ந்திருந்தான் என்பது உண்மைதான்... என்றாலும் 'அழுமூஞ்சி'...

காலங்கள் எதற்காகவும் காத்திருப்பதில்லை...

அவனும் அவளும் வளர்ந்தார்கள்...

அவள் வயசுக்கு வந்து ஐந்து வருடங்கள் ஆகின...

ஆனால்—

காதலைப்பற்றி இரண்டுபேருமே கற்பனை செய்ததில்லை.... அது ஒரு ஆச்சரியமான உண்மை. இந்தக்காலத்தில்! என்றாலும் உண்மை!—

அவர்கள் காதலிக்கவில்லை!

"எனக்காக நீ.... உனக்காக நான்...! நீயில்லாவிட்டால் நான் இல்லை... நான் இல்லாவிட்டால் நீ இல்லை...!"
— இதுமாதிரி பேத்தல்கள் பிதற்றல்கள் எதுவும் அவர்களிடம் இல்லை.... ஆனால் பல சமயங்களில் இவன் மனத்தில் அவளும் அவள் மனத்தில் இவனும் நிழலாடிக்கொண்டிருந்தார்கள்....

இவன் தன் மனப்பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முனையும்போதெல்லாம் அறிவுரையின் வடிவில் அவள் நிழலாடினாள்....

'புத்திசாலிகள், அழகர்கள்' என்று தங்களைத் தாங்களே சொல்லிக்கொண்டு இவளது உடம்பின் மீது கண்களால் வலைவீசுகின்ற காளையர்களைச் சந்திக்கும்போதெல்லாம் இவள் மனத்தில் 'புத்திசாலியாய் அழகனாய்' இவன் மட்டுமே



படிப்பகம்

padippakam

நிழலாடினாள்....

இந்த நிழல்களுக்குள் ஒரு அன்புலகம் இருந்தது....

ஆனால் அது காதல் அல்ல...!

ஒருநாள் அம்மாச்சி சொன்னாள் —

"பரஞ்சோதி... உவள் ராசலெட்சுமியின்ரை பொடிச்சி காயத்திரிக்கு ஒரு நல்ல இடத்திலை சம்பந்தமொண்டு வந்ததாம்.... அவள் அதை வேண்டாமெண்டு நிக்கிறாளாம்!"

"ஏனாம்?" என்றான் இவன் பட்டும்படாமல்

"அதென்னவோ.... அவள் ஆரையுமே கட்டமாட்டன் என்கிறாளாம்!"

"ஏனாம்?" மறுபடி.

"ஆருக்குத் தெரியும்...? ஒருவேளை அவள் ஆரையாகிலும் மனசுக்குள்ளை நினைச்சு வைச்சிருக்கிறாளோ தெரியவில்லை...!"

"அப்படியிருந்தால் அவள் விருப்பப்பட்டவனை அவனுக்குக் கட்டிக் குடுக்கிறது தானே?"

"அதை நீ போய்ச் சொல்லு!" என்றாள் அம்மாச்சி...

"நான் ஏன் போகவேணும்?"

"ஒருக்கால் அவள் நினைச்சிருக்கிற பொடியன் நீயாக்கூட இருக்கலாம்!" என்றாள் அம்மாச்சி ஒரு நமட்டுச் சிரிப்புடன்....

"உனக்கு விசர் அம்மாச்சி!" என்று சிரித்துக் கொண்டான் பரஞ்சோதி.

(தொடரும்)

"உனக்கும் கீழே உள்ளவர் கோடி
நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு"

***



படிப்பகம்

padippakam



குரல் கொடுப்பவர்
சுச்சி அக்கா.

# சிறுவர் குரல்



குழந்தைகளின் எதிர்காலம் பெற்றோரின் கையில். அவர்கள் தான் குழந்தைகளைப் பேணிப் பாதுகாத்து, கல்வி மற்றும் சகல துறைகளிலும் மேன்மையுறச் செய்ய வேண்டிய கடமை உள்ளவர்கள்.

தாயகத்தைப் பிரிந்து வந்துள்ள எம் குழந்தைகளின் ஆரம்பக் கல்வியே ஐரோப்பா நாட்டில் தட்டுத்தடுமாறி ஆட்டம் கண்டுள்ளது. எந்த மொழியை கற்பது என்று குழப்பம். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கமைய தாய் மொழியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். நம் நாட்டை பற்றி குழந்தைகள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலினில் தான் அவர்களின் அறிவுக்கு


படிப்பகம்

padippakam

எனக் கூறலாம். புதிர்கள், நல்வழிப்படுத்தும் குட்டிக்கதைகள் உவமைகள் இப்படி பல விடயங்களை சிறுவருக்காக குரல் எழுப்புகிறோம். அதில் அதில் ஆர்வமும் அக்கறையும் இருப்பதாக தெரியவில்லை. அதன் பொறுப்பை பெற்றோரும் கூடிய பங்கு ஏற்கவேண்டும். குழந்தைகளின் எதிர்காலத்தை நயவுசெய்து பாழாக்குகிறார்கள் இந்நாட்டில் உள்நாட்டுப் பல பிரச்சினைகள் அவைகளின் மத்தியில் குழந்தைச் சிறார்களின் அறிவு வளர்ச்சியை அலட்சியப்படுத்தி விடாதீர்கள் அவர்களை அறிந்து, அவதானித்து ஆவன செய்யுங்கள்.



— சிறுவர் குரல் —

<u>சென்ற இதழின் கேள்விகளுக்கான விடைகள்:</u>

1. மாலைபோன் அகழி.
2. கம்போடியா
3. சிங்கம்
4. சுவிட்சலாந்தில் 1961ம் ஆண்டு
5. ஹூவர்டாம் அமெரிக்காவிலுள்ளது.

## சிறுவர்களின் அறிவுக்கு.

- இன்றைய ஈராக்கின் பழைய பெயர் என்ன?
- உலக வரைபடத்தை முதன் முதல் வரைந்தவர் யார்?
- உலகை முதன் முதல் வலம் வந்தவர் யார்?
- 1842ம் ஆண்டில் இலங்கையில் வெளிவந்த முதன் முதல் தமிழ் சஞ்சிகை எது?
- முதலாவது உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு எங்கே எத்தனையாம் ஆண்டு நடைபெற்றது?



<u>விடைகள்:</u>

- பாபிலோனியா
- தொலமி
- மகெல்லன்
- உதய தாரகை
- கோலாலம்பூரில் 1966ம் ஆண்டு.



படிப்பகம்

padippakam

# பிறந்தநாள் வாழ்த்து



குணம் லெட்சுமி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி
K. சிவ ஜீவா தனது 3வது பிறந்தநாளை
17.5.1987 இல் WECK HOVENER STR 40 நொய்ஸ் நகரில்
இருக்கும் இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்
அவரை அப்பா, அம்மா, பேரன் பேத்திமார், மாமா, மாமிமார், அண்ணன்மார், தம்பிமார், மச்சான் மைத்துனிமார், உறவினர், நண்பர் யாவரும்
அவரை "பல்கலையும் கற்று சீர் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகிறார்கள்"

-ஜனனம் ஆசிரியர் குழு, வாசகர்கள் யாவரும் அவரை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள் -



padippakam

padippakam






படிப்பகம்

padippakam

# உண்மைப் புரட்சி உள்ளத்தில் உதிக்க வேண்டும்

செபஸ்தியன்

உண்மையான புரட்சி, அது உள்ளத்தில் உதிக்க வேண்டும். சமத்துவத்தை, சகோதரத்துவத்தை நாம் எப்போது விரும்பி ஏற்கின்றோமோ அப்போதுதான் புரட்சிப் பூக்கள் மலர்வதற்கு நமது உள்ளம் இடமளிக்கின்றது என்று கருதமுடியும். நமது சமுதாயத்தில் நிலவும் குறைபாடுகளை எப்படி அகற்றுவது என்று தர்க்கம் கொள்வதைவிட, அவற்றை அகற்றுவதற்கு நாம் பூரண விருப்பமுடையவர்களாக இருக்கின்றோமோ என்று நம்மை நாமே கேட்டுக்கொள்ளுவது நன்மையை பயக்கும் செயலாகும்.

மேற்கு நாடுகளில் நம்மவர் சிலரின் நடத்தைப் பிறழ்வுகள், நமது தேசிய விடுதலைப்போராட்டத்திற்கான ஆதரவு தேடுதலுக்கு இரண்டகமாய் அமைந்துவிட்டதை நாம் அறிவோம். இவர்களின் இத்தகைய பிறழ் நடத்தைக்கான காரணிகள் கண்டறியப்பட வேண்டியதும் களையப்பட வேண்டியதும் அவசியமானதே.

நாடுதாவுதல், புத்தும்மாற்றுதல், வெறியிலும் போதையிலும் மயங்கியிருத்தல், காழ்ப்புணர்வுகளும் காட்டிக்கொடுப்புகளும், உள்நாட்டின் சட்டமீறல்கள், போதைப்பொருள் கடத்தல் என்பன போன்ற பிறழ் நடத்தைகளின் தாக்கங்களை நாம் இன்னமும் சரிவர அறிந்துகொள்ளவோ புரிந்துகொள்ளவோ இல்லை என்றுதான் கருதவேண்டி இருக்கின்றது. ஏனென்றால் அவை இன்னமும் தொடர்ந்துகொண்டல்லவா இருக்கின்றன.

நாடுதாவுதல் புத்தும் மாற்றுதல் என்பன இன்றும் தொடரும் தொடர்கதைதான். இவர்கள் யார்? நம்மோடு வாழ்ந்தவரும் நமது நண்பர்கள்தானே இவர்கள். இவர்களிடமே கேட்டுப் பார்ப்போம் இவர்களைத் துரத்திய - தூண்டிய காரணிகள் எவையென்று. தனக்கு முன்னும் பின்னுமாக உடன்பிறந்துவிட்ட நான்கு சகோதரிகளினதும் எதிர்கால நல்வாழ்வுக்காகவும் - நிகழ்கால உயிரோட்டத்திற்காகவும், நாடுவிட்டு வந்த கடன் வட்டியுடன் விஸ்வரூபமெடுத்து வாட்டிட நாடுதாவ முயன்றான் ஒருவன். வேலி தாண்டும்போதே அகப்பட்டுக் கொண்டான்



படிப்பகம்

padippakam

பழைய இடத்திற்குத் திரும்பிவரவேண்டியதாயிற்று. தொலை தூரம் தாண்டவேண்டியிருந்தது இன்றையவருக்கு. காதலியோ அக்கரையில் கரம்பற்றவேண்டித் தாவினர். வெற்றியும் கண்டார். மனைவியும் குழந்தையும் சொந்தநாட்டில். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நிலையில் கணவன் இங்கே. குடும்பத்தை அழைப்பதற்குள்ள வசதிகளை அறிந்து தாவினர் அயல் நாட்டிற்கு. விதி இரண்டு மாதத்திலேயே பழைய இடத்திற்கு விரட்டிவிட்டது. குடும்பத்துடன் நீண்ட தூரம் தாண்டினர் வேறொருவர் வெற்றியும் கண்டார். குழந்தைகளின் கல்வியை ஆங்கில மொழிமூலம் தொடரவாய்ப்பும், ஒரு காலத்தில் சொந்த நாட்டிலும் நின்று வாழலாம் என்பதும் அவரது எதிர்பார்ப்பு.

இப்படியாக பலரும் பல்வேறு காரணங்களுக்காக நாடுதாவுதல் - புகலிடம் மாற்றுதல் என்ற பிறழ் நடத்தையை மேற்கொள்கின்றனர். இவர்களின் பிரத்தியேக காரணிகள் நியாயமானது என்று கொள்வதா? அன்றேல் அதற்குரிய பரிகாரம்தான் நம்மால் காணமுடிகின்றதா என்று பார்ப்போம்.

உடன் பிறப்புக்களின் சீதனத்திற்கு பணம் சேர்க்க வேண்டும். வீட்டுக்கடன் - நாடுவிட்டுவந்த கடன் இவற்றின் விளைவேப வட்டி வளர்ச்சியைத் தடுத்திடுதல், நம் சொந்த முன்னேற்றத்திற்காகப் பொருள் தேடுதல், பணத்தேவையை பெரும்பாலும் இந்த வரையறைக்குள் அடக்கி விடலாம். ஆங்கில மொழிமூலம் கல்வியைத் தொடரும் இன்றைய-நாகீய திட்டமுறையினரைத் தவிர ஏனையோர்க்கு மலர்கின்ற நம் தாயகத்தின் கல்வியைத் தொடர்ந்திடவோ - வசதியுடன் வாழ்ந்திடவோ சந்தர்ப்பமே கிடையாதா? கிடைக்காது என்றுதான் பலர் நினைக்கின்றனர். ஆங்கில நாட்டுத்தாவல்கள் இதனையே நமக்கு பறைசாற்றுகின்றன. பெற்றோரைப் பிரிந்து, உடன்பிறப்புக்களைப் பிரிந்து, பிள்ளைகளைப் பிரிந்து, துணைவியைப் பிரிந்து, காதலரைப் பிரிந்து பல்லாயிரக்கணக்கானோர் இங்கும்தான் சொந்தநாட்டிலும்தான் வாழ்கின்றோம். துன்பம் எல்லோருக்குமே பொதுவானதொன்றாகும்போது இனித் தனித்தனியாக வருந்துவதேன்? நாடு அழிகின்றது - வீடு உடைகின்றது - உயிர்கள் பறிக்கப்படுகின்றன. இழப்பதற்கு உயிர் ஒன்றைத் தவிர வேறொன்றுமற்ற - ஏதிலிகளாக நம் உடன் பிறப்புக்கள் வாழ்ந்துகொண்டிருக்கையில் இங்கப் பிரிவுத் துன்பம் ஒரு பொருட்டா? இந்த



படிப்பகம்

padippakam

வேளையில் துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிக்க இவரை மாத்திரம் விடவும் முடியாது - விடவும் கூடாது. அனைவரும் பங்கேற்போம். மலர்கின்ற தாயகத்தில் - புதிய சமுதாயத்தில் - இன்று நிலவும் இறைபாடுகள் தலையெடுக்காமல் தடைசெய்வோம். என்று போராட்டத்திற்கு முகங்கொடுக்கும் சகல அணியினருக்கும் - சகல சக்திகளும் மக்களுக்குப் போதிக்கவும் - நம்பிக்கை ஊட்டவும் வேண்டும். இங்கே பாதுகாப்பாக வாழ்ந்துகொண்டிருக்கும் நாம், வீண் ஆடம்பரங்களைக் குறைத்துக் கொண்டு துன்பப்படும் நம் சகோதரர்களுக்கு உதவ முன்வருவோம். கல்வியும் - செல்வமும் இங்கே தேங்க விடாமல் போராட்டத்திற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் வீரத்திற்கு உறுதுணையாக விளங்கச் செய்வோம். பேதையிலும் போதையிலும் மயங்கியிருப்போர் தேவதாஸ் பாணியில் காரணம் கற்பிக்க முயன்றாலும் எதிர்வாதமின்றி அவை அனைத்தும் நிராகரிக்கப்பட வேண்டியவையே.

காழ்ப்புணர்வுகளும் காட்டிக்கொடுப்புகளும் வரலாற்று நியதிபோல் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. சங்கிலியன், காக்கைவன்னியன், கட்டப்பொம்மன், எட்டப்பன் என்று சரித்திரம் இன்றும் தொடர்கதையாக வளர்கின்றது. குறிப்பிட்ட விடுதலை இயக்கமொன்றுக்கு நிதி உதவி புரிவது இந்த நாட்டு அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட நம்மவரை விற்றிட்டவர் என்பதை எண்ணி ஆத்திரமும் வேதனையும் மட்டுமல்ல, வெட்கப்படவும் வேண்டியிருக்கிறது. எந்த நியாயமும் கற்பிக்க முடியாத - வெறுத்து ஒதுக்க வேண்டிய செயல் இது.

உள்நாட்டின் சட்டதிட்டங்கள் தினந்தோறும் நம்மால் பரவலாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. பிரதேச கட்டுப்பாடுகளை நாம் சர்வசாதாரணமாக மீறுகின்றோம். இதற்கு பற்பல நியாயங்கள் கற்பிக்கப்படலாம். அனுமதிப்பத்திரமின்றி வேலைசெய்தல். இதற்கு மனிதாபிமான அடிப்படையில் நியாயம் கற்பிக்க முடியும். ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பதிவுசெய்தல் - அப்பட்டமாக நிராகரிக்கப்பட வேண்டியது. அகதிமுகாம்களை விட்டுத் தப்பிவந்து வேறு இடங்களில் பதிவுசெய்தல் - இதற்கும் நியாயம் கற்பிக்க இடமுண்டு. போதைப்பொருள் கடத்துதலிலும் சிலர் ஈடுபட்டு அதன் பலனை


படிப்பகம்

padippakam

நிலவரைகளில் அநுபவித்துக் கொண்டுமுள்ளனர். எதிர்வாதமின்றி நிராகரிக்கப்பட வேண்டியது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது

இப்படியாக பல்வேறு பிறழ் நடத்தைகள் நம்மவர் சிலரால் மேற்கொள்ளப்பட்டாலும் சிலவற்றிற்கு நியாயம் கற்பிக்க முற்படக்கூடியதாக இருக்கின்றது. சிலவற்றின் தாக்கமோ நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டைப் பாதிப்புக்குள்ளாக்குவதுடன், நமது இனத்திற்கு பெரும் அவமானத்தையும் வெளிநாட்டவரிடம் நம்மவர் மட்டில் வெறுப்புணர்வையும் வளர்த்து, அதன்மூலமாக நமது சுதந்திரப் போராட்டத்திற்கான ஆதரவைத் திரட்டுவதில் பின்னடையச் செய்கின்றன.

சுயநலம் என்ற சொல்லை பொதுவான காரணம் என்று காட்டி இந்த விடயத்தில் உள்ள உண்மைநிலையினை மறைத்து விடாமல் உண்மையை நம் உள்ளத்திலிருந்து வரவழைப்போம். சுயவிமர்சனத்திற்கு இடங்கொடுத்து நம்மை நாமே புனிதப்படுத்துவோம். 'உன்னையே நீ அறிவாய்' 'உன்னைத் திருத்து உலகம் திருந்தும்' இந்த முதுமொழிகளை நினைவு கூர்ந்து நம்மை நாமே நமது மனச்சாட்சியின் துணை கொண்டு கேட்போம். நமது சமுதாயச் சீர்கேடுகளோ-டுடன் இணைய நாம் விரும்புகின்றோமா? எங்கும் எதிலும் பேதம் இருக்கக் கூடாது. என்பதனை நாம் ஏற்க விரும்புகின்றோமா? ஆம் என்று விடை பகரும் எதிர்கால மன்னர்கள் - இன்றைய இளந்தலைமுறையினர் எத்தனை பேருளர்? சுயதேடல்போம் பகிரங்கமாக - நாலுபேர் பார்க்க - அம்பலத்தில் அல்ல, நம் மனச்சான்றுகளுக்குள். இதற்கு இயக்கம் தேவையில்லை. ஆர்ப்பாட்டம் தேவையில்லை. ஆயுதமும் தேவையில்லை. நேர்மை - உண்மை - உழைப்பு இந்த மூன்றும் போதும். நமது சமுதாயத்தைச் சீரமைக்க. நாம்தான் அதன் சிற்பிகள், நாம் வைத்திருக்க வேண்டிய உளிகள் உண்மை - நேர்மை - உழைப்பு என்பன. உறுதி பூணுவோம், ஊக்கமுடன் செயற்படுவோம் வளரும் நம் சமுதாயம், மிளிரும் அதன் பெருமை.

"நம்மையே நாம் அறிவோம்"

"நம்மை திருத்துவோம்
நாடு திருந்தும்"



படிப்பகம்

padippakam



இவன்: எறும்பைக் காலால் மிதித்தேன் அதற்குப்போய் கன்னத்தில் அறைந்துவிட்டார் எங்கப்பா!

அவன்: எதற்காக அப்படிச் செய்தாராம்?

இவன்: எறும்பு எங்கப்பாவின் முதுகின் மேல் ஊர்ந்து கொண்டிருந்தது.

நன்றி - சிரிதம்

நோயாளி:- ஐயய்யோ.. என்ன நர்ஸ் நீங்க! டாக்டர்கிட்ட எனக்கு காது ஆபரேஷன் என்பதைத் தப்பாச் சொல்லிட்டீங்களே.?

நர்ஸ்:- கவலைப்படாதீங்க... எங்க டாக்டர் ஞாபக மறதிக்காரர். காதுன்னு சொன்னதில்தான் உங்களுக்குச் சரியா கண் ஆபரேஷன் செய்வார்!...

## என்று மாறும்...


தமிழ் அன்னை ஈன்றெடுத்தாள்
தரணியில் ஏழை
அன்றிந்த அன்னை நிலம் அனைத்தும்
அடக்கு முறை
தரணி எங்குமே தமிழ் அன்னையை
அடக்கி விடாதே
தரணி நிலமே தாங்கொணாத்
துயர். தமிழ் மகனே. உன் நிலை
என்று மாறும்...

இனியவன்



படிப்பகம்

padippakam




டக்...டக்... என்ற பெரும் சத்தத்துடன் இயங்கிக்கொண்டிருந்தது அந்த மின்தறி நிலையம். இடைக்கிடை இயந்திரங்களின் சத்தங்களையும் மீறி எழுகின்றது இளம் பெண்களின் சிரிப்பொலி. உள்ளே வண்ண வண்ண நூல்களின் மத்தியில் பல வண்ண ஆடைகளை நெசவு செய்துகொண்டிருந்தார்கள் பெண்கள். அவர்களின் கண்கள் மட்டும் அங்கும் இங்கும் அலைபாய்ந்த வண்ணம் இருக்கின்றது. ஓடும் சக்கரங்கள் ஒழுங்காக ஓடுகின்றதா? உள்ளிருந்து வரும் நூல்கள் அறுபடாமல் வருகின்றதா? என்பதையும் மாறி மாறி படபடக்கும் விழிகளுடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பெண்களில் ஒருத்தியாக வசந்தியும் வேலையில் கவனம் செலுத்திய வண்ணம் இருக்கின்றாள்.

ஓர் ஏழ்மையான குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்து ஏழ்மையிலேயே 24 வருடங்களை

படிப்பகம்

padippakam

ஓட்டியவள். இவளிற்கு ஒரு தம்பியும், இரண்டு தங்கைமாரும் உளர். தகப்பனின் விவசாயத்தால் வரும் பணத்தைக் கொண்டு பிள்ளைகளின் பசியைப் போக்கமுடியாமல் தவித்த தாயின் நிலைகண்டு இருபது வயதிலேயே இந்த நெசவாலையில் வேலைக்குச் சேர்ந்தாள். நாலு வருடமாக தானுண்டு, தன்வேலை-யுண்டு என்று என்று கவலையற்று இருந்த வசந்தியை விதி தன்னுடன் விளையாட இருகரம் நீட்டி வரவேற்றது.

"ஹலோ வசந்தி ராத்திரி என்ன சிவராத்தி-ரியா?, இவ்வளவு நித்திரைகொள்கின்றீர்?" "அம்மா போங்க கண்ணன் உங்களிடம் எத்தனைதரம் சொல்லுறது உங்-களின் பகிடி விளையாட்டெல்லாவற்றையும் தனியாக வைத்-துக்கொள்ளுங்கோ இங்கு girls (கேள்ஸ்) க்கு முன்னால் வேண்டாமென்று girls எல்லாம் என்னைப் பகிடி பண்-ணினம்." "பகிடிபண்ணினால் பண்ணட்டுமே எங்க-ளுக்கென்ன பயம் நாங்கள்தானே வருங்காலத்தில் தம்பதிகளாக மாறப்போகின்றோம். பகிடிக்குப் பயந்-தால் நாம் வாழமுடியாது வசந்தி." "சரி, சரி உங்கள் வேதாந்தத்தை விட்டுவிட்டு அங்கு ராணியின் மெசினில் ஏதோ பிழையாம் போய்ப்பாருங்கள். மெசினில் பிழை-யென்றால் உங்களிடம் சொல்வதற்கு என்னிடம் சொல்-கின்றார்கள்." "அது சரி வசந்தி உம்மிடம் சொன்னால் நீர் ஏன் என்னிடம் சொல்கின்றீர் அவர்கள் தேவையென்றால் என்னிடம் கேட்கலாம் தானே." "இதை நீங்கள் போய் அவர்-களிடமே கேளுங்கள் இப்போ என்னை விடுங்கள் நான் வேலையைப் பார்க்க வேண்டும்." "ஏதோ நீர் வேலை செய்து கிழித்துத்தான் இந்த நெசவு நிலையமே இயங்குகின்றது என்ற எண்ணம் உமக்கு." "இல்லையில்லை உங்களுடை வேலையா-லதான் இயங்குது." "என் வேலையால இயங்குதோ." "இல்லையோ இந்த மெசினெல்லாம் என்னால்தான் இயங்குது." "சரி சரி போய் ராணியின் மெசினைப்பாருங்கோ அவள் காலமை தொடக்கம் வேலைசெய்ய முடியாமல் இருக்கின்றாள்." ராணியின் மெசினைப் பழுதுபார்ப்பதற்காக அங்கிருந்து அகல்கிறான் கண்ணன்.

ஓர் நடுத்தரக் குடும்பத்தில் மூத்தவனாய்ப் பிறந்த இவனுக்கு இரண்டு தம்பிமாரும், இரண்டு தங்கைமாரும் உள்-ளனர். 18வது வயதில் தாயை இழந்தான். தகப்பனால் ஓரளவு பராமரிக்கப்பட்ட குடும்பம் இவனது ௨வது வயதின்-போது மறுமணம் செய்துகொண்ட தந்தையால் குடும்ப-பாரம் இவன் தலையிலும் விழ நேரிட்டது. நண்பர்களுடன் ஊர் சுற்றவேண்டிய வயதில் உடன்பிறப்புக்களுக்காக



படிப்பகம்

உழைக்கத் தொடங்கினான். இவன் செய்த வேலைகள் ஒன்றிரண்டல்ல. இடைக்கிடை நேரம் கிடைக்கும் போதெல்லாம் மின்இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கவும் பழகிக்கொண்டான். அதன் பலன் இந்த மின்னெசவு சாலையின் மின் இயந்திரங்களை பழுதுபார்க்கும் மெக்கானிக்காக சேர்ந்துகொண்டான். இன்று அவனுக்கு இருபத்தெட்டு வயது.

ஓர்நாள் காலை பதினொரு மணியளவில் வசந்தியின் மெசினுக்கு பக்கத்தில் உள்ள மெசின் ஒன்றை பழுதுபார்ப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான் கண்ணன். வசந்தியும் தனது மெசினை நிறுத்திவிட்டு அதற்கு சில நூல்களை முடிந்துகொண்டிருந்தாள். நூல்களை முடிந்து சரிபார்த்தபின் தனது மெசினை இயக்குவதற்காக மெசின் இயங்க மின் இணைப்பை (சுவிச்) கொடுக்கும் அதை-யினுள் நுழைந்தாள் வசந்தி. கட கடவென மெசின் இயங்க ஆரம்பித்ததும் ஆ! அம்மா.. என்று அலறியவாறு கண்ணன் நிலத்தில் வீழ்ந்தான். அவன் கையிலிருந்து இரத்தம் சீறிப் பாய்ந்தது. ரத்தத்தைக் கண்ட மற்றைய பெண்களும் அலறினார்கள். வசந்தியும் ஓடிவந்தாள். என்ன நடந்தது என அறியுமுன்பே அவர்களுக்கு சில விடைகள் கிடைத்தது. மெசின்களைப் பார்த்தார்கள் அங்கு வசந்தியின் மெசினுக்குப் பதிலாக கண்ணன் பழுதுபார்த்துக் கொண்டிருந்த மெசின் கடகடவென இயங்கிக் கொண்டிருந்தது. ஆம் நிலைமை எல்லோருக்கும் புரிந்து விட்டது. வசந்தி தன்னுடைய மெசினுக்குப் பதிலாக தவறுதலாக கண்ணன் பழுது பார்த்துக் கொண்டிருந்த மெசினின் இயக்கத்திற்கு மின் இணைப்பைக் கொடுத்ததும் இதை அறியாமல் மெசினுள் கை வைத்திருந்த கண்ணனின் கையில் மெசின் உருளை-யொன்று அடித்து அவன் கைவிரல்களையே நொருக்கி விட்டது. உடனே கார் ஒன்று கொண்டுவரப்பட்டு கண்ணன் அதன்மூலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சைக்காக ஒருமாதகாலம் தங்கியிருந்தான்.

உன்னால்தான் கண்ணனுக்கு இந்த நிலைமை என்ற தோழியர்களின் பேச்சுக்களையும், உன்னால்தான் கண்ணனுக்கு இந்த நிலைமை என்ற மனச்சாட்சியின் உறுத்தலையும் தாங்கமுடியாமல் தினமும் ஒருவேளையாவது வைத்தியசாலைக்குச் சென்று கண்ணனைப் பார்த்து வந்தாள் வசந்தி. சிலவேளைகளில் சாப்பாடும் கொண்டு செல்வாள். தன் கவலையீனத்தால் காயம் ஏற்பட்ட சகதொழிலாளி

padippakam

என்ற முறையில் சென்று கதைத்து வந்த வசந்தியின் மனதில் ஏதோ ஓர் இனம் புரியாத அன்பு கண்ணன் மேல் வளரத் தொடங்கியது. நாளடைவில் அதுவே காதலாக மலர்ந்து கனியவும் செய்தது. ஆம்! இன்று இருவரும் காதலராகிக்கொண்டார்கள். இவர்கள் இருவரும் இணைந்ததில் தோழியர்களுக்கும் நிறையப் பங்குண்டு. ஏனெனில் வசந்தி கண்ணனை மனதில் நினைக்குமுன் இவர்கள்தான் வசந்தியையும் கண்ணனையும் இணைத்துப் பல கவிதைகளைப் பாடித்தீர்த்தார்கள். அவர்களின் பகிடி வார்த்தைகளே வசந்தியின் மனதில் ஓர் சஞ்சலத்தை உண்டாக்கி அச்சஞ்சலமே இன்று ஓர் காதல் சரித்திரமாக உருவெடுத்தது.

கண்ணனின் கையை இலங்கை டாக்டர்கள் ஒருமாதிரி வெட்டிக்கொட்டி பொருத்தி நல்லபடியாக சுகமாக்கி அனுப்பிவிட்டார்கள். ஒருமாதத்தின் பின் அன்று கண்ணன் வேலைக்குச் சென்றான். அவன் தொழிற்சாலையின் வாசலில் வந்தவுடனேயே "கையுடைத்து காதல் பெற்ற கண்ணனே வருக" இது ஒருத்தி, "காதல் பெற இரத்தம் சிந்திய காதல் மன்னனே வருக" இது இன்னொருத்தி இப்படியே எல்லாப் பெண்களும் காதல் கவிதை பாடியே வரவேற்றார்கள். எல்லாப் பெண்களின் கேலிக் கவிதைகளுக்கும் ஓர் அசட்டுச் சிரிப்புடன் நன்றி கூறிய வண்ணம் தன் வேலையைக் கவனிக்க உள்ளே சென்றான் கண்ணன்.

காலச்சக்கரம் கடுகதி வேகத்தில் சென்றது. இன்றுடன் கண்ணன் வசந்தி காதலர்களாக மாறி இரண்டு வருடம் பூர்த்தியாகிவிட்டது. இந்த இரண்டு வருடமும் இருவரும் கை கோர்த்த வண்ணம் கற்பனையில் இந்த உலகத்தையே சுற்றி வந்தார்கள். எங்கு சென்றாலும் மகிழ்ச்சி மொத்தத்தில் இந்த மனித வாழ்க்கையே மகிழ்ச்சி போல் அவர்களுக்குத் தென்பட ஆரம்பித்தது.

இரண்டு வருடகாலமாக ஆழ்ந்த உறக்கத்திலிருந்த விதி என்னும் தேவனை யாரோ இருவருடைய கலகலத்த சிரிப்பொலி திடீரென எழுப்பியது. தூக்கக்கலக்கத்துடன் கோபமாக எழுந்த விதி என்னும் தேவன் யார் என்னை எழுப்பியது என்று உலகெல்லாம் உற்று நோக்கித் தேடினான். சிட்டுக் குருவிபோல் சிறகடித்துப் பறந்தும் வண்டினம்போல் பாடிய வண்ணம் வட்டமிட்டும் திரிந்த இந்த இளம் சிட்டுக்களைக் கண்டான். அவன் சிந்தனை செயற்பட்டது. இரண்டு வருடமாக இப்படியா மகிழ்ச்சியுடன் வாழ்கின்றீர்கள், விட்டேனா பார் இவர்களை என்று



படிப்பகம்

padippakam

நிலையை முறுக்கிய வண்ணம் எழுந்தான். பாய்ந்தான் இப் பூலோகத்தின் மண்மீது. மனம் பதைபதைக்க

ஓர்நாள் மாலை நாலுமணியளவில் கண்ணன் வேலையால் வீட்டிற்கு வந்தான். அங்கு தன் தந்தையுடன் மேலும் இருவர் இருந்து கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். இதைப் பொருட்படுத்தாது உள்ளே சென்று உடைமாற்றிக் கொண்டிருந்த கண்ணனை தந்தை அழைப்பதாகத் தங்கை வந்து கூறினாள். உடனே தந்தையிடம் சென்றான் கண்ணன். அவனை உட்காரும்படி கூறிவிட்டுச் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே விஷயத்திற்கு வந்தார் அவனின் தந்தை. தம்பி உனக்கோர் திருமணம் பேசி முடிவெடுத்துவிட்டோம். நாளையே பதிவுத்திருமணம் செய்யலாமென்றிருக்கின்றோம். உன்முடிவு என்னமாதிரி என்று கேட்டார் கண்ணனின் தந்தை. இதைக் கேட்ட கண்ணனுக்கோ இமயமே இடிந்து தன் தலைமேல் விழுந்தமாதிரி இருந்தது. இருந்தும் அவன் நிலைமையைச் சமாளிப்பதற்காக அப்பா எனக்கேன் இப்போது திருமணம். தங்கைமார்களின் திருமணம் முடியட்டும் என்றான். அதற்கு அங்கிருந்த ஓர் பெரியவர் தம்பி நீ மணம் முடித்தால் பின்பும் தங்கைமாரின் திருமணத்தைச் சிறப்பாக நடத்தலாம். காலத்திற் பயிர் செய்ய வேண்டும். உனக்கும் வயதாகிவிட்டது என்று வேதாந்தம் பேசினார். கண்ணனுக்கோ அங்கிருந்த பெரியவரின் முகத்தில் அறைய வேண்டும் போலிருந்தது. ஆனால் தந்தை அருகில் இருப்பதால் பொறுத்துக் கொண்டான். கண்ணனும் அவர்களுக்கு முடிந்தவரையில் பல சாட்டுப் போக்குகளைச் சொன்னான். ஆனால் அவனது தந்தையும், மற்றவர்களும் எதற்கும் இணங்குவதாகத் தெரியவில்லை. இறுதியில் இனிஒன்றும் செய்யமுடியாது என்று ஆவலுடன் தன்னுடைய காதல் விவகாரத்தை எல்லோருடனும் கூறி தங்கைமாரின் திருமணத்தின்பின் காதலித்தவளையே திருமணம் செய்யப்போவதாகக் கூறினான். அதற்குத் தந்தையோ நீ காதலிப்பதோ எனக்கு முன்னமே தெரியும். அவர்களின் வீட்டைப்பற்றியும் எனக்குத் தெரியும். எல்லாம் தெரிந்தபடியால் தான் இத்திருமணத்தை முடிவுசெய்துள்ளோம் என்றார். எல்லாம் தெரிந்துமா இப்படி அவசரக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்கின்றீர்கள் என்றான் கண்ணன்.

தம்பி உனக்கோ எங்கள் வீட்டு நிலைமை நன்றாகத் தெரியும். நான் சொல்வதைக் கேட்க



படிப்பகம்

padippakam

வேண்டிய வயதில் நீ இல்லை. உன் தங்கைமாரின் திருமணத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு எங்களிடம் காணியோ, காசோ, நகையோ எதுவும் இல்லை. நீ விரும்புவதாகக் கூறும் பெண்வீட்டாரோ எங்களிலும் பார்க்க வறுமை நிலை வாய்ந்தவர்கள். உன் தங்கைமாருக்கு கொடுப்பதற்கு உன்னிடமோ என்னிடமோ எதுவுமில்லை. அதேபோல்தான் உனக்குத் தருவதற்கும் நீ விரும்பிய பெண் வீட்டாரிடம் எதுவுமில்லை. வறுமையும் வறுமையும் ஒன்று கூடினால் வாழ்க்கை முழுவதும் வறுமையே தொடர்ந்து வரும். இதனால் நீயும் சந்தோசமாக வாழப்போவதில்லை. உன் தங்கைமாரையும் சந்தோஷமாக வாழவைக்கப் போவதில்லை. அண்ணன் இருக்கின்றான் என்று ஆறுதலாக இருக்கும் அவர்களை அனாதைகள் ஆக்கிவிட முயலாதே. இது ஐந்து பிள்ளைகள் இருக்க மறுமணம் செய்துகொண்ட ஓர் தந்தையின் அறிவுரை. கண்ணனுக்கோ என்ன சொல்வதென்றே தெரியாத நிலைமை. உன்னை இன்று விட்டோமா பார் என்று அவர்களும் ஒருவர் மாறி ஒருவராக எத்தனை உவமைகள் எத்தனை பழமொழிகள் எத்தனை புகழுரைகள் மணம் பேசும் பெண்ணின் சீதனத்தின் தொகை, போட்டுவரும் நகையின் பெறுமதி, காணிகளின் தொகை, கல்வீட்டின் பெறுமதி எல்லாமாக ஐந்து இலட்சம் தேறும் இது தந்தையின் அங்கலாய்ப்பு. இப்படி இரண்டு மணிநேர வாக்குவாதம். கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். கல் கரையுதோ இல்லையோ கண்ணனின் காதல் கரைந்தது. ஆம் ஈற்றில் கண்ணன் தோல்வியடைந்தான். அடுத்தநாட் காலை பத்துமணிக்குப் பதிவுத் திருமணம் செய்வதென நாள், நேரம் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட அதே நேரம் மணம் செய்யப்போகும் பெண்ணின் நிறமென்ன, உயரமென்ன என்று எதுவுமே தெரியாத கண்ணன் ஓடிச் சென்று தன் படுக்கையில் விழுந்து கண்ணீர் சொரிந்தான். இதைவிட வேறெதுவும் செய்ய அந்நேரம் அவனுக்குத் தெரியவில்லை. கண்ணனின் தம்பி, விஷயம் அறிந்த அவனின் நண்பர்கள் கண்ணன் வீட்டிற்கு ஓடிச் சென்றார்கள். ஆனால் நண்பர்களுடன் தனியாக எதுவும் பேசமுடியாதளவிற்கு தந்தையின் பலத்த பாதுகாப்பு கண்ணனுக்கு இருந்தது. எந்நேரமும் கண்ணனுக்குப் பக்கத்திலேயே அவன் தந்தையிருந்ததால் நண்பர்களுக்கும் அவனுடன் எதுவும் பேசமுடியாமல்

படிப்பகம்

சர்வதேச மன்னிப்புச் சபை உறுப்பினர் செல்வி ஜோகனா நீடர்முல்லர் (MISS. JOHANNA NIDERMÜLLER) உதவியினால் சர்வதேச மன்னிப்புச் சபை உறுப்பினர்கள் நூறுபேருக்கு தமிழ்ப் பெண்கள் மூலம் தமிழ் உணவு தயாரித்து விற்பனை செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் இலாபப்-பணமாக 435 D.M கிடைத்தது. இப்பணத்துடன் செல்வி ஜோகனா நீட-ர்முல்லரும் மேலதிகமாக 65 D.M ஐ சேர்த்து 500 D.M ஆக இலங்கையில் பாதிப்படைந்திருக்கும் குழந்தைகளுக்கு உதவும் வகையில் வணக்கத்-திற்குரிய பிதா தியோகுப்பிள்ளை அவர்களுக்கு 25.02.1987 அன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



P.O.Box 10 03 40 - D-5600 Wuppertal 1
Telefon (2 02) 48 81 - Telex 8 592 222
S.W.I.F.T.-Adresse: WUPS DE 33 - 5600 Wuppertal

035265

Bezogener/Drawee
/94190006
WESTDEUTSCHE LANDESBANK
GIROZENTRALE DUESSELDORF

4000 DUESSELDORF

Zahlen Sie gegen diesen Scheck an/
oder Order
Pay against this cheque to / or order

& Co.

RT. REV.DR. B.DEOGUPILLAI
BISHOP OF JAFFNA
BISHOP'S HOUSE,POB 2
JAFFNA/SRI LANKA

**Stadtsparkasse Wuppertal** - P.O.Box 10 03 40 - D-5600 Wuppertal 1
S.W.I.F.T.: WUPS DE 33 - Tel. (2 02) 48 81 - Telex 8 592 222
**Scheck-Nr./Cheque-No.:** 5702200191 3

Währung/Currency: DM — DEUTSCHE MARK
Betrag/Amount: ************500,00

Betrag in Worten / Amount in words
*FUENF***NULL***NULL*00/100*

Ausstellungsort: WUPPERTAL
Datum/Date: 87/ /20

Stadtsparkasse Wuppertal

padippakam
படிப்பகம்

போய்விட்டது.

அன்று காலை பத்துமணிக்கு காதும் காதும் வைத்தாற்போல் கண்ணனுக்கு பதிவுத் திருமணம் நடந்தது. எத்தனையோ நண்பர்களை தன்னகத்தே கொண்ட கண்ணனின் பதிவுத் திருமணத்திற்கு எந்தவொரு நண்பனும் போகவில்லை. பதிவுத் திருமணம் முடிந்து பெண்வீட்டில் விருந்துண்டு மதியம் இரண்டு மணியளவில் வீடு திரும்பினான் கண்ணன். வீட்டில் அவனுக்காக அவன் நண்பர்கள் காத்திருந்தனர். இனி என் மகனை யாராலும் எதுவும் செய்துவிடமுடியாது என்று எண்ணிய கண்ணனின் தந்தை மகனை நண்பர்களுடன் பேசவிட்டு வெளியே சென்றுவிட்டார். கண்ணனின் தந்தை வெளியேற மட்டும் பார்த்திருந்த நண்பர்கள் பத்தொன்பது மணிநேரமாக தம்முள் அடக்கி வைத்திருந்த கோபத்தின் வெப்பம் சொற்களில் (வார்த்தைகளில்) பொறியாகப் பறந்தது. கண்ணனை பேசித்தீர்த்தார்கள், பழித்துரைத்தார்கள், பாவக்காரன் என்றார்கள் உன்னை நண்பன் என்று கூறவே நாக்கு கூசுகின்றது என்றார்கள், உன்னை நம்பிய வசந்திக்கு நீ கொடுக்கும் காதல் பரிசு இதுவா என்றார்கள். அரை ஆண்டு பேசக்கூடிய எல்லாவற்றையும் அரைமணி நேரத்தினுள் பேசித்தீர்த்தார்கள். அவர்களுடைய வார்த்தைகள், பேச்சுக்கள் எல்லாவற்றையும் கேட்ட வண்ணம் இடிந்து தலை நிமிராமல் மௌனமாக இருந்தான் கண்ணன். அவனது மௌனம் நண்பர்களின் ஆத்திரத்தை மேலும் கூட்டியது. அவர்கள் அவனை வாய்க்கு வந்தபடி பேசிவிட்டு கோபத்துடன் எழுந்து சென்றுவிட்டார்கள்.

அன்று மாலை நான்கு மணியளவில் கண்ணனின் தம்பி கண்ணனின் நண்பனை சுரேஸிடம் ஓடிவந்தான். சுரேஸ் அண்ணை [illegible] அண்ணை மருந்து குடிச்சு வைத்தியசாலைக்குக் கொண்டு போய் விட்டார்கள். என்று கூறிமுடிக்குமுன் வைத்தியசாலைக்கு விரைந்தான் சுரேஸ். விஜயமூர்த்தி மற்றும் சில நண்பர்கள் ஓடிவந்தார்கள். டாக்டர்களும் மிகுந்த பிரயாசையுடன் கண்ணனைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் நேரம் போகப்போக டாக்டர்களின் நம்பிக்கை குறையத் தொடங்கியது. உடனே அவர்கள் கண்ணனைப் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டுபோகுமாறு கூறி அம்புலன்ஸ் வண்டிக்கும் ஏற்பாடு செய்தார்கள்.

padippakam

அன்றுமாலைதான் கண்ணன் திருமணம் செய்துவிட்டான். என்னை ஏமாற்றிவிட்டான். என அறிந்த வசந்திக்கு தன் வாழ்வு அஸ்தமித்துவிட்டது, தன் வசந்தம் மறைந்துவிட்டது இந்த உலகமே இருண்டுவிட்டது என் இதயமே வெடித்துவிடும் போல் இருக்கிறது. அவள் அழுதாள் அவதிப்பட்டாள் சிறிது நேரத்தில் அவள் அழுகை ஆத்திரமாக மாறியது. என்னை ஏமாற்றியவனை நாலு வார்த்தைகள் — திட்டியே தீர்க்க வேண்டும் என்ற ஆவேசத்தில் எழுந்து கண்ணன் வீட்டை நோக்கிச் சென்றாள். வசந்தி கண்ணன் வீட்டை அண்மித்ததும்தான் அவன் விஷமருந்தி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள் என அறிந்தாள். பாவம் அந்தப் பேதைக்கு ஆத்திரம் மறைந்து அளவுகடந்த பரிதாபம் கண்ணன்மேல் ஏற்பட்டது. அவளையுமறியாமல் அவள் கால்கள் வைத்தியசாலையை நோக்கி ஓடின. அவள் வைத்தியசாலையை நெருங்கவும் கண்ணனை ஏற்றிய அம்புலன்ஸ் அங்கிருந்து நகரவும் சரியாகவிருந்தது. கண்ணனை ஓர் முறையாவது பார்க்க முடியாமல்போன வசந்தி அங்கு நின்ற அவன் நண்பர்களிடம் கண்ணன் நிலைபற்றி விசாரித்தாள். அவர்கள் வெளிப்படையாகவே கண்ணன் பிழைப்பது கடினம் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள் என்றார்கள்..

வசந்தி தன்வீட்டை நோக்கி நடந்தாள். அவள் கால்கள்தான் நடந்தனவே தவிர மனமோ கண்ணனை நினைத்து அழுதவண்ணம் இருந்தது. வீட்டை அடைந்தவள் படுக்கையில் விழுந்தாள் அழுதாள். தாரைதாரையாகக் கண்ணீர் வடித்தாள். தாய் சாப்பிட எழுப்பியபொழுது தனக்குப் பசிக்கவில்லை என்று கூறிவிட்டுப் படுத்துவிட்டாள். அன்றைய நிகழ்ச்சி, வசந்தியின் மனநிலை எதையும் அறியாத வசந்தியின் தாயார் பேசாமல் போய்விட்டாள். அடுத்த நாள் அதிகாலை ஐந்துமணி, அம்மா.. அம்மா.. அக்காவைக் காணவில்லை எனக் கூறினாள் வசந்தியின் தங்கை. அவள் வெளியில் போய் இருப்பாள் பேசாமல் படு என்றாள் தாய். இல்லையம்மா அக்கா வெளியில் போவதானால் என்னையும் எழுப்புவா. எழும்பித் தேடிப்பாருங்கள் என்றாள் அவள். தூக்கக் கலக்கத்துடன் எழுந்த தாய் வீட்டினுள்ளும் வெளியேயும் தேடினாள் வசந்தியைக் காணவில்லை. அவசரமாக மகனை எழுப்பினாள். தம்பி அக்காவைக் காணவில்லை தேடிப் பார் என்றாள் தாய். எல்லோரும் எழுந்தார்கள் ஆளுக்கொரு பக்கமாக ஓடினார்கள் அயலெல்லாம் தேடினார்கள் இரண்டு மணிநேரம் அந்தச் சுற்றுவட்டாரம்



படிப்பகம்

padippakam

எல்லாம் தேடி அலைந்தார்கள் வசந்தியைக் காணவில்லை. உடல் களைக்க உள்ளம் பதைக்கத் திரும்பி வந்தார்கள். தம்பி முகத்தைக் கழுவிட்டு ஓடிப்போய் ராணிவீட்டில் பார்த்துவிட்டு வா. தாய் மகனுக்குக் கூறினாள். அவன் முகம் கழுவக் கிணற்றடிக்கு ஓடினான். கிணற்றில் தண்ணீர் அள்ளி முகம் கழுவுகையில் தண்ணீர் சரியாகக் கலங்கி-யிருப்பதைக் கண்டான். உடனே அவன் உள்மனம் ஒருவித பயத்தில் அழ ஆரம்பித்தது. ஐயோ கடவுளே அப்படி எதுவும் நடந்திருக்கக் கூடாது. அவன் இதயம் அலறியது. அம்மா இங்கு ஓடிவாங்கோ கிணற்றுத் தண்ணீர் சரியாகக் கலங்கியிருக்கு என்று கத்தினான். அவன் போட்ட சத்தத்தில் அவன் வீடு உட்பட அயல் வீட்டுக்காரர் எல்லோரும் ஓடிவந்தார்கள் எல்லோரும் கிணற்றினுள் பார்த்தார்கள். விடிந்தும் விடியாத நிலை கிணற்றினுள் எதுவும் தெரியவில்லை. உடனே அயல் வீட்டுக்காரர் ஒருவர் கிணற்றினுள் இறங்கினார். நீரி-னுள் மூழ்கியவர் வசந்தியின் உடலுடன் மேலே வந்-தார். மேலே நின்ற எல்லோரும் அலறினார்கள். விழுந்-தார்கள் புரண்டார்கள் இருந்தும் காதலர்களின் பிரிவைத் தாங்கமுடியாது என நினைத்துத் தன்னைத்-தானே அழித்துவிட்ட அந்தப் பாவையின் உயிரை மீட்க முடியாமல் போய்விட்டது. அழுது ஓய்ந்த அவர்-கள் வசந்தியின் மரணச்சடங்கிற்கான ஆயத்-தங்களைச் செய்யத் தொடங்கினார்கள்.

அன்று காலை எட்டுமணியளவில் டாக்டர்களின் பெரும்முயற்சிகளின் பலனாகக் கண்-ணனுக்கு சுயநினைவு திரும்பியது. அவன் வாயெல்-லாம் அவிந்து போய்விட்டது. டாக்டர்கள் அவனுக்கு தேநீர்கள் கொடுக்கக்கூடாது என்று கூறிவிட்டார்-கள். இரண்டு வாரச் சிகிச்சையின்பின் கண்ணன் வீடு வந்தான். அவன் வீடுவரமட்டும் வசந்தி இறந்த விடயம் அவனுக்குத் தெரியாது. அவன் வைத்தியசாலையில் இருக்கும்போது அவனைப் பார்க்கப் பலமுறை வந்த மனைவியைப் பார்க்க அனுமதிக்காமல் திரும்பவும் தற்கொலை செய்வேன் எனக் கூறினான். திருமணம் செய்துவைத்தவர்கள் எல்லோ-ரும் இனிஎன்ன செய்வது என்று திண்டாடினார்கள். கண்ணனின் நண்பர்கள் அவனுக்குப் புத்திசொல்லத் தலைப்-பட்டார்கள். மச்சான் அன்று நாங்கள் தெரியாமல் பேசி விட்டோம் நடந்தது நடந்துபோச்சுது. என்ன இருந்தாலும்


படிப்பகம்

padippakam

அவளைப் பதிவுத் திருமணம் செய்துவிட்டாய். இனி அவள்தான் உனக்குச் சொந்தம். சந்தோஷமாக வாழ்க்கையைத்- தொடங்கு. என்று பலரும் பலவித புத்திமதிகள் கூறினர்கள். ஆனால் வசந்தி இறந்ததைப்பற்றிக் கூறவில்லை. கண்ணனோ அவள் வந்தால் நான் கட்டாயம் சாவேன் என்று சாவில் பிடிவாதமாகவே இருந்தான். நண்பர்களும் முடிந்தவரை- யில் கூறிப்பார்த்து இனிமுடியாது என்ற நிலையில் விடை- பெற்றுச் சென்றார்கள்.

வைத்தியசாலையால் வந்து ஒருவாரகால- மாக எங்கும் வெளியில் செல்லாமல் இருந்த கண்ணன் அன்று நண்பன் ஒருவனைச் சந்திப்பதற்காகச் சென்றான். வழியில் தன்னுடன் நெசவுசாலையில் வேலைபார்த்த ஒரு பெண்ணைக் கண்டு கதைத்தான். அவளோ கதையின் மத்- தியில் வசந்தி இறந்தது இறந்தவிதம் எல்லாவற்றையும் கூறிவிட்டாள். நண்பன் வீடுசெல்லச் சென்ற கண்ணன் நடுவழியுடன் திரும்பி வீடுவந்தான். இனி என்ன செய்வது என்று தெரியாமல் திண்டாடினான். ஏன் என்னை உயிர் பிழைக்க வைத்தாய் இறைவா-- என இறைவனைத் திட்டினான். இனி என்னால் இந்த உலகத்தில் வாழமுடியாது. எனக்காக வசந்தி இறந்தாள். அவள் இறந்தபின் நான் ஏன் வாழ- வேண்டும் என்று விஷம் அருந்துவது என்ற முடிவுக்கு வந்தவன் தனிமையான இடத்திற்குச் சென்று விஷத்தை அருந்தினான் தான் யாருடைய தொந்தரவுமில்லாமல் நிம்- மதியாகச் சாகமுடியும் என்று எண்ணியவனின் எண்- ணத்தின் மறுபக்கத்தில் தன்னையே நம்பி வாழ்ந்து வரும் தங்கைமாரின் எண்ணம் அடிமோதியது. காதல் தோல்விக்கும் கடமைக்கும் இடையில் பெரும் போராட்டம் நடத்திய அவன் மனமோ கடைசி- யில் கடமையே பெரிதெனக் கூறியது. அன்றுதொட்டு இன்று ஐந்து வருடங்களுக்குமேல் பதிவுத் திருமணம் செய்த மனைவியின் முகத்தையே பார்க்காமல் தன் சகோ- தரர்களுக்காக மறந்த தன் காதலியை மனதில் இருத்தி என்றும் திரும்பாத அந்த இழந்த உறவின் நினைவில் கண்ணன் வாழ்ந்துகொண்டிருக்கிறான்.


போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும்
போகட்டும் இந்நாயகன் கண்ணனுக்கே

சுபம்



படிப்பகம்

padippakam



# அரசியல் தஞ்சம் கோருவோருக்கான
# புதிய சட்டம் பற்றிய தகவல் கூட்டம்

ஜேர்மன் அரசாங்கம் 1987ம் ஆண்டு தைமாதம் அரசியல் தஞ்சம் கோருவோருக்கான புதிய சட்டத்தை உருவாக்கியது இரண்டு சட்டத்தரணிகள் இச்சட்டம் பற்றி விளக்கங்கள் கொடுத்து உங்கள் கேள்விகளுக்கும் விடை அளிப்பார்கள். எல்லா அகதிகளும் இக்கூட்டத்திற்கு வருமாறு அழைக்கப் படுகின்றார்கள்.

**இடம்** VOLKSHOCHSCHULE WPPERTAL
AUER-SCHUL STR 20
5600-WUPPERTAL-1

**திகதி** சித்திரை 2ம் திகதி 1987ம் ஆண்டு
பிற்பகல் 7 மணிக்கு.

— எல்லோரும் அழைக்கப்படுகின்றார்கள் —

padippakam

ஜேர்மன் அரசாங்கம் 1987ம் ஆண்டு தைமாதம் அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான சட்டங்கள் சிலவற்றை மாற்றி புதிய சட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. புதிய சட்டம்பற்றிய சிறுவிளக்கங்களைக் கீழே தருகிறோம்.

•• — ••• — ••• — ••• — ••

1987ம் ஆண்டு தைமாதத்திற்கு முன் DULDUNG இரண்டு வகையாக இருந்தது.

A) முதல் வகையானது NORDRHEIN-WESTFALEN இல் அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர் ஒருவர் மீண்டும் ஒரு அரசியல் தஞ்சக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் போது வழங்கப்பட்டது.

b) இரண்டாவது வகையான DULDUNG வெளிநாட்டவர் ஒருவருக்கு அரசியல் தஞ்சக் கோரிக்கை வழக்கு விசாரணை முடிந்து நிராகரிக்கப்பட்டபின் வழங்கப்பட்டது.

முதலாவது டுல்டுங் கிடைத்தவர்கள் மற்றைய அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கான சட்டதிட்டங்களுக்குள்ளாகவே அமைந்தார்கள். இப்போது புதிய சட்டத்தின்படி முதலாவது DULDUNG ஐ பெற்றவர்கள் AUFENTHALTS GESTATTUNG ஐ பெறலாம். (சட்டதிட்டங்களில் எந்தவித மாற்றமும் இல்லை.)

1987ம் ஆண்டு தைமாதம் புதியசட்டமூலம் அமுலுக்குவந்தநாளிற்கு முன் ஒருவர் அரசியல் தஞ்சம் கேட்ட நாளிலிருந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடையாவிடில் அவர் ஐந்து வருடங்களிற்குப் பின்னரே வேலைசெய்யும் அனுமதிப்பத்திரத்தைப் பெறுவார். (புதிய சட்டத்திற்குமுன் இது இரண்டு வருடமாக இருந்தது.)

BUNDESAMT ஒருவரின் அரசியல் தஞ்ச விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும்பட்சத்தில் (காலவரையின்றி) அந்நபர் வெளிநாட்டுக் காரியாலயத்தில் வேலைசெய்யும் அனுமதிப்பத்திரத்தையும், ஜேர்மனியில் சகல நகரங்களிற்கும் செல்வதற்கான அனுமதியையும் பெறலாம்.

BUNDESAMT ஏற்றுக்கொண்ட ஒருவரின் அரசியல் தஞ்ச விண்ணப்பத்தை நிர்வாக நீதிமன்றமோ அல்லது அதிலும் மேலான நீதிமன்றமோ நிராகரிக்குமேயானால் அந்நபருக்கு வெளிநாட்டு அலுவலகம் ஜேர்மனியில் சில நகரங்களுக்கும் செல்ல வழங்கப்பட்ட அனுமதி மீளப்பெறப்பட்டு DULDUNG விசா வழங்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் வேலை அனுமதிபற்றிய விளக்கங்களையும், DULDUNG பற்றிய விளக்கங்களையும் அடுத்த இதழில் தருகின்றோம்.



படிப்பகம்

padippakam

## கண்ணீர்த் துளிகள், இரத்தத் துளிகள், இரத்தத் துளிகள்

அரசியல் சம்பந்தப்பட்ட விடயம் என்று தள்ளிவிடாதீர் இதை மனிதாபிமானம் என்ற முறையில் சேர்த்துக் கொள்ளுங்கள் கடந்த சில வாரங்களுக்கு முன்பு எமது தாயகத்தில் நடந்த படுகொலைகளும் பரிதாப மரணங்களும் அங்கவீனங்களும் இரத்தத்தால் ஏற்பட்ட துர்நாற்றங்களும் எவர் மனதையும் நிச்சயம் உலுப்பிவிட்டு உறையச் செய்திருக்கும் தமிழர்கள் என்ற முறையில் இல்லாவிட்டாலும் மனிதன் என்ற முறையில் உங்களுக்கு உள் மனதில் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லையா? அன்றாடச் செய்தி போல அறிந்து அமைதியாக இருக்க முடிகிறதா? உண்மையை சொல்லுங்கள். உங்களுக்கு நேரடியான பாதிப்பு ஏற்படாவிட்டாலும் எனக்கு ஏற்பட்டுவிட்டதே அங்கு கொடூரம் அதைச் சொன்னால் "எல்லோருக்கும் ஏற்படுவது தானே" என்று சிறிய சோகப் பெருமூச்சுடன் விட்டு விடுவீர்கள். அதில் உயிரின் இழப்பு எல்லாவித மான இழப்புக்கும் ஈடுசெய்ய முடியாத ஒன்று தயவு செய்து இந்த இடத்தில் சகலதையும் மறந்து நமது மரணத்தையிட்டு கணநேரம் கண்மூடி சிந்தியுங்கள். தொடருகிறேன்....

விம்மி வெடிக்கும் அழுகை கண்களோ வைத்து கண்ணீர் என்ற வாய்க்கால் அமைத்து ஓடுவது போல எனது மன அழுகை தேக்கத்துக்கு இதை


படிப்பகம்

padippakam

வழக்காக அமைக்கிறேன். எனக்குத் தெம்பட்ட கிழப்பு போன்று பலஆயிரம் மைல்களுக்கு அப்பால், நமது இரத்தங்களைப் பிரிந்து வாடும் எத்தனை பேருக்கு ஏற்பட்டதோ நானறியேன். அந்த இரத்தங்கள் அங்கு துர்நாற்றம் வீச மூக்கைப் பொத்திக் கொண்டு இங்கு இருக்க முடிகிறதா? முடியுமா? நான் அறியேன் ஆனால் எமக்கு ஏற்பட்ட பேரிழப்புகளின் தொகையை மேலும் கூட்டாமல் இருக்க நமது உயிரற்ற உடல்களை வெளிப்போட்டுக் காத்த விடுதலை வீரர்களையும் இங்கு மறப்பதற்கு இல்லை. இந்த இடத்தில் இயக்கத்தைப் பற்றி சார்பாக எழுதுவதாக நினைக்க வேண்டாம். இதை எழுதினாலும் எழுதாவிட்டாலும் யதார்த்தமான உண்மை இதுதான் எது சரி, பிழை என்று கூற விருப்பம் இல்லை எனக்கு உயிர் ஒன்றைக் கருவாக வைத்து எழுதுகிறேன். என்ன நடந்தாலும் இங்குள்ளவர்களால் என்ன செய்யமுடியும்! ஒன்றுமே செய்ய முடியாது என்ற பதில் மட்டும் சொல்லி விடாதீர்கள் ஏதாவது செய்யுங்கள் அல்லது செய்வதற்கு சிந்தியுங்கள்.

உயிர்களின் ஓலங்கள் உங்களை உறுத்தவில்லையா? தாயகத்தில் 'ஷெல்'களின் ஒலி இங்கு செவிப்பறையில் தாக்கும் பிரமை. உருகிறதா நெஞ்சு? உறவைக் தேடுவதா போவதை பார்த்தீரோ?

இங்கே கடுங்குளிரில் எதற்காக அடுக்குகிறோம் பல ஆடைகளை. எமது மதிப்பு மிகு உயிரைப் பாதுகாக்கவே. ஆனால் அங்கே உயிரற்ற உடல்கள் அடுக்கப்பட்டு எரிகிறதே அதைப் பாதுகாக்க......



படிப்பகம்

padippakam

"ஏதோ வீட்டில் யாரோ இறந்து விட்டார்கள்
அதுதான் இன்று துயரக்கிறேன். உணர்ச்சிகளைப்
பொழிந்து தீர்க்கிறேன்" உண்மை தான் ஏற்பட்டு
விட்டதே அந்தக் கொடூரம். இதைப்படித்தும்
உனக்கு ஏற்பட்டால் என்ன செய்யப் போகிறாய்
இதன் முடிவு.... ஒரு விடிவு...

சரியே. நாவரே சதுரங்கத்தின் காய்கள்
நகர்த்தப்பட்டு விட்டன. ஆடியே தீரவேண்டும்.
அதுதான் எம் நிகழ்காலம் அடக்குமுறையென்னும்
கோரப்பற்களுக்குள் எமது நிகழ்காலம் சிக்குவதா.
தயவு செய்து சிந்தியுங்கள்....

எனது இழப்புக்காகவும் இன்னும் இறந்த
பல உயிர்களுக்காகவும். கண்ணீர் அஞ்சலி
சமர்ப்பணம். இதைமட்டும் தான் நான்
செய்யவில்லை.

இப்படிக்கு


<u>இறந்த இரத்தத்தைப் பிழிந்த வாடும்.</u>
<u>உயிர் இரத்தம்..</u>



"விழிகளில் ஈரமாகிடும்
நீரில் இரத்தமாகிடும்
ஆனாலும் இந்த மண்ணில்
அன்னியராகி விட்டார்
ஆதலால் எமது மண்ணின்
உடைமையாய் மாற்றுவோம்
போராடுவோம்"



படிப்பகம்



# கூண்டுப் பறவை

ஈழத்து வன்னியருள்

"டாண்ங்" டாங், டாண்ங்" என்று மூன்று தடவை இரவு என்றும் பாராமல் சத்தத்தை ஏற்படுத்தி விட்டு அமைதியை நாடியது அந்தச் சுவர்க்கடிகாரம். கட்டிலின் மேல் படுத்திருந்த சிந்துஜா அமைதியின்றி அவள் இதயம் அலைமோதக் காரணம் ஒன்று அன்றைய பத்திரிகையில் வந்த விளம்பரம். கண்களை மூடியும் கட்டிலின் இரண்டு பக்கமும் மாறிப்படுத்தும் கூட நித்திராதேவி எட்டிக்கூடப் பார்க்க முடியவில்லை.

ஒரு அதிபரின் குடும்பத்தில் இரண்டு அண்ணனுக்கும் இரு தங்கைகளுக்கும் இடையில் நான். அண்ணர் இருவரும் வெளிநாட்டில், வசதியான குடும்பம் என்று சொல்லவேண்டுமா? நானும் ஒரு பள்ளி ஆசிரியை. எங்கள் வீட்டிற்கும் பாடசாலைக்கும் இடைப்பட்ட தூரம் பத்து மைல்கள் ஆகும். தினமும் பஸ்ஸிலேயே பாடசாலை சென்று வரவேண்டியதாயிற்று. நான் படலையைத் திறக்கவும், மினிபஸ் ஒன்று வந்து நிற்கவும் நேரம் ஒன்றாக இருக்கும். பஸ்ஸில் சென்றுவருவதென்றால் ஒரு சத்தியாகம் நடக்கவேண்டும். இந்தச் சிரமத்தால் இந்த மினிபஸ்ஸில் சென்று வருவது வழக்கமாயிற்று. சில நாட்களில் சிலநேரம் எனக்காகக் காத்து நிற்பதும் உண்டு. காலச் சக்கரங்கள் உருண்டோட எனக்கும் அந்த பஸ் சாரதியான தியாகுவிற்கும் கண்கள் சந்தித்து புன் சிரிப்பாகமாறி, பரிவு அன்பாகமாறி காதல் என்ற அந்த புனிதமான வழியில் நின்றோம். எம் கதை சாரதியிலிருந்து சந்தைக்குச் சென்று வீடுவரை வந்து-விட்டது. அவர் எனக்காக வாங்கித் தந்த பரிசுப்பொ-ருட்கள் பல. அதில் ஒன்று என் அறையிலுள்ள சுவர்க்-கடிகாரம்.

தியாகுவை மணந்துகொள்வதால் ஏற்ப-டும் இடையூறுகள் ஏணிப்படிகள் என்பதற்குப் பல கார-ணம். தொழில் ஏற்றப்படியாக காரணங்கள் கூறி மறந்து விடு என்று வீட்டில் தடைகள். எல்லோருக்கும் என்மீது அளவற்ற பாசம். நீங்கள் இதற்குத் தடையாக இருந்தால் என் சடலம்தான் உங்கள் கரங்களில் கிடைக்கும் என்றும்

padippakam

என் புனிதமான காதலிற்குத் தடைவிதிக்க வேண்டாமென்றும் கூறிவிட்டேன்.

அன்று சனிக்கிழமையாதலால் பாடசாலைக்கு நான் செல்லவில்லை. தியாகுவின் பஸ் ஒரு லொறியுடன் மோதியதால் தியாகுவின் கால் ஒன்று முற்றாகக் கழட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது. என் வாழ்க்கையில் தென்றலாக வீசிய காற்று வேகமாக வீச புயல்தோன்றி மறைந்துவிட தியாகுவை மறக்கவேண்டிய நிலை உருவானது. தொடரான பல கேள்விகளிற்கு விடைகாண முயன்றேன். நான் ஒரு ஆசிரியை எத்தனையோ சக ஆசிரியர்களின் இல்லங்களில் நன்மை தீமைகளுக்குச் செல்லவேண்டும். பலபேரின் ஏளனப்பேச்சுக்கள், சமுதாயத்தின் நக்கல் சிரிப்பு, நாலுபேர் மத்தியில் தலைநிமிர்ந்து செல்லமுடியாத நிலை தோன்றும். புனிதமான காதல் புதிராகமாறி புதிய பாதையாகத் திசைமாறினேன்.

காற்றுள்ளபோதே என்வீட்டார் தூற்றிக்கொண்டதுபோல் எனக்கும் ஒரு முதலாளியின் மகனிற்கும் சீதனம் சீர்வரிசையுடன் என் கழுத்தில் தாலிக்கொடி ஏறியது. என் திருமணம் என்றோ அன்றே என் தொழிலிற்கு முழுக்குப் போட வேண்டும் என்பது என் கணவர் தனையின் கட்டளை. அது நிறைவேறியது. நாம் தனிக்குடித்தனம் நடத்தத் தனிவீடு சென்றோம்.

நாட்கள் நகர்ந்து செல்ல நான் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானேன். ஆனால் என் கணவரின் நடத்தைகள் போக்குகள் சிறு மாறுபாடாய் ஏற்பட ஆரம்பித்தன. தாமதித்து வீட்டிற்கு வருவார், தொழிலில் அக்கறையின்மை, மதுவிற்கும் அடிமையாகிவிட்டார். நானும் பலமுறை அன்பான முறையில் பாசத்தோடு காலைவேளையில் சந்தோஷமான நேரங்களில் இந்தத் தவறான தீய பழக்கம், இதனால் ஏற்படும் தீமை என்பவற்றை விளக்கி மறந்துவிடும்படி கூறுவேன். "ஆம்" என்று சொல்லுவார், ஆனால் மாலையில் மறந்துவிடுவார். நானும் எத்தனை நாட்களிற்குச் சொல்ல முடியும். சொல்வதெல்லாம் காற்றோடு சென்றுவிட்டதுபோல் ஆயிற்று. இத்தோடு நான் கூறும் புத்திமதிகளை நிறுத்திவிட்டேன். எமது உளறல்களை யாருக்குச் சொல்ல முடியும். சொன்னால் கிடைப்பது என்ன? ஏச்சும் பேச்சும் கேட்டு என் மனம் மரத்துவிட்டது.



கூட்டம்போட்டு கூடியிருந்து

படிப்பகம்

padippakam

மது அருந்தும்போது மாதுகளின் பேச்சுக்கள்தானே ஆரம்பமாகும். அன்று நான் கதாநாயகியானேன். வீட்டிற்கு வந்த என் கணவர் துள்ளிக் குதித்துக் கூத்தாடினார். குடிகாரரின் வாயிலிருந்து வருகின்ற வசனங்களைக் கேட்கவும் வேண்டுமா? பேசக்கூடாத பேச்சுக்கள் அது மட்டுமல்ல எச்சிலும் பேச்சிலும் வீண்தனை அடி உதைகள் வரை வந்து வேண்டவேண்டியதாயிற்று. வேண்டத்தானே முடியும் திரும்பக் கொடுக்க முடியுமா? நடந்தவைகளைச் சொன்னால் நம்புவார்களா? உள்ளதைச் சொல்ல முடியுமா? பெண்கள் செய்யும் சிறுதவறுகள் எல்லாம் காலம் கடந்தாலும் அழியாத இன்னல்கள். கல்மேல் வரைந்த இல்லை பொறிக்கப்பட்ட எழுத்துக்கள். கடவுளின் படைப்பிலும் சிறுமாறுபாடு. ஆண்கள் செய்யும் தவறு தப்புக்கள் எல்லாம் காற்றோடு சென்றுவிடுகின்றன. கதைப்பதற்கு யாரும் இல்லை. சிரிப்பதற்கு சமுதாயம் இல்லை. மலர்விட்டு மலர் தாவும் வண்டுகள் அறியாப் பருவத்தில் செய்கின்ற தவறுகள் என்றால் வன் பெண்களிற்கு ஒரு நியதி. இதுவெல்லாம் மனச்சாட்சியற்ற இதயங்களில் இருந்து எழவேண்டிய ஓசை. மனச்சாட்சியில்லா மிருகத்தனமான மனிதர்களுடன் என்ன பேச்சு என்று எனக்கு நானே ஆறுதல் கூறவேண்டும். பெண்கள் என்றும் சுமைதாங்கிகள். பத்துமாதம் படாதபாடுபட்டுப் பெற்றெடுத்த தாய்க்குத்தான் அதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும். கணவன் மனைவியாக வாழ்ந்து எமது பரிசுப்பொருளைப் பெற்றெடுத்த பின்பும்கூட சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. "இது என்பிள்ளையில்லை"யென்று சொன்னதுமட்டுமல்ல. பிள்ளைப்பாசத்தையே மறந்துவிட்டார். அதற்கும் தனியள் ஸ்ரீதேவி என்று பட்டமும் சூட்டத்தவறவில்லை. கற்பாறையான இதயத்தின்மீது பல அலைகள் மோதினாலும் ஒன்றுமேயறியாத அந்தப் பச்சைக் குழந்தைக்காக வாழவேண்டுமென்று பிடிவாதத்தோடு இருந்தேன். அது செய்தாலும் ஒரு குற்றம் தேடிப்பிடித்து சில அடி உதைகளைத் தர அவர் என்றுமே தவறியதில்லை.

சமுதாயத்திற்கு நாம் கணவன் மனைவியாக வாழ்கின்றோம். ஆனால் என் கணவன் என்ற அந்தஸ்த்தை விடவில்லை. செய்யவேண்டிய பணிவிடைகளையும் செய்யத்தவறவில்லை. கல்லானாலும் கணவர் புல்லானாலும் புருஷன் அல்லவா? மௌனம், பொறுமை என்ற சாவிதான் என்னிடம் இருந்தது.


படிப்பகம்

padippakam

இதைப் பயன்படுத்தி இன்னும் தவறுகள்விட ஆரம்பித்துவிட்டார். உறவுக்காரப் பெண் என்றொருத்தி வந்துபோய் பின் நிரந்தரமாகத் தங்கியபோதுதான் உண்மை வெளிச்சத்திற்கு வந்து நான் மீண்டும் வீட்டில் வாழமுடியாதநிலை ஏற்பட்டது. மனைவியென்று நான் இருக்க இன்னொருத்தி வீட்டில் வந்திருந்து குடும்பம் நடத்த எந்தப் பெண் சம்மதிப்பாள். என் கணவரின் முகத்தை நான் எப்படிப் பார்க்க முடியும். என்பிள்ளை அப்பா என்று மழலைமொழியில் அழைத்தால் என்ன நாயே யென்று கூறும் மனிதரல்லவா அவர். அப்படியான சூழ்நிலையிலும் வாழ்ந்தநான் பொறுமை எல்லையைத் தாண்டிய போது என் பிறந்தவீட்டிற்கு பிள்ளையுடன் சென்றுவிட்டேன்.

என்வீட்டில் ஆரம்பத்தில் என்மேல் பரிதாபப்பட்டார்கள். ஆறுதல் கூறினார்கள். நாட்கள் பறந்து செல்ல பரிதாபமெல்லாம் பறந்தன. பின்னர் வீட்டு வேலைக்காரியாகவே வாழ்ந்தேன். எது என்ன செய்தாலும் நன்றி இல்லை.

நான் வீட்டில் வாழாவெட்டியாகவிருப்பதால் என் தங்கைகளிற்குத் திருமணம் நடக்கவில்லை என்று என்மேல் பழிச்சொல். எனக்குக் கணவருடன் வாழத்தெரியாதாம். தங்கைகள் முன்பு என்மேல் உயிரையே வைத்திருந்தார்கள். அதுமட்டுமல்ல எனக்கு அவர்கள் பயமும் கூட. இப்போது நான் எது சொன்னாலும் "செவிடன் காதில் ஊதிய சங்கு" நீ உன்வேலையைப்பார் என்று தங்கைகள் இடும் கட்டளை.

பணம், பதவி, பட்டம் இருந்தாலும் மனதில் அமைதியில்லையே. பெற்றோர் இருந்தும், இரத்தபாசம் இருந்தும் உண்மையான அன்பு இல்லையே. தன்னைத்தான் காணிக்கையாக்கினேன். கண்களிலும் இன்று ஈரம் இல்லை. என் கண்கள் கூடக் கல்லாகிவிட்டது. நடுக்கடலில் நங்கூரமின்றி காற்றடிக்கும் கப்பலானேன். நான் கரைசேர வேண்டுமென்றால் என்முடிவுதான் சரியென்று என்மனம் பறைசாற்றியது.

அன்பின் அப்பா, அம்மா தங்கைமார்களே!

நலம். நலமேபெற ஆண்டவனிடம் வேண்டுகிறேன்.

நான்பட்ட துயரம், துன்பத்திற்கு



படிப்பகம்

padippakam

எல்லையின்றி. பொறுமை, மௌனம் (கடமை, கண்ணியம், கட்டுப்பாடு) எல்லாம் ஓரளவிற்குத்தான் தாங்க முடியும். இவை எல்லைமீறியபின்புதான் நிம்மதியாக வாழவேண்டுமென்று இங்கு வந்தேன். எதிர்பார்ப்பு எல்லாம் ஏமாற்றமானது. என்னால் மற்றவர்களின் வாழ்க்கை ஒருபோதும் பாதிக்கக்கூடாது. நான் கஷ்டப்பட்டாலும் மற்றவர்களின் சந்தோசத்தில் வாழவேண்டுமென்பதுதான் என் ஆசை.

எனக்கும் கால்களும் கைகளும் உண்டு. சுயமாக என்னால் வாழமுடியும் என்ற மனத் தைரியமும் உண்டு. தற்கொலையென்ற கோழைத்தனத்தை என் பிள்ளையளவரை செய்யமாட்டேன்.

எங்கே எப்படி வாழப்போகின்றேன் என்பது எனக்கே புரியாத புதிர். நீங்கள் காட்டிய அன்பிற்கு எனது பலகோடி நன்றிகள். என் விதி எதுவோ அதன்படி நடக்கட்டும்.

இ-டு
தங்கள் மகள்
சிந்துஜா

என்று கடிதமொன்று எழுதி மேசையின் மேல் வைத்துவிட்டு என் உடுப்புக்கள் பிள்ளையின் உடுப்புக்கள் யாவற்றையும் எடுத்து சூட்கேஸ் பெட்டியில் வைத்துப் பூட்டினேன். உடைகளையும் மாற்றிமுடிய கடிகாரமும் ஐந்து தடவை சத்தத்தை எழுப்பியது. பிள்ளையைத் தோழில் போட்டுக்கொண்டு மறுகையில் சூட்கேசை எடுத்து மெதுவாகக் வெளிக்கதவைத் தாளிட்டு வெளியேறுகிறேன்.

(இன்னும் வரும்)

எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றார்
பாட்டிலே. எங்கள் மன்னர் வாழுகின்றார்
மண்ணாங்கட்டி வீட்டிலே.
இடியிடிச்சு மழை பொழிந்தால்
மன்னர் எல்லாம் ரோட்டிலே.

-கவிஞர்-



படிப்பகம்

padippakam

# சங்கீத சம்சாரம்
# தந்திடும் உபசாரம்



● தொண்டியில் சுந்தரம்

வீணையை மீட்டிடும் பூவையே நான் உன்னை மீட்டிடவா.
இசையிலே நீ பெரும் மேதை உன் அழகிலே எனக்கொரு
போதையைத் தந்திடும் கோதையே என், — போதை.
போதையில் திளைத்திட துடித்தேனே நாளும்
நிலம் பார்த்த உன் கண்கள் எனைப் பார்த்ததே
கயல் விழியாள் நீயும் என்மீது மையல் கொண்டதாலே
பலநாட்கள் பலமாதங்களாக நாமே.
உல்லாசப் பறவைகளாய் பாடித்திரிந்தோமே.
பதிவாளர் அலுவலகத்தில் சந்தித்தோமே
இல்லறத்தில் இணைந்தோமே இனிதாகவே.
ஏழு ஸ்வரங்களும் உன் இதழ் வழியாகுமே
ஏழேழு பிறவியும் என் கைகளே உனதாகுமே.
இசைமழை பொழியவே நீ செல்வாய் கச்சேரிக்கே.
சேவையைப் புரியவே நான் செல்வேன் அரசசெயலகம்
(எனும் கச்சேரிக்கே)
உன் இசையினை வரவேற்பார் கைதட்டியே.
என் சேவையை நான் செய்வேன் கைகட்டியே.
சங்கீதமே அது உன் பெருஞ் சந்தோஷமே
உன் பேரோடு நிலைத்ததோ சங்கீத பூஷணி எனும் நாமமே.
சங்கீதத்திலோ தரணி எங்கும் உன் புகழ்
சமையலிலோ. நீ மையல் கொள்ளவில்லையே
என்றும் எப்போதும் ஸ,ரி,கம,க,ம தான்
சமையலிலோ எப்போதும் கறி கம,கம,வாகவில்லையே
சங்கீத பூஷணியே
நீ சமையலில் பூஜ்யமே.


படிப்பகம்



# முகாரியில் ஒரு மோகனம்

கணபதி சுதாஜ்
கொடிகாமவூர்.

3வது அங்கம்

மரணவேகத்தில் மனதைத் திடப்படுத்திக்-கொண்டு அதில் இருந்த பேனாவை எடுத்தாள். அந்த நோட்டில் கூட ஏதோ நிறைய எழுதவேண்டும் போல அவளுக்கு ஒரு துடிப்பு. தாளை விரித்து வைத்தாள்.

padippakam

அன்பான அத்தான், சுரேன், நிர்மலா

உங்களைப் பார்க்குமுன் நான் போய்-விடுவேனோ தெரியவில்லை. நான் சின்ன வயதில் இருந்து பணம், பொருள் வசதியிருந்தும் அடுக்கடுக்காகப் பல கஷ்டங்களை அறு-வருடமாக அனுபவித்து வந்தேன். இப்போதுகூட அநாவசியமான கஷ்டம்தான். ஒவ்வொரு கஷ்டத்திலும் அத்தான் துணை நின்றதால் இதுவரை உயிர்வாழ்ந்தேன். அப்பா அம்மாவிற்கு நான் ஒரே பெண். நான் பிறந்த சில காலங்களில் அவர்கள் என்னை விட்-டுப் பிரிந்து விட்டார்கள். பின் என் சித்தப்பா எனக்கு ஆதரவு கொடுத்தார். வளர்ந்தபின்தான் தெரிந்துகொண்டேன் அவர் ஆதரவு கொடுத்தது எனக்கல்ல, என்சொத்துக்களிற்கென்று. சொத்-துக்கள் யாவற்றையும் அவர் கைக்கு எடுத்தபின்பு என்னை ஓர் செப்பு விளக்கிற்கு விலைபேசினார். உயிரைவிட கற்பைப்-பெரிதாக மதிக்கும் பரம்பரையில் பிறந்தவள் நான். எவ்வளவோ அழுது மன்றாடினேன். அடியும் உதையும்தான் கிடைத்தது. வீட்டினுள் பூட்டிவைக்கப்பட்டேன். கூண்டில் அடைக்கப்பட்ட கிளியைப்போல் சுதந்திரமின்றி கண்ணீரில் விடிவு தேடினேன். சாக்கடைதான் கிடைத்தது. விலைமகளாக ஒரு வீட்டிற்கு அனுப்ப முடிவு செய்தார்கள். விலைமகளாக வாழ்வதைவிட உயிரைவிட்டு சாவதை மேலாக நினைத்தேன். சாவதற்காக எதையும் செய்ய என்மனம் துடித்தது. உடைந்த பாலம் ஒன்றின் மேலாக கார் ஆறுதலாய்ப் போய்க்கொண்டிருந்தது. திடீரெனக் கார்க்கதவைத் திறந்து ஆற்றினில் குதித்தேன். நினைவு இழந்தேன். மீண்டும் நினைவுபெற்றபோது அத்தா-னின் மடியில் இருந்தேன். நல்லகுலத்தில் பிறந்த எனக்கு ஆண்டவன் நல்ல வாழ்க்கையைத் தந்தான். எங்கள் கல்-யாணத்திற்கு ஊரவர்கள் எதிர்த்தபோது அத்தான் என்னை ஒரு கேள்விகூடக் கேட்காது எதிர்ப்புகளைச் சமாளித்-து இன்று கல்யாணவயதில் ஒரு பையனை வளர்த்திருக்கின்-றோம். இதுவரை என் கடந்தகாலத்தைப்பற்றிக் கேட்கா-தது உங்கள் பெருந்தன்மை ஆனால் இன்று என் கடந்த காலத்தை உங்களிற்குத் தெரியப்படுத்தாமல் இருக்க முடி-யவில்லை. இந்தப் பாரத்தை இறக்கினால்தான் என்னுயிர் உடலைவிட்டுப் போகும்போலும்.

எவ்வளவோ கொடுமைக-ளையும் வசைச்சொற்களையும் கேட்டுச் சகித்த இந்த உடம்பு இன்று ஆத்திரமடைந்துவிட்டது. அதனால் மதி-யிழந்து ஒருத்தியை அடித்துவிட்டேன். எதிர்த்த அடியில் காயப்பட்டுவிட்டேன். ஒழுகிக்கொண்டிருந்த என்


படிப்பகம்

இரத்தத்தால் இந்தவூர் மண்ணை முத்தமிட்டுக் கொண்டு வந்தேன். என் மனதில் ஒரே ஆசை என்பேரப்பிள்ளையைக் கொஞ்சவேண்டும் என்பதுதான். ஆனால் அந்தவிடயத்தில் நான் தோற்றிட்ட-சாமி. என்னசெய்வது என்விதி இவ்வளவுதான் என் பேரப்பிள்ளை தவழும்போது நான் சிந்திய இரத்தம் அவனிற்கு என்னை ஞாபகப்படுத்தட்டும், என்சாவுக்குக் காரணம்......
எழுதி முடிப்பதற்குள் விதி அவள் வாழ்க்கையை முடித்துவிட்டது.

"காமாட்சியக்கா என்னதான் பெரிய பகையிருந்தாலும் லட்சுமி அத்தையை இப்படி அடித்துக் கொன்றிருக்கக் கூடாது. பாவம் அவளும் ஒரு பெண்தானே. எனக்கிந்த ஆதாரம் வரும்பொழுது மிகவும் மனவிரக்தியாக இருக்கின்றது. அந்தக்கொடுமையான சம்பவத்தை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை." என்ற சீதை கண்ணைத் துடைத்தாள்.

"இதென்ன கதையிலை ஆடு நனைகின்றதென்று ஓநாய் அழுத கதையாகவல்லவா இருக்கின்றது. லட்சுமியின் வாழ்க்கையிற்கு அன்று அவர்கள் கொடுத்தது போதாது. அவளின் வாய்க்கொழுப்பென்ன, வீராப்பென்ன [illegible] செய்துவிட்டு பத்தினிவேடம் போடப்பார்க்கிறார்கள். விடுவோமா? ஆத்திரத்தால் அடித்தார்கள் அது இப்படியாகும் என்று யார் கண்டது. அது சரியில்லை, சுரேன் உனக்கு முறைமாப்பிள்ளையாக இருக்கும்பொழுது லட்சுமி எங்கேயோ கிடந்தவனைக் கொண்டுவந்து வைத்தும் நீ அவளுக்காக கண்ணீர் விடுகிறாயே! போயிலை போய் உன் அலுவலைப்பார். தெரியவர் இதைக் கேள்விப்பட்டால் உன்னையும் கொன்றுவிடுவார். நட போகலாம்." என்று காமாட்சி இறுகிய ஒரு ஆத்தங்கரைக் கூட்டத்தைக் கலைத்துச் சென்றாள்.

"எந்தப் பிறப்பில் என்ன பாவம் செய்த தொலைத்தேனோ அதற்காக இவ்வளவு வேதனைகளும். லட்சுமி துணையிருந்த நேரம் எவ்வொரு கஷ்டத்தையும் இன்பமாக்கி அனுபவித்தேன். இப்போ அவளும் போய்ச் சேர்ந்துவிட்டாள். இனிமேல் எப்படித்தான் சமாளிக்கப்போகின்றேனோ கல்யாணத்தைப்பண்ணி சந்தோசத்தை அனுபவிக்க வேண்டிய குழந்தைகள் தத்தளித்துக் கொண்டாடுகிறார்கள். இதுதான் வாழ்க்கையா? என்று தொடர்ந்து கொண்டிருந்த தணியாசலத்திற்குச் சுருக்கென "இவ்வளவெல்லாம் எழுதிவைத்த அம்மா தன் சாவுக்கான அந்த சண்டாளனை எழுதாமல் போய்விட்டாளே. அவன் யார் என்று தெரிந்தால் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய

padippakam

முன்பு அவன் உயிரைக் குடித்திருப்பேன்" என்று முனங்கி-
றான் சுரேன்.

"அத்தான் நீங்கள் ஆத்திரத்தால் அறிவிழந்து புத்தி-
கெட்டு உண்டியல் நிறைக்கக் கூடாதென்பதற்காகத்தான் அந்த
இறைவன் அதைத் தடுத்துவிட்டான். தப்புச் செய்தவனைத்
தண்டிக்க சட்டம் இருக்கின்றது நீங்கள் அவசரப்படாதீர்கள்."
என்று ஆறுதல் கூறமுற்பட்டாள் நிர்மலா.

"நித்தமும் தனக்கு உடம்பு சரியில்லாவிட்டாலும் இறை-
வனுக்கு அழுதுபடைத்து அவன் பதம்பணியும் என் அம்மாவின்
சித்திரவதைச் சாவைத் தடுக்க அந்த ஆண்டவனுக்கு மனம்
வரவில்லை. அதை எழுதவிடாமல் தடுக்கமட்டும் எப்படி
மனம் வந்தது. உடலிலே அடிபட்டு மண்டை பிளவுபட்டு
இரத்தம் வழிய வழிய நடக்கமுடியாமல் தள்ளாடி, தவழ்ந்து
விழுந்து, உருண்டு வீடுவந்தும் வீட்டில் கட்டியவரோ, பெத்த-
பிள்ளையோ, மருமகளோ யாரும் இல்லாமல் மனவேதனை-
யால் உடல்வேதனையால் துடித்துத் துடித்து தனிமையின் கொ-
டுமையில் உயிர்விடும்போது அதைத்தடுக்க அந்த ஆண்ட-
வனால் முடியவில்லையா? அம்மா என்று உரக்கக் கத்தினான் சுரேன்.

"அத்தான் ஆவேசப்படாதீர்கள். எல்லாம் நடந்து
முடிந்துவிட்டது இனிமேல் இருந்து என்ன பண்ணுவது. ஆண்-
டவன் எம்மைப் படைக்கும்போதே எமக்கு ஏதோ எழுதி-
விடுகிறான். அதன்படிதான் நம்வாழ்க்கை நடக்கின்றது.
அதை நாம் அனுபவிக்கத்தான் வேண்டும்."

"நிர்மலா... ஆண்டவன் நமது வாழ்க்கையை
எழுதியிருக்கலாம் அதை கசப்பாகவோ அல்லது இனிப்-
பாகவோ எழுதியிருக்கலாம். அது எப்படி இருந்தாலும்
எம்மை நல்லபடியாக வாழவிடுவென்றுதானே ஆண்டவனை
வழிபாடு செய்கின்றோம். அப்படி வழிபட்டும் என் அம்மா இப்படி
வாழ்க்கைபூராவும் கஷ்டப்பட்டுப் போகும்போது கூட மரண
வேதனையை பலமடங்காக்கி அனுபவித்திருக்கிறவே. அப்படி-
யாயின் இறைவன்!...

குறுக்கிட்ட நிர்மலா "இப்பிறவிப்பிணிமட்டுமல்ல முற்பிறப்பு
வினைகூட இப்பிறப்பில் நம்மைத் தொடர்ந்து ஆட்டிவைக்-
கும். நல்ல இறைவன் நம்மை வருத்துவது கொல்லவல்ல
பொல்லாப்பிணி அகற்ற"

"அந்தப் பொல்லாப்பிணி அதோடேயே என் அம்மா
அகன்றுவிட்டாளே இது என்ன வேதாந்தம்." இடையில்
பொரிந்தான் சுரேன்.

"அத்தான் இருவருள் பெற்றுத் திருவருள் அனுபவித்தால்



படிப்பகம்

padippakam

நாம் நித்திய ஆனந்தத்தில் இருக்கலாம் இறைவனை அடைய-லாம். இருவருமே பெறுவது நாம் பிறவிகளில் செய்த நல்வினை தீவினையின் பலன்தான். மாமிகொண்ட பக்தி விசுவாசமுடையதாயின் மறுபிறவியில் மானிடனாக வந்து இருவருள் பெற்று நித்திய சந்தோசமாக இருந்து இறைபதம் பற்றுவார் என்பதில் ஐயம் இருக்காது. பிறப்பொன்று வரும்போதே இறப்பென்றொன்று இருக்கின்றதென்று நன்கு தெரிந்தும் அதைச் சந்திக்கத் திணிச்சல் இல்லாமல் நாம் தவிக்கின்றோம். எங்கள் எல்லோருடனும் மாமி முற்பிறப்புக்களில் ஏற்படுத்திய கடனைத் தீர்ப்பதற்காகத்தான் இப்பிறவியில் இவ்வளவு கஷ்டப்பட்டா. கண்டிப்பாக மறுபிறவியில் அத்தைக்கு நிகர் அத்தையேதான்" என்று கவலை மறந்து பேசிக் கொண்டிருந்தாள் நிர்மலா.

" என்னம்மா இவ்வளவு வேதனைகளையும் ஆத்திரத்தையும் அடக்கும் சக்தி உனது சொற்களிற்குண்டா?" என வியந்தார் தணியாசலம்

வேடிக்கைக்காரர்களும் கைகழுவிச் சென்றபின்னர் இவர்கள் எத்தனை நாட்களிற்குத்தான் வீட்டில் இருந்து துக்கத்தைப் பாராட்டுவது

" அத்தான் இப்படியே யோசித்துக் கொண்டிருந்தால் எப்படி? போய் வக்கீலைப் பார்த்து வாருங்களேன்" என்றாள் நிர்மலா.

"வக்கீலைப் பார்த்து என்ன பிள்ளை. முன்பெல்லாம் சட்டத்தால் நீதியைப் பெறமுடியும். இப்போ என்ன லஞ்சமும் ஊழல்களும் சட்டத்திற்கு தடம்போடுகின்றன. பொலிஸ்காரர்களும் இப்படிப்பண்ணிவிட்டார்கள். எங்கே நியாயம் கிடைக்கப் போகிறது. எதற்கும் போய்ப் பார்த்து வா" சலிப்பாக விரக்தியுடன் பேசினார் தணியாசலம். காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் சுரேன். இடையில் கார் நின்றுவிட்டது. தண்ணீர் இல்லாமல்தான் நின்றிருக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டவன் பக்கத்து வயல் கிணற்றிற்கு நீர் எடுக்கச் சென்றான்

" சுரேன் அத்தான், இப்படிக் கொஞ்சம் வாறீங்களா?" பின்பக்கமாக ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தவன் அங்கே தன் முறைப்பெண்ணை சீதை நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு நின்றான்.

" நீங்கள் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளாதது எனக்குக் கோபம் இல்லை. வாழ்க்கையில் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் நாம் இறைவனையே


படிப்பகம்

padippakam

விளக்கமாட்டோம். வாழ்க்கை அமைவதற்கும் நாம் கொடுத்து வைத்தவர்களாக இருக்க வேண்டும். அதை இருக்கட்டும் இன்று இந்தவூரே உங்களை வெறுத்து ஒதுக்கிவிட்டது. ஆனால் நான் வெறுக்கவில்லை. நான் மனிதாபிமானமும் அற்றவள் அல்ல. என்னால் உங்களை வெறுக்கவும் முடியாது. ஒன்றுசேர்ந்திருக்கவும் இந்த சமுதாயம் விடாது. இதைஉணர்ந்துகொள்ளுங்கள் நான் என்ன செய்ய முடியும். வந்ததை மறந்து எதோ பேசுகிறேன். நம்ம லட்சுமி அத்தையின் பிரிவுக்கு காரணம் எங்க அப்பாதான். இது இன்றுதான் எனக்குத் தெரியும்." என்று உரக்கக் கத்தியவள் "மனிதத் தன்மையில்லாத பித்த-லாட்டம் பிடித்த மிருகங்கள் எப்படித் தண்டிக்கப்படு-வதையிட்டும் நான் கவலைப்படமாட்டேன்." என்று விக்கி-விக்கி அழுதுகொண்டு ஓடிவிட்டாள். கண்ணீரால் புதைந்-துப்போயிருந்த சுரேனின் கண்கள் இரத்தத்தால் சிவந்-தன. விழிகள் அகல விரிந்தன, புருவம் உயர்ந்தது. தோள்கள் நிமிர்ந்தன. கரங்கள் கால்கள் என மெய்-யே துடித்தது. மதுரைவீரன்போல் விரைந்தான் ராமுவின் வீட்டிற்கு. விடையமறிந்த சீதையின் தாய் சுரேனின் காலை இறுகக்கட்டிப்பிடித்து கதறினாள். சுரேனின் முகத்-தில் கொலைவெறிக்கோரத்தைப் பார்க்கமுடியாது தவித்த சீதை மனச்சாட்சிக்கும் தந்தைமேல் கொண்ட பாசத்திற்கும் இடையில் நெருப்பில் விழுந்த புழுவைப்போல் சுரேனின் முன்னே விழுந்து துடித்தாள். என் தாலியை அறுத்துவி-டாதே என்று காலைக்கட்டினாள் சீதையின் தாய். அழு-குரலால் நிலைகுலைந்தான் சுரேன். இருப்பினும் தன்தாய் லட்சுமியை ஒருகணம் நினைத்தான். ஆவேசம் பொங்கியது எட்டிப் பாய்ந்தான். அதற்குள் பின்னால் வந்த மணியம் தனது கூரிய கட்டுக்கத்தியை வீசினார்.

(இன்னும் வரும்)

செருப்பு இல்லை என்று கவலைகொள்ளாதே!
கால் இல்லாதவனைப்பார்த்து
திருப்தி கொள்.


படிப்பகம்

# 12 ராசிகளுக்கும் புத்தாண்டு பலன்கள்

ஜோதிடமணி. மு. தனம். துரைராஜ்.

## ③ மிதுன ராசி

[மிருகசீரிடம் 3,4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதங்களில் பிறந்தவர்கள் (அ) கா, கி, கு, க, ங, ச, கே, கோ, ஹ ஆகிய எழுத்துக்களில் ஏதேனும் ஒன்றை பெயரின் முதல் எழுத்தாகப் பெற்றவர்களுக்கு]

பொதுவான பலன்கள்: வருட ஆரம்பத்தில் குரு 9லும் 2.2.87ல் குரு 10லும், வருடம் முழுவதும் சனி 6லும் ராகு கேது முறையே 10லும் 4லும் சஞ்சரிப்பார்கள்.

எதையும் சீரியசாக எடுத்துக்கொள்ளாமல் அரும்பும் புன்னகையால் மிதமாகவே சமாளித்துவிடும் மிதுன ராசி நேயர்களே! வருஷ ஆரம்பத்திலேயே சிலருக்கு பதவி உயர்வு காரணமாக இடமாற்றம் உண்டாகும்.

சிலருக்கு இதுவரை செய்துவந்த தொழிலில் புதிய முதலீடு (அ) புதிய கூட்டாளிகளின் சேர்க்கை உண்டாகும். திருமணமானவர்களுக்கு பின்பு சிலர் புதுமனை புகுவிழா செய்வர். (அ) புதியவீடு, வாகனம் வாங்க நேரிடும். சிலர் அரசு கடன் உதவியுடன் வீடு வாகன சுகம் பெறுவர்.

தாயார் உடல்நலனில் நல்ல மாற்றம் உண்டு. சித்தா ஆயுர்வேதம், ஹோமியோபதி போன்ற மருந்து உட்கொள்ளும் அன்பர்கள் உடல் நலனைப் பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை.

பூர்வீகச் சொத்துக்கள் விவகாரங்கள் ஏற்பட ஏதுவாகும். பணப்புழக்கம் மூலம் ஜீவனம் புரியும் கணக்காயர்களுக்கு ரொக்க இருப்பு பராமரிப்பில் அதிக கவனம் தேவை இல்லையேல் கையிருப்பு குறைவுபடுவதும் அதனால் தலைமறைவு ஆகுதலும் அல்லது மனைவி நகைகளை விற்று அதனை ஈடு செய்வதும் போன்றவற்றுக்கு

இலக்காக நேரிடும்.

சிலருக்கு மனைவி மக்களை பிரிந்து வாழும் நிலை-யும் (அ) வெளிநாட்டுக்குப் போகும் வாய்ப்பும் உண்டாகும்.

கல்வி பயிலும் மாணவர்களுக்கு (அ) உயர் கல்வி பெற நினைக்கும் அன்பர்க்கு அதில் தொய்வு ஏற்படும். உங்கள் மனைவிக்கு கருச்சிதைவு ஏற்படலாம். எச்சரிக்கை தேவை.

சிலருக்கு புதிய பெண்களின் பரிச்சயம் உண்டாகும். அலுவலகப் பணிபுரிவோர் (அ) ஆசிரியர் பணி புரிவோர் நிச்சயம் இந்த பலனை அடைவர்.

சத்ருக்களை எளிதில் வென்றுவிடலாம் அமைதியான மனநிலைதான் உங்களை உயர்த்துகிறது. அரசு வகை-யிலிருந்து வந்த வழக்கு வியாஜ்யங்கள் வாபஸ் ஆகும்.

சிலருக்கு சாதுக்கள், துறவிகள், மகான்கள் தொடர்பு உண்டாகும். சிலர் குலதெய்வம் இஷ்ட தெய்வம் சம்பந்-தமான சத்கர்மங்களை செய்து இறையருளைப் பெறுவர்.

போக்குவரத்து, தபால் தந்தி, சங்கீதம், மருத்துவம் ரசாயனம் போன்ற துறைகளில் பணிபுரிவோர் (அ) பயில்வோர் நல்ல ஏற்றம் காண்பர். பொதுவாக இது வதானல் முயற்சியினாலே லாபம் இறையருளினாலே சத்ரு நாசம் ஏற்படும் ஆண்டு. ***

மிருகசீரிடம் 3, 4 பாதங்கள் : தனலாபம் மிகுந்து காணப்-படும். வாரக்கடன்கள் வந்து சேரும். இல்லறத்தில் ஈடுபட்-டுள்ளோர்க்கு புதிய அறிமுகம் ஒன்று ஏற்படும். நற்பலன்கள் உண்டாகும். நெருப்பு, ஆடை, மருந்து, விறகு, வீக்கோ, கேஸ், வாகன உற்பத்தி, பராமரிப்பு, (அ) அதனை ஜீவனம் புரிவோர் ஏற்றம் காண்பர். தாயார் வகையில் மருத்துவச் செலவு பெருகும்.

திருவாதிரை: உங்கள் உத்தியோகத்தில் மேலதிகாரியா-கினால் சிற்சில இன்னல் நேரலாம். அதிக கவனம் தேவை. பேச்சைக் குறைத்து செயலில் பெருக்கினால் பிரச்சனை தீரும். நீங்கள் அடுத்த ராகு கேது மாற்றம் வரையில் பிறந்தராசியிலு ராகு காலத்தில் துர்க்கையையும், செவ்வாய் மாரியம்-மனையும் வழிபட நலம் உண்டாகும்.

போக்குவரத்து, மின்சாரம், தொலைபேசி, தபால், தந்தி டெலிபிரிண்டர், வாத்ய கருவிகள் இயக்குதல் போன்ற துறைகளில் ஈடுபடுவோர் திறமைக்கு ஏற்ப புகழ் பெறுவது உறுதி. எனினும் அடிக்கடி ஒரு 'தான்' எனும் மமதை மனதில் வந்து மயக்கும் கவனம் தேவை.

padippakam

கவனமுடன் செயல்பட்டால் உட்பகை, வெளிப்பகை எதுவும் ஒன்றும் செய்யாது.

புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள்: எதிலும் முன்னிற்கும் ஆர்வம் கொண்ட உங்கள் போக்கு உங்களுக்கு பெருமையும் புகழும் அளித்தாலும் வெளியில் கிடைக்கிற அளவுக்கு மரியாதை வீட்டில் கிடைப்பதில்லையே.

பிறர் காரியத்தில் காட்டும் அக்கறை உங்கள் சொந்த விஷயத்தில் காட்டுவதில்லை என்பதே இதற்குக் காரணம் ஆகும்.

இந்த ஆண்டு அதிகமான பிரயாண சுகம் உண்டாகும். தந்தைக்கு வைத்திய செலவு ஆகும். மனைவிக்கு கருச் சிதைவு ஏற்படலாம்.

சிலருக்கு வாகன சுகம் கிட்டும். எனினும் ஒருசிலர் பழைய வாகனத்தை வைத்துக்கொண்டு படாதபாடுபடுவதும் சிலர் அரசு கடன் உதவியுடன் புதிய வாகனம் வாங்குவதும் உண்டாகும்.

புத்திர சம்பந்தமாக கல்விச் செலவு மிகுந்து காணப்படும். சிலருக்கு தெய்வீக காரியங்களில் செலவு உண்டாகும்.

வேதபாராயணம் படித்தோர், திரையில் ஒளி நடத்துவோர், இசைக் கல்லூரியில் பணிபுரிவோர், இசையை தொழிலாக ஏற்றிருப்போர், இசைக் கருவிகளை இயக்குவோர் ஏற்றம் காண்பர்.

விவசாயத்தில் ஈடுபட்டிருப்போர்க்கு பாசன வசதி பெருகும். எள்ளு, உளுந்து, கடலை, கொள்ளு பயறு, கலப்புவகைகளில் நல்ல மகசூல் அளிக்கும்.

சுக்கிர தசா (அ) புத்தி நடப்போர்க்கு அனுகூலமான பலன்கள் நடக்கும். சனி, புதன் தசா (அ) புத்தி நடப்பவர்களுக்கு மத்திம பலன்கள் நடக்கும்.

குரு, சூரியன் சனிதசா (அ) புத்திநடப்பவர்களுக்கு அவ்வளவு அனுகூலமான பலன்கள் கூறுவதற்கு இல்லை.

பரிகாரம்: விஷ்ணு சகஸ்ர நாமம் பாராயணம் செய்து விஷ்ணு பகவானை வணங்கி வர வினைகள் அகலும். நன்மைகள் நாடிவரும். மரகதப் பச்சைக்கல் பதித்த மோதிரம் அணிய நலம்.

அதிர்ஷ்ட குறிப்புகள்:-

அதிர்ஷ்ட எண்கள் : 2, 7, 8
அதிர்ஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன், வெள்ளி
அதிர்ஷ்ட திசை : வடக்கு
அதிர்ஷ்ட தெய்வம் : விஷ்ணு


படிப்பகம்

padippakam

# ④ கடகராசி.

(புனர்பூசம் 4ம்பாதம்) பூசம், ஆயில்யம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் (அ, ஹ, ஹே, ஹோ, ட, டி, டு, டோ, கை, கோ, கௌ ஆகிய எழுத்துக்களில் ஏதேனும் ஒன்றை பெயரின் முதல் எழுத்தாக பெற்றவர்களுக்கு)

பொதுவான பலன்கள்: வருட ஆரம்பத்தில் குரு 6லும் 2.2.97ல் குரு 7லும் வருடம் முழுவதும் சனி 9லும் ராகு, கேது முறையே 9, 3லும் ஆக சஞ்சரிப்பார்கள்.

கறாரும் கண்டிப்பும் இருந்தாலும் கனிவோடு பழகும் கடகராசி அன்பர்களே! இவருக்கு வருட ஆரம்பத்திலேயே சுபவிசேஷங்கள், வீடுமாற்றம், வாகன மாற்றம் போன்ற நற்காரியங்கள் நடக்கும்.

போக்குவரத்து கழகங்களில் பணிபுரிவோர் அதிகமான பிரயாணம் (அ) அதிக வேலைப் பளுவை சந்திக்க நேரும். கடின உழைப்புத்தான் எனினும் அதிக தன லாபம் அடைவர்.

மூத்த சகோதரர் வகையில் சில அசௌகரியங்களையும் இளைய சகோதரர் வகையில் சில இன்னல்களையும் சந்திக்க வேண்டிவரும். தாயார் உடல்நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டும். மனைவியின் பேரால் செய்யப்படும் தொழில்கள் (இரும்பு, எண்ணெய், நெருப்பு சம்பந்தப்பட்டவை) லாபம் தரும்.

சிலருக்கு புத்திர வகையில் அதிக அலைச்சலும் இழப்பும் உண்டாகும். குறிப்பாக உங்கள் புத்திரர்களுக்கு படிப்பில் அதிக கவனம் தேவை இல்லையேல் தடைகள் உண்டாகலாம். அதனால் உங்கள் கோபம் பெருகும். அவருக்கு வெறுப்பை கொடுக்கும். அதனால் ஒருவர்க்கு ஒருவர் மனஸ்தாபம் பிரிவு என ஆகலாம். அது உங்கள் மன அமைதியைக் கெடுக்கும்.

எல். ஐ. சி, வணிகவரி, கிராம நிர்வாகம் போன்ற பணிகளில் ஈடுபட்டோர் ஏற்றம் காண்பர். பழைய வீடுகளில் வசிப்போர் வீட்டை பராமரித்து புதுப்பிப்பர்.

பெண்களுக்கு தாய்வீடு சுகம் கிட்டும். தாயார் வழியில் தனலாபம் உண்டாகும். அதிர்ஷ்டம் என்பது அவ்வளவு எளிதல்ல. லாட்டரி, ரேஸ் போன்றவற்றுக்கு கடன் வாங்கி செலவு செய்வீர்கள்.

அரசு அலுவலர்கள் மருத்துவ விடுப்பு எடுக்க

படிப்பகம்

padippakam

நேரிடும். அதனால் அனாவசியமான இழப்பதனை சந்திக்க நேரும். சக ஊழியரிடம் சற்று அனுசரித்து நடக்க நலம்.

பொதுவாக சொல்வதானால் சோதனையும் சாதனையும் நிறைந்த ஆண்டு மன அமைதி இல்லாமலிருக்கும். பிரதி சனியன்று சனி பகவானை வலம்வந்து வழிபட நலமுண்டு.

புனர்பூசம் 4ம்பாதம்: எதிர் நீச்சல் போட்டு புதிய முயற்சிகளை தொடரவேண்டியிருக்கும். எனினும் சோதனை மேல் சோதனையே தொடரும்.

புத்திர வகையில் செலவு மிகும். தந்தை, தாய் வழியில் விரயம் உண்டாகும். என்ஜினியரிங் இன்ஸ்பெக்டர் என்ஜினியர் போன்றோர் நல்ல உயர்வடைவர்.

அரசியல்வாதிகள் அளவுக்குமீறி பொய் பேசுவர். அதனால் கௌரவம் பாதிக்கப்படும்.

இரும்பு, பழைய இரும்பு, ஜல்லி, சரளைக்கல், பாறை வெடிவைத்து தகர்த்தல், உருக்கு உடைத்தல், பழைய வகைகள் உடைத்தல் போன்றவைகள் நல்ல லாபம் தரும். கருப்பு (அ) கள்ள மனிதரின் தொந்தரவு வந்து சேரும். எச்சரிக்கை தேவை.

பூசம்: தொழிலில் கடுமையான வேலைப்பளு கூடும். பல சரக்கு கடை, எண்ணெய்வகை வியாபாரம் செய்வோர் நல்ல லாபம் பெறுவர்.

குடிநீர் வடிகால் வாரியம், நிலத்தடி நீர் மண்வளம் பாதுகாப்பு, மண்ணுக்குள் இருக்கும் எண்ணெய் வளம் கனிமவளம் போன்ற துறைகளில் ஆராய்ச்சி செய்வோர் உயர்வு காண்பர்.

சிலர் அரசு பிடியிலிருந்து விலகி சுயதொழிலில் முனைவர். உடனிருந்தே கொல்லும் வியாதியென உங்கள் சதுரையால் வெற்றி கண்டவரே உங்களை எதிர்க்கும் நிலை உண்டாகும்.

அம்மான் வகையில் இன்னல் உண்டு. எனினும் அவர்கள் வீட்டில் சுபவிரயம் உண்டாகும். மனைவியின் உடல் நலனில் அதிக கவனம் தேவை.

ஆயில்யம்: வியாபாரிகளுக்கு நல்ல லாபம் உண்டு. கணக்கு எழுதுவோர் ஏற்றம் காண்பர். சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் பணிபுரிவோர், வருமானவரி, விற்பனை வரி துறையில் பணிபுரிவோர் ஏற்றம் காண்பர்.

பிசினஸ் மேனேஜ்மெண்ட், பப்ளிக் ரிலேஷன், டெய்ஷ்ரிவேர் டெலிபோன் ஆப்பரேட்டர் போன்றோர்கள்



படிப்பகம்

padippakam

நல்ல மாற்றம் காண்பர். பண்டிதர்கள் புலமைக்கு புகழ் உண்டு. ராகு, தானியவியாபாரம் கமிஷன்மண்டி நல்ல லாபம் தரும். கிளியரன்ஸ் ஏஜென்சி மாற்றம் தரும்.

குரு, சந்திரன், செவ்வாய் திசை (அ) புத்தி நடப்பவர்கள் நற்பலன்களை அடைவர். சனி, புதன்திசை (அ) புத்தி நடப்பவர்களுக்கு அவ்வளவு யோக பலன்கள் இல்லை.

பரிகாரம்: பிரதி திங்கள் கிழமை அம்பாளை மன உறுதியுடன் வலம் வந்து வணங்க நலம். சோமவார விரதமும், பௌர்ணமி விரதமும் நலம் தரும். இத்தோடு அமாவாசை திரயோதசி திதியும் சோமவாரமும் கூடிவரும் நாளில் சோம பிரதோஷ விரதமிருந்து அன்றுமாலை சிவாலயம் சென்று வழிபட்டால் சிவ-சக்தி அருள் கிட்டும்.

அதிர்ஷ்ட கதிர்கள் :

அதிர்ஷ்ட எண்கள்: 3, 5, 9
அதிர்ஷ்ட நாட்கள்: திங்கள், செவ்வாய், வியாழன்
அதிர்ஷ்ட திசை: வடக்கு
அதிர்ஷ்ட தெய்வம்: அம்பாள்

(இன்னும் வரும்)

"பசி வர இங்கே மாத்திரைகள்
பட்டினியால் அங்கே
யாத்திரைகள்"



படிப்பகம்

padippakam

அன்பு
வாசகர்
நெஞ்சங்களே

மரணத்தின் வாயிலில் நிற்கும் ஜனனத்தின் வாக்குமூலமாக இதை உங்களுக்கு அளிக்கிறோம்.

எமது மூன்று இதழ்களையும் உங்களைப் பூரண திருப்திப்படுத்தாவிட்டாலும் ஓரளவாவது திருப்திப் படுத்தியுள்ளோம் என்பதை உங்களது விமர்சனங்கள் மூலம் அறிந்தோம்.

எந்த விமர்சனங்களையும் எமக்கு நேரடியாக எழுதுங்கள். அதைத்தான் நாமும் வரவேற்கிறோம்.

ஜனனம் மறைந்தாலும் நிச்சயம் புதியபாலம் புரட்சிகரமாய் அமையும் அதன் இலட்சியங்கள் நிறைவேறும். எழுத்தாளன் சரித்திரம் படைக்கும் சக்தி உள்ளவன் ஜனனத்தின் மறைவு மணலில் வீடுகட்டியது போல.... என்று எண்ணி விடாதீர்கள். அது எமது மனத்தின் அடித்தளத்தில் ஆணித்தரமான அஸ்திவாரத்துடன் எழுந்தது. அந்த அஸ்திவாரத்தில் இருந்து மீண்டும் உருவானது தான் இப் புதியபாலம். அடுத்து புதியபாலம் கன்னித்திறப்புடன் அதில் நடை போட்டு வந்து உங்களை சந்திப்போம்.

ஆசிரியர்குழு

-வணக்கம்-

படிப்பகம்